கந்த பேரின்பத்தின்

# நந்தவனச் சுகந்தம்



வெளியீடு :
மன்னார் தமிழ்ச் சங்கம்

க.பேரின்பதாசன்


சுகந்தம்
க.பேரின்பதாசன்

| | |
|---|---|
| தலைப்பு | : நந்தவனச் சுகந்தம் |
| பொருள் | : கவிதை |
| ஆசிரியர் | : கந்த பேரின்பம் க.பேரின்பதாசன் |
| முகவரி | : மஞ்சவனப்பதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| முதற் பதிப்பு | : 2015 |
| பக்கங்கள் | : 149 + XXX |
| பிரதிகள் | : 500 |
| விலை | : ரூபா 350.00 |
| வெளியீடு | : மன்னார் தமிழ்ச் சங்கம் |
| அச்சுப்பதிப்பு | : "ஸ்கை" அச்சகம் மன்னார். |






## சுகந்தமாய்!

மந்த மாருதமாய் சிந்தையில் மணம் வீச
சுந்தரத் தமிழிலே விந்தையாய்க் கவிபடைத்த
எந்தை கந்தசாமியர், ஐயிரண்டு திங்களாய்
அடிவயிற்றிலே என்னைச்சுமந்திட்ட
என் தாய்பவானி தம்பதியர்
நினைவுகள் என்றும் சுகந்தமாய்!



# சமர்ப்பணம்! இது சமர்ப்பணம்!

அன்னை தமிழை நான் ஆசையாய் கற்பதற்கு
சரவணை நாகேஸ்வரி தமிழ் வித்தியாலயத்தில்
"அ" னா முதற் கொண்டு ஐந்தாம் வகுப்பு வரை
எனக்குத் தமிழ் சொன்ன என்னாசான்
**வித்துவான் பொன்னையர்**
வேலணையில் எனக்கு விருப்பமாய்க் கற்பித்த
எண் டிசையும் போற்றும் **பண்டிதர் இராசையர்**
தப்பித மில்லாமற் தமிழை
அதி அற்புதமாய் எடுத்தோதிய
**வித்துவான் நல்ல சிவப்பிரகாசம்**

முத்தமிழையும் நான் முனைப்பாய் அறிவதற்கு
முன்னின்றவன் வித்துவான் –**ஆறப்பிள்ளை**
கந்த ரோடையில் என்னைச்
சந்தமொரு தமிழ்கற்க வைத்தவன்
புங்கை நகர் **வித்துவான் ஆறுமுகனார்**
எதற்கெடுத்தாலும் இடக்காகப்பதில் சொல்வார்
"**எடுக்கேசன் சைக்கோலொஜி**"யை இதமாகக் கற்பிப்பார்
**ஆர். எஸ். என்** என்று நாம் அன்பாய் அழைத்திடும்
ஆசிரிய கலாசாலை **ஆர். எஸ். நடராசா**

சகலகலா பண்டிதர் **சைக்கோலொஜி சச்சி**(தானந்தம்)
தன்னிகரில்லா என் ஆசான்களுக்கும்
செயற்கரிய செய்த பெரியோரையெல்லாம்
சிந்தையில் நிறைவாக ஏற்றி வைத்து.
ஐயிரண்டு திங்களாய் அடிவயிற்றில் என்னைச்
சுமந்திட்ட **என்தாய் பவானிக்கும்** சந்தமிகு
கவிதைகளை விந்தையாய்
படைத்திட்டஎன் **தந்தை**
**கந்தசாமியர்க்கும்** இந்த
**கவிதைகள் சமர்ப்பணம்!**

# வெளியீட்டுரை



திருவாளர் க.பேரின்பதாசன் அவர்களின் சிந்தையில் உருவான கவிதைச் சிதறல்களை ***நந்தவனச் சுகந்தம்*** எனும் பெயரில் ஒருங்கமைத்து அச்சுவாகன மேற்றியிருக்கும் இப்பொன்னானதருணத்தில் அதை வெளியிட்டு வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

மன்னார் தமிழ்ச் சங்கமானது உருவாக்கம் பெற்றகாலந்தொட்டு பலபிரபல எழுத்தாளர்களின் படைப்புக்களையும், இன்னுமாக வளர்ந்துவரும் புதியஎழுத்தாளர்களின் படைப்புக்களையும் வெளியிட்டுவைத்து அவர்களுக்கு களமமைத்துக் கொடுத்து வருகின்றது. நமது மாவட்டத்தில் பட்டை தீட்டப்படாத இரத்தினங்களாகப் புதைந்து கிடக்கின்ற எழுத்தாளர்களின் திறமைகளை பட்டை தீட்டும் ஒருகளமாகவே எமது மன்னார் தமிழ்ச்சங்கம் திகழ்ந்து வருகின்றது.

மனிதனின் ஆயுள் மிகச்சிறியது. பிறந்தோம், வளர்ந்தோம் வாழ்ந்தோம் என்றல்லாமல் வாழும்போது சிலவற்றைச் சாதித்தோம் என எதிர்காலச் சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லக்கூடிய சில நல்ல எச்சங்களாக இத்தகைய நூல்கள் அமைகின்றன. நாம் வாழும் சமகாலப் பதிவுகளை, எமது நெஞ்சை வருடிச்சென்ற சம்பவங்களை பலவிதமான இலக்கிய நடைகளில் பதிவு செய்து அதை நூலுருவாக்குதல் என்பது எழுத்தாளர்களுக்கு ஒருசவாலாகவே இருக்கின்றது. நிதித் தேவைப்பாடு, எழுத்துப்பிரதிகளை ஒருங்கமைத்தல், தரஆய்வு, சகமனிதர்களின் உறுதுணை, அச்சேற்றல், இறுதியாக வெளியீடுசெய்தல் எனப் பலசவால்களாக அது பரிணமிக்கின்றது. இவற்றை எதிர்கொள்ளும் எம் மாவட்ட எழுத்தாளர்களுக்கு உறுதுணையாக மன்னார் தமிழ்ச்சங்கம் அவர்களுக்கான வெளீயீட்டு நிகழ்வுகளைச் செய்து கொடுக்கின்றது, அத்துடன் அதுசார் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் பலஎழுத்தாளர்கள் உருவாக்கம் பெறவேண்டும். தனியே கவிதை நூல்களுடன் நின்றுவிடாது சிறுகதை, குறுநாவல் மற்றும் நாவல் இலக்கியங்களிலும் அவர்கள் கால்பதிக்க வேண்டும் என்பதே தமிழ்ச்சங்கத்தின் அவா! இது தொடர்பில் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கு முன்பு எழும் எத்தகைய சவால்களாயினும் அதை எதிர் கொண்டு முன் செல்ல தமிழ்ச் சங்கம் தன் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க என்றும் தயாராகவே உள்ளது.

நிறைவாக இக் கவிதை நூலில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியவரே பொறுப்பாவார் எனத் தெரிவிப்பதுடன் இந்த நூல் வெளியீடு சிறப்பாக அமைய வாழ்த்தி நிறைவு செய்கின்றோம்.

**சிவஸ்ரீ மஹா.தர்மகுமாரகுருக்கள்,**
**தலைவர்,**
**மன்னார் தமிழ்ச் சங்கம்.**

**நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்**
**நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்**
**அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்**
**ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்**
**மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்**
**வாணி பூசைக் குரியவை பேசீர்**
**எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்**
**இப்பெருந் தொழில் நாட்டுவோம் வாரீர்**
*–சுப்பிரமணிய பாரதியார்–*

# கருத்துரை



'வஞ்சகமில்லாதவர்', 'அருமையானவர்', 'தங்கமானவர்', 'நம்பிக்கைக்குரியவர்' என்றுநாம் எல்லோரையும் அழைப்பதில்லை. அப்படி நாம் அழைக்கின்ற மிகச் சிலருள் திரு.பேரின்பதாசனும் ஒருவர். அரச சேவையில் பல்லாண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின்னர் 'நல்ல மனுசன்' என்ற பெயரை எல்லோரும் எடுப்பதில்லை. அணுகுமுறை, நட்புணர்வு, நம்பகத் தன்மை, கடமையுணர்வு போன்ற பல பண்புகளால் ஒருவருக்குக் கிடைப்பதே 'நல்ல மனுசன்' என்ற பெயர். அந்தப் பெயரைப் பெற்றவர்களில் ஒருவர் தான் திரு.பேரின்பதாசன்.

இவருடைய பெருந்தன்மைக்கும் பொறுப்புணர்வுக்கும் நம்பகத் தன்மைக்கும் உதாரணமாக இவருடைய சகபாடிகளின் வார்த்தைகளே சான்று பகர்கின்றன. "தன்னுடைய சம்பளப் பணத்தை போட்டும், தனது சகோதரங்களிடம் பணம் பெற்றும் சில வேளைகளில் விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்தி முடித்துள்ளார்","எத்தனை இளம் பிள்ளைகளையும் இவரை நம்பி அனுப்பி வைக்கலாம்" இவை நமக்கு இலகுவில் இவரை அடையாளம் காட்டும் வார்த்தைகளாக இருக்கின்றன.

80களின் ஆரம்பத்தில் நான் சிறு வயதுப் பாடசாலை மாணவனாக முருங்கனில் படிக்கும் காலத்தில் விளையாட்டுப் போட்டிகளின் போது இவருடைய பெயர் ஒலிபெருக்கியூடாக அடிக்கடி உச்சரிக்கப்படுவதைக் கேட்டிருக்கிறேன். மைதானத்தில் நிற்கும் இவருடன் ஒலிபெருக்கி அறிவிப்பாளர்கள் அடிக்கடி தொடர்பு கொள்வார்கள். "*Mr.Perinpathasan.. track umpires ready...* போன்ற இன்னோரன்ன வார்த்தைகள் அடிக்கடி ஒலிபெருக்கியூடாக வந்து கொண்டிருக்கும். விளையாட்டுப் போட்டியின் மூலகர்த்தாவாக, நடுநாயகமாக இவரே இருப்பார்.

ஓட்டப் பந்தயத்தின் போது ஆரம்பிப்பாளராக *(Starter)* பெரும்பாலும் இவரே இருப்பார். *"On your mark, Set, Ready, Go.."* என்ற இவரின் குரல் விளையாட்டு மைதானத்தில் ஓங்கி ஒலிக்கும். ஓட்ட வீரர்களை உற்சாகப்படுத்தும் கரகோச ஒலிகள் வானைப் பிளக்கும். ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியையும் நேர்த்தியாக, நேர்மையாக, விறுவிறுப்பாக நடத்தி முடிக்கும் சாணக்கியம் இவருக்கே உரிய கைவந்த கலை.

இவருடைய கவிதை நூல் பிரசவம் நிச்சயமாகப் பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். "பேரின்பதாசனுக்குள்ளும் இப்படி ஒரு ஆற்றலா?" என இவருடைய நெருங்கிய நண்பர்கள் மூக்கில் கைவைத்து வியக்கும் அளவுக்கு இவரிடமிருந்து கவிதை நதி பிரவாகம் எடுத்துள்ளது. ஆசிரியராகப் பணிசெய்த காலத்திலும் சரி, அதன் பின்னர் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணி செய்த காலத்திலும் சரி, கவிதைத் துறையில் நாட்டம் உள்ளவராக இவர் தன்னைக் காட்டிக் கொள்ளவே இல்லை.

இந்தக் கவிதை முயற்சி புதியன படைக்கும் இவருடைய உள்ளுணர்வின் தெளிவான வெளிப்பாடு எனலாம். "புதிதாக எதையும் முயற்சித்துப் பார்க்கும் தைரியமில்லை என்றால் நமது வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன? எந்த ஆபத்தும் இல்லாத பத்திரமான இடம்தான் வேண்டுமென்றால் பேசாமல் கல்லறையில் போய் படுத்துக் கொள்ளலாம்" என்பார் இந்திய யோகியான சற்குரு ஜக்கி வாசு தேவ்.

இவருடைய குடும்பம் - தந்தை, சகோதரர்கள் - கவிபுனையும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்துள்ளனராயினும் இவரது ஈடுபாடு உடற்கல்வியை மையப்படுத்தியதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இவருக்குள்ளே ஒரு 'கவிதை மனிதன்' பல ஆண்டுகளாக உறங்கு நிலையில் இருந்திருக்கிறான். அரச பணியிலிருந்து இவர் ஓய்வுபெற்றதன் பின்னர் அந்தக் 'கவிதை மனிதன்' வீறுகொண்டு விழித்தெழுந்து செயலாற்ற ஆரம்பித்துள்ளான். அதன் விளைவுதான் தனது ஓய்வுக்குப் பின்னரான காலப்பகுதியில் இவர் பலநூறு

கவிதைகளை எழுதிக்குவித்தமை ஆகும். இவருடைய பல கவிதைகள் இலங்கையின் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இவருடைய கவிதைகள் எளிமையானவை. பாரதியார் குறிப்பிடும் 'நவகவிதை' க்கு எடுப்பான எடுத்துக் காட்டுக்கள். ஓர் உண்மைக் கவிஞனுக்குரிய உணர்வு வெளிப்பாட்டை இவருடைய கவிதைகளில் நாம் கண்டு மகிழலாம். கோபம், ஆதங்கம், மகிழ்ச்சி, இயற்கை வனப்பில் இதயம் பறிகொடுக்கும் நிலை, இயற்கையைப் பேண வேண்டும் என்ற இதய ஆவல், அரசின் அநியாயங்களைச் சாடும் கோபக்கனல், வாழ்க்கைக்குத் தேவையான தத்துவங்கள் என பல்துறை சார்ந்த கவிதைகளை இவர் படைத்திருக்கிறார்.

இவருடைய கவிதைகளிலே பல இடங்களில் சந்தங்கள் அழகாய் அமைந்திருக்கின்றன.

நாட்டுக்கு சுதந்திரம் நாற்பத்தெட்டில்
நமக்கு சுதந்திரம் எந்த மட்டில்?

காட்டிக் கொடுக்கும் கருங்காலிக் கூட்டம்
நாட்டில் இருக்கையில் நமக்கேது சுதந்திரம்?

மூப்பின் நிஜங்களை இவர் அழகாக அடுக்கி வைக்கின்றார்.
"பாழடைந்த கோட்டையிது, பழுதடைந்த சிற்பம்
பலவயது கடந்து,பழுத்துவிட்ட ஓலை"
இந்தப் பூமியில் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிட்டு, ஏன் இந்த வேறுபாடுகள்? எனக் கடவுளிடம் கேள்வி கேட்கிறார்.

சில இடங்களில் தன்னிலை விளக்கக் கவிதைகளையும் தருகிறார். 'மதுவின் பிடியிலே' என்ற கவிதையில் மதுப் பழக்கத்தால் தன் வாழ்வு எப்படிச் சீரழிந்தது என்பதை இவர் காட்டும் போது, இவருடைய 'ஒழிவுமறைவு அற்ற' வெளிப்படைத்தன்மையை நாம் தரிசிக்க முடிகிறது.

பாரதியாரைப் போல பல சமயக் கடவுளரையும் விழித்துப் பாடும் பண்பு கொண்டவராக விளங்குகின்றார். பிறப்பால் இந்துவாக இருந்தாலும் அவர் பணி செய்தது பல் சமயச் சூழல் என்பதால் கிறிஸ்தவ, இஸ்லாமியச் சமயங்களின் பால் இவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டமை இயல்பானதே. பல இடங்களிலும் கோயில் கொண்டருளி இருக்கும் இந்துக் கடவுளரை விளித்து இவர் பல கவிதைகளை எழுதியுள்ளார். இவருடைய பல சமயக் கவிதைகளை நோக்கும் போது இவர் 'சர்வசமயவாதி' யாக நமக்குக் காட்சி தருகின்றார்.

கவிதைகளில் பல வகைகளையும் இவர் முயற்சித்துப் பார்த்துள்ளார் என்பதற்கு இவருடைய குறள் வடிவக் கவிதைகள் சான்றாகும்.

பல இடங்களில் குறிப்பட்ட கவிதை எந்தப் பத்திரிகையில், எத்தனையாம் திகதி வெளிவந்துள்ளது என்பதைக் குறித்துக் காட்டியுள்ளார்.

இவர் முழு நேரக் கவிஞராக இல்லாத நிலையில், தனது ஆர்வமேலீட்டால் கவிதைத் துறையில் கைவைத்துள்ளார். இந் நிலையில் இக் கவிதைத் தொகுப்பை "இலக்கியத் தர நிர்ணயங்களுடன்" ஆய்வு செய்வது பொருத்தமற்றது என்பதே எனது கருத்து. ஆயினும் சில விடயங்களைச் சுட்டிக் காட்டுவது இவருடைய எதிர்கால முயற்சிக்கு உதவியாக அமையும் எனக் கருதுகின்றேன்.

இந்து சமயக் கவிதைகளில் இருக்கும் சந்தம், இறுக்கம், ஓசைநயம் ஏனைய சமயக் கவிதைகளில் குறைவாகவே உள்ளதை .அவதானிக்க முடிகிறது.

கவிதையின் மகுடம்போல் அமைவது அக்குறிப்பிட்ட கவிதையின் தலைப்பு. எனவே கவிதைக்குத் தலைப்பிடும் போது அதில் அதிக கவனம் தேவைப்படுகின்றது. தலைப்பிலும் கவித்துவம் இருப்பது தேவையானது.

சில இடங்களில் வசன சாயல் தென்படுவது கவிதையின் கனதியை குறைப்பதாக உள்ளது. சுருங்கிய சொற்களில் நிறைந்த கருத்துக்களைச் சொல்வது கவிதையின் அழகை அதிகரிக்கச் செய்யும். சொற்செட்டு, இறுக்கம் போன்றவை கவிதைக்கு கனதியைக் கொடுப்பவை.

திரு. பேரின்பதாசனின் இக் கவிதை முயற்சியை பாராட்டுகின்றேன்., வாழ்த்துகின்றேன்.

**அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்,**
**முன்னாள் தலைவர்,**
**மன்னார் தமிழ்ச் சங்கம்.**

**இந்ந றுங்கனிச் சோலைகள்** செய்தல்
**இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்**
**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆல யம்பதி னாயிரம் நாட்டல்**
**பின்ன ருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்**
**அன்ன யாவினும் புண்ணியங் கோடி**
**ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்**
*-சுப்பிரமணிய பாரதியார்-*

# பாராட்டுரை

கந்த பேரின்பத்தின் நந்தவனச் சுகந்தம்! சித்தம் நிறைந்த சிவன், யேசு, அல்லா துணையாக கவிஞர் கந்தசாமி பேரின்பதாசன் (தீவான், காவலூர்க் கவிஞன்) அவர்களின் கவிதைத் தொகுதி நூலுக்கு வாழ்த்துவுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

கவிஞர், கவிதைகளுக்கு எடுத்துக்கொண்ட பாடுபொருள் பல்துறை சார்ந்ததாகவும், பன்முகப்பட்டதாகவும் பல்பரிமாணப் பண்புகளைக் கொண்டதாகவும் பரந்து பட்டு நிற்கின்றது.

குறிப்பாக தெய்வபக்தி, இயற்கை, காதல், நிலையில்லாமை, நன்றி மறவாமை, யுத்த அனர்த்தம், புலம்பெயர் அகதிவாழ்வு எனப் பாடுபொருள் விரிந்து நிற்கிறது. கவிஞரின் பழந்தமிழ் இலக்கியம் பயிற்சி மட்டுமன்றி மரபுவழிக்கவிதை, நவீனகவிதை, புதுக்கவிதை, வசனகவிதை, குறும்பா முதலியன, இலக்கிய வழிகளில் கொண்ட ஈடுபாடு என்பனவும் பளிச்சிட்டு நிற்கின்றன. மொழி, இன, மண்பற்று எம்மதமும் சம்மதம் என்பன ஆழமாக வெளிப்பட்டு இருக்கின்றது.
கவிதைக்கு இயல்பாக இருக்கவேண்டிய பொருள், ஆழம், உணர்ச்சிப் போக்கு, ஓசை, ஒத்திசைவு, நயம், கனிவு, தெளிவு, எளிமை, இனிமை முதலான பண்புகள் அமைந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். பதச் சோறாக சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

“திருக்கேதீஸ்வரத்தானே”,”தாயே உன் திருவுளமோ”,”மருதமடுத் திருப்பதியின் மாண்புமிகு தாயாரே” என்ற தொடக்கங்கள் உள்ள ஆக்கங்கள்.

“ஆக்கிரமிப்புச் சாதனமாய்” என்பதில் “அரசமரங்கள் கண்டாற் புத்தர் சிலைகளெல்லாம் அங்கொன்றாய் இங்கொன்றாய் அவசரமாய் முளைக்கிறது என்பதும்,
“புலம்பெயர் அகதி வாழ்வில் பொங்கலா”
“வள்ளுவமும் வாழ்க்கையும்”,

"இழுத்துப் போட்டாள் தாப்பாளை",
"நல்லூர் முருகன்",
"கொக்குவில்மஞ்சவனப்பதி" முருகன் மீது பாடிய பாடல்கள்

"நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்ற வசன கவிதை போன்றவை பலமுறை படித்துச் சுவைக்க வேண்டியவை.
"சந்தேகம் வந்தால் சந்தோசம் போய்விடும்"
"கோபம் என்பது பாவத்தின் விளைநிலம்"
முதலான அறிவுரைகள், தாய், தந்தை, பிறந்த மண் நாரந்தனை மீது கொண்ட பாசம், பற்று, தன்னை ஆளாக்கிய ஆசிரியப் பெருந்தகைகள் மீது கொண்ட பக்தி முதலானவை கவிஞரின் கவித்துவ ஆற்றலுக்கும் மனித நேயத்துக்கும் சான்று பகர்கின்றன.

கவிஞர் மேலும் பல படைப்புக்களை வெளியிட்டு தமிழ் அன்னைக்குப் பணியாற்ற வாழ்த்துகிறேன். இவ்வெளியீடு இலங்கைத் தமிழருக்கு மட்டுமன்றி புலம்பெயர் தமிழர்கள் வாழும்நாடுகள் எங்கும் செல்ல இறைவனை வேண்டி வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன். வளர்க கவிஞர்! வாழ்க தமிழ்.

**நாகலிங்கம் குழந்தை வேலு,**
**தமிழ்ப் பேராசான்**
**"தமிழ்க்குழந்தை"**
**கொக்குவில் மேற்கு**
**கொக்குவில்.**

> **செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
> **தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்**
> **தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**
> **சக்தி பிறக்குது மூச்சினிலே**
> -சுப்பிரமணிய பாரதியார்-

# அணிந்துரை

இலங்கை மணித் திருநாட்டின் வடபுலத்திற்கும், கிழக்கு மண்ணுக்கும் நல்லுறவுப் பாலமாக விளங்கிக் கொண்டிருக்கும் கவிஞர் கந்த பேரின்பம் "தீவான்" அவர்களின் கவிதை மழையில் நனைந்த இதமான மனோநிலையில் இவ்வணிந்துரையை என் பேனா முனை வரைகிறது.

கற்பனைத் தேரேறிய கவிஞர் தனது தாய்மொழிப் பற்றினை கவிதைச் சரங்களாய்த் தொடுத்து தமிழ் அன்னைக்கு சூட்டி மகிழும் கருத்தாழமும் சொல் அலங்காரமும் என்னைப் புல்லரிக்க வைக்கின்றன. குண்டுச் சட்டிக்குள் மட்டும் குதிரையேறிச் சவாரிக்காமல் தன் கற்பனைச் சிறகுகளை அகல விரித்து இலக்கிய இலட்சிய தாகத்துடன் கவிதை வானில் வலம்வரும் கவிஞரின் பாங்கு அலாதியானதாகும். "***எங்கே சுதந்திரம், தமிழ் எங்கள் உயிர், தை பிறந்தால், அந்த நாலு பேர், புரியாப்பாடல், தலையணை தேறும், நரகடைவர், வெள்ளியிட்டதா? வெறுங்காலா?, காலம் மாறிப் போச்சு, காதல், நோய்க்கு மருந்து, இழுத்துப் போட்டாள் தாழ்ப்பாளை ......***" போன்ற கவிதைகளில் இழையோடிக்கொண்டிருக்கின்ற யதார்த்தமும் கவித்துவச் செறிவும் வாசகர்களை வசமிழக்க வைக்கின்ற வைர வரிகள் என்பதில் ஐயமே இல்லை. "**புத்தாண்டே பூத்துப்பொலி**" என்ற கவிதையில்

***கடத்தல், கப்பம், கொலை காணாமல் போதல்,***
***சிறைகளில் அடைத்தல், சித்திரவதைகள் ...,***
***இத்தரை மீதில் இல்லாதொழிந்திடப்***
***புத்தாண்டே பூத்துப்பொலி*** என்ற வரிகளில் கவிஞர் தன் நெஞ்சச் சுமையைக் கொட்டுவதும், வரம் வேண்டி நிற்பதும்
'***பஞ்சணையில் சிலர் கொஞ்சி மகிழ்கையில்***
***துஞ்ச நிழலின்றி துக்கிப்போர் எத்தனை?'.....*** எனும் கவியடிகளும் எம்மை சிந்திக்கச் செய்கின்றன.
'***கொடுவினைகள் பொடிபடவும்***

***கொடியோராட்சி நீங்கிடவும் .........*** ' என்ற வரிகள் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் எதிர்வு கூறல்களாக அமைந்துள்ள கவிஞரின் தொலைநோக்குப் பார்வையை பாராட்டாமல் இருக்க முடியாது.

எவ்வாறாயினும் புத்தம்புதிய சவர அலகின் சிறுசிறு கீறல்களும்,சிதைவுகளும் ஆங்காங்கே தென்பட்டாலும், தீட்டத் தீட்டக் காலப்போக்கில் கூர்மையடைந்து, தமிழ் கூறும் நல்லுலகில் தனித்துவச் சிறப்பில் கவிஞரின் கவித்துவ மேதாவிலாசம் கடல் கடந்தும் ஒளி வீசும் காலம் நெருங்கிவருகிறது என்பதையே அவரின் பன்முகக் கவித்துவம் கட்டியம் கூறி நிற்கின்றது என்பதைக் காலக்கண்ணாடி நிச்சயம் காட்டும் என்பதை இவ்வணிந்துரையில் சுட்ட விழைகின்றேன்.

'தமிழின் பெருமையை, அதன் தொன்மையை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற எட்டய புரத்தாரின் இலட்சிய வேட்கை கவிஞர் "தீவான்" போன்றோரின் பங்களிப்பின் பெறுபேற்றில் தணியும். தமிழ் தலை நிமிரும்., என்ற எதிர்பார்ப்பில் மனம் நிறைவோமாக.

நன்றி.

**அன்புடன்,**
**கலாபூஷணம் ஏறாவூர் தாஹிர்.**

செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்
–திருக்குறள்–

# வாழ்த்துரை



திரு.க.பேரின்பதாசன் உதவிக்கல்விப் பணிப்பாளர் அவர்களை நான் 1998 ஆம் ஆண்டில் மன்னார் வலயக் கல்விப் பணிமனையில் கால் பதித்த வேளை தொட்டு, நான் அறிவேன். அவர்கள் மன்னார் மாவட்டத்தில் நிறைந்த பற்றுள்ளவர் என்பதை அவருடைய சேவைக் காலங்கள் எமக்கு எடுத்தியம்புகின்றன.

உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மன்னார் வலயப் படசாலை மாணவர்களின் உடற் பயிற்சி விளையாட்டுக்களில் கண்ணுங் கருத்துமாக சேவையாற்றி மாகாணம், தேசிய மட்டம் வரையும் சென்று மாணவர்கள் பதக்கங்களைப் பெற அரும்பாடு பட்டு உழைத்ததை நான் அறிந்துள்ளேன்.

சிறந்த தமிழ்ப்புலமை உள்ளவர். தனது தகப்பனாரின் வழிசென்று தானும் தனது கவித்துவத்தை வெளிக் கொண்டு வருபவர். இவர் ஆசிரியராக, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து தமிழ்ப்பற்றுடன் ஆங்கிலம் உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பெரியது.

நீண்ட காலமாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் வெளிவந்ததை நான் வாசித்திருக்கின்றேன். மடு அன்னை மீது சிறந்த பற்றுள்ளமையினால் அன்னையைப் பற்றி அழகாக எழுதியுள்ளார்.

இவர் நட்புக்கும் உதவிக்கும் இலக்கணம் வகுத்தவர். மும்மொழித் தேர்ச்சி பெற்றவர், நேர்மையாளன், சீரிய சிந்தனை படைத்தவர், எந்நேரமும் சிரித்த புன்முறுவலுடன் திகழ்பவர், சக அலுவலர்களோடு எந்நேரமும் சந்தோசமாகப் பழகுவார்.

இவரின் இறைபற்றும், தமிழ்ப் பற்றுமே இன்று இக் கவிதைப் புத்தகத்தை வெளியீடு செய்யக் காரணமாய் அமைந்தது என்று கூறலாம்.

அத்துடன் சர்வமதத்தையும் சமனாக மதிப்பவர், அவர் ஒரு இந்துவாக இருந்தாலும், இந்து சமயம், கிறீஸ்தவம்,இஸ்லாம் ஆகிய அனைத்து மதங்களுக்கும் கவிதை வடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவரின் ஆளுமையும் தோற்றமும் இலகுவில் யாரையும் கவரக் கூடியது.

எனவே உதவிக் கல்விப் பணிப்பாளர் பேரின்ப தாசன் அவர்களை வாயார வாழ்த்தி கவிதைநூல், சிறப்பாக வெளியீடு செய்ய வரம் வேண்டி யேசுவின் இறையாசி கூறி நிறைவு செய்கின்றேன்.

**திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்,**
**உதவிக்கல்விப் பணிப்பாளர், (தமிழ்)**

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமை யைக்கொ ளுத்துவோம்**
**வைய வாழ்வு தன்னில் எந்த**
**வகையி லும்ந மக்குளே**
**தாதர் என்ற நிலைமை மாறி**
**ஆண்க ளோடு பெண்களும்**
**சரிநி கர்ச மான மாக**
**வாழ்வம் இந்த நாட்டிலே**
*-சுப்பிரமணிய பாரதியார்-*

# நயப்புரை



உடற்கல்வி வித்தகன், விளையாட்டு வீரன், விகூஷமில்லா நெஞ்சினன். நண்பர்களுடன் எதுவித விகற்பமும் இன்றி சல்லாபித்து பொழுது போக்கும், கள்ளங் கபடம் அற்ற சாதாரண மனிதன். நெடிதுயர்ந்த தனது உருவம் போல தனது பதவியிலும் உயர்திறன் கொண்டவர்.

இவை தான் நான் பல்லாண்டுகளாகக் கண்டு பழகிய நண்பன் பேரின்பதாசன்!

சிலநாட்களின் முன் தற்செயலாகச் சந்தித்த போது, தான் வெளியிடவிருக்கும் இக் கவிதைத் தொகுப்பின் கையெழுத்துப் பிரதியை என்னிடம் காட்டினார். ஆர்வமேதுமின்றி அலட்சியம் காட்டக் கூடாது என்பதற்காக அதைப் பெற்றுக் கொண்ட நான் வீடு வந்த பின் அதை மறந்தே விட்டேன். இரண்டு நாட்களின் பின் ஓய்வாக இருந்த நான் இதன் ஞாபகம் வரவே வேண்டா வெறுப்பாக அதை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன்.

முதற்கவிதை வரிகளைப் படித்ததுமே மலைத்தேன். திகைத்தேன். அதிர்ச்சி, ஆச்சரியம்! வியப்பு அனைத்தும் ஒருங்கு சேர என்னிலை மறந்தேன். நான் சாதாரணமாக நினைத்துப் பழகிய இவரிடம் இத்தனை திறமைகளா? கவிதைகளைப் படித்தபோது அவற்றில் காணப்பட்ட ஆழ்ந்த கருத்து அறிவு புலமை, கருத்துச் செறிவுடன் கவிநயத்துடன் தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருந்த அழகு, அப்பப்பா! அவர் தமிழுடன் விளையாடியிருக்கிறார். சொற் சதுரங்கம் ஆடியிருக்கிறார். வெளியே அமைதியாகத் தோன்றும் ஆழ்கடல் போல மனிதத்தின் மாண்புகளை ஆழமான இறை பக்தியினை மாண்புமிக்க உயர் விழுமியங்களை தன்னுள் மறைத்து வைததிருந்ததுடன் அவற்றை எவரும் எளிதாக புரிந்து கொள்ளும்

விதத்தில் சங்ககால கவிதைகளையும் இக் காலக் கவிதை நடைகளில் கவிநயத்துடன் மனதில் பதிய வைக்கும் வகையில் சொல்லும் ஆற்றலும் வல்லமையும் இவர் பெற்றிருப்பதைக் கண்டு பூரிப்படைந்தேன். இக் கவிதைத் தொகுதியில் மனிதத்துக்குத் தேவையான எதனையும் இவர் சொல்லாமல் விடவில்லை என்றே தோன்றுகின்றது.

இறை வணக்கத்தில் மும்மறைகளின் முக்கிய மூர்த்திகளைப் போற்றிப் புகழ்ந்து சர்வ மத சமரச இணக்கப்பாட்டை எடுத்தியம்பியுள்ளார். தன் பெற்றோரையும் ஆசான்களையும் குறைவற நினைவு கூர்ந்ததன் மூலம் தம் நன்றியுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். "மனிதம்" எப்படிப்பட்டது? எப்படிப் பேணப்பட வேண்டும், எப்படி செயற்பட வேண்டும்? அது எப்படி வாழ்வாக வளம் பெறுகிறது? அது இன்றி எப்படி வாழ்வு பாழாகிறது? அதனை எப்படிச் சீர் செய்வது என்பவற்றையெல்லாம் அழகுறக் கூறியுள்ளார்.

தமிழ்ன் பெருமை இனிமை, தமிழர் வாழ்வு, அவர்தம் அவலம் குறிப்பாக இலங்கை நாட்டில் அவர்கள் படும் அவலம் எல்லாவற்றையும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

காதலை, கடிமணவாழ்வை, முதுமையின் முடிவை எல்லாரும் புரியும் வகையில் கருத்தாழமும் நகைச்சுவையும் கொண்டு வரிகளில் அழகுறப் பாடியுள்ளார்.

மொத்தத்தில் இத் தொகுப்பு மனுக் குலத்துக்குத் தேவையான படிப்பினைகளைப் போதிக்கும் ஓர் அறிவு நூலாக அமைந்து வாழும் பொக்கிஷமாக அமைந்துள்ளது எனத் துணிந்து கூறலாம். இவர் பணி மென்மேலும் தொடர இறைவன் அருள்புரிவாராக!

**நண்பன்,**
**கே.பி.சிந்தாத்திரை (J.P)**
**மன்னார்.**

# என் உள்ளத்திலிருந்து......!



கந்தசாமி, பவானி தம்பதியருக்கு மூத்தமகனாகத் தீவகத்தில் பிறந்தேன். இளையதம்பிமார் மூவர். தங்கை ஒருவர். ஆரம்பக்கல்வி சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்திலும், 6-11 வரை வேலணை மத்திய கல்லூரியிலும் க.பொ.த உயர்தரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் கல்வி கற்று மட்டக்களப்பு செங்கலடியில் திருமண பந்தத்தில் இணைந்து பத்மாவதியை கரம்பிடித்தேன்.

என் தந்தையார் ஒரு சாதாரண தொழிலாளி. ஆனாலும் கற்றவர். கவிதை பாடும் ஆற்றல் அவருக்கு இயல்பாகவே இருந்தது. இறைவன் கொடுத்த வரம் என்று கூடக் கூறலாம். அதனால் எனது உடன் பிறந்தவர்கள் நால்வருமே கவிதை எழுதும் ஆற்றலுள்ளவர்கள். விஞ்ஞான ஆசிரியரான எனது தம்பி வை.க. தவமணிதாசன் 1990ல் 'வைகை' என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். எனது முதல் கவிதை "எம் தெய்வங்கள்" எனது பெற்றோரைப் பற்றி பதினைந்து வயதிலே எழுதியது. அந்த வயதிலே அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுக் கொள்கைகளில் ஈடுபாடு ஆதலால் கடவுள் நம்பிக்கை இல்லை. "காசினியில் கடவுள் என்று யாருமில்லைக் கண்டாய்" என்று ஒரு வரி உள்ளது. அந்தக் கவிதை எனது இந்த வெளியீட்டில் இடம்பெறவில்லை.

காலம் கடந்து இந்தப் படைப்பை வெளியிடுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றை இங்கு கூற விரும்பவில்லை. எனது தந்தையாரின் நினைவாக இதை எழுதினாலும் இதைச் சமர்ப்பித்தது என் தமிழ் ஆசான்களுக்கே. என் தமிழ் அறிவுக்குக் காரணம், எனது ஆசான்களும்,எனது வாசிப்பு பழக்கமுமாகும். ஔவையாரில் தொடங்கி, கம்பர், காளமேகம், புகழேந்தியார், ஒட்டக்கூத்தர், இரட்டைப் புலவர்களும், விவேக சிந்தாமணி போன்ற நூல்களும் நான் உய்த்தறிந்து, படித்ததில் பிடித்த கவிதைப் படைப்புக்கள்.

எனது கவிதைகள் பன்முகம் கொண்டவை. எம் மதமும் சம்மதம் என்ற நிலையில் உள்ளவை, எல்லாம் கலந்த **சுவையான சாம்பாறு போன்றவை** என நான் எண்ணுகிறேன். சரி பிழைகளை எனது வாசகர்களிடம் விட்டு விடுகின்றேன். மன்னார் திருப்பதியில் இதை வெளியிடக் காரணம், நான் யாழ் தீவகத்தில் பிறந்து கல்வி கற்றாலும் எனது சேவைக்காலம் முழுவதும், எனது வசந்த காலம் எல்லாம் மன்னார் மண்ணின் கல்வித்துறையிலேயே கழிந்தது. சகலரும் என்னை அறிய வாய்ப்பைத்தந்த மண் மன்னார் மண்.

மன்னார் மாளிகைத் திடலில் எனது சொந்தங்கள் இருந்த படியால், எனது பத்து வயதிலிருந்தே பாடசாலை விடுமுறை காலங்கள் முழுவதும் மன்னார் மண்ணிலேயே கழிந்தது. எனது சேவைக்காலம் கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் என்னால் முடிந்தவரை எனது கடமையை மன்னார் மக்களுக்குச் சிறந்த முறையில் ஆற்றியுள்ளேன் என்பதில் பெருமித மடைகின்றேன் என்னை - என் திறமைகளை - வெளிக்கொணர இடமளித்த மன்னார் மடுமாதாவுக்கு என் இதய நன்றிகளைக் காணிக்கையாக்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எனது கவிதைத் தொகுதிக்கு வெளியீட்டுரை வழங்கிய தமிழ்ச் சங்கத்தின் தற்போதைய தலைவர் சிவஸ்ரீ மஹா. தர்மகுமாரகுருக்கள், கருத்துரை வழங்கிய அருட்தந்தை தமிழ்நேசன் அடிகள், தமிழ்ப்பேராசான் நா.குழந்தைவேலு (தமிழ்க் குழந்தை) கலாபூசணம் ஏறாவூர் தாஹீர், மன்னார் கல்வி வலய தமிழ் உ.க.பணிப்பாளர் திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், நண்பன் தே.பி.சிந்தாத்துரை ஜே.பி. (மன்னார் சிந்தா ) ஆகிய அனைவருக்கும் எனது உளம்கனிந்த நன்றிகள். மேலும் எனது கன்னிப்படைப்பை சிறந்த முறையில் வெளியீடு செய்து எனக்கு பெருமை சேர்த்த மன்னார் தமிழ் சங்கத்திற்கும் எனது விசேட நன்றிகள்.

அடுத்ததாக எனது நீண்டநாள் நண்பரும்,என்னுடன் கடமை புரிந்த ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர், கலாபூசணம் அ.அந்தோனிமுத்து (மன்னார் அமுது) அவர்களைப் பற்றியது. எனது இந்தக் கவிதைத் தொகுதியை வெளியிடுவதற்கு சகல துறைகளிலும் முன்னின்று உழைத்தவர் எனது நண்பர் அமுது அவர்களே!. தொகுதியை எழுதியது மட்டுமே நான். நான் முன்பு குறிப்பிட்டது போல என் மனம் போனபடி காலத்துக்குக் காலம் எழுதித் தொகுத்த கவிதைகளை தரம்பிரித்து ஒரு சில தலைப்புக்களுள் அடக்கி ஒழுங்கு படுத்தி வெளியிடுவதற்கு சகல வழிகளிலும் உதவி செய்து அதை புத்தகரூபமாகக் கொண்டுவந்தவர் எனது அருமை நண்பர் அந்தோனிமுத்து என்றால் மிகையாகாது. அவர் உடல்நலம் குன்றியிருந்தபோதும் இந்த நூல் வெளியீட்டில் அவரின் பங்கு நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதமாகும். அவருக்கு என் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டுள்ளேன்.

வீரகேசரி, உதயன், சுடர்ஒளி, தினக்குரல், தமிழ்த்தந்தி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த எனது கவிதைகளைநூலாக வெளியிடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த எனது நண்பர்கள் அனைவருக்கும் குறிப்பாக ஓய்வுபெற்ற அதிபர் திரு. தம்பித்துரை தயானந்தன் அவர்களுக்கும், எனது கவிதைகளால் ஆகர்சிக்கப்பட்ட தமிழறிஞரும், ஆசானுமாகிய அமரர்.திரு.தல்காது மொத்தம் செபஸ்தியான் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

எனது கவிதைத் தொகுதியை அழகிய முறையில் அச்சாக்கிப் பதிப்பித்த மன்னார் 'ஸ்கை'அச்சகத்தாருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள்.

**அன்புடன்**
**க.பேரின்பதாசன்**
**மஞ்சவனப்பதி, கொக்குவில் மேற்கு.**

**எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்**
**எண்ணுவம் என்ப திழுக்கு**
— திருக்குறள் —

# உள்ளே...


| | |
|---|---|
| சுகந்தமாய் | iii |
| சமர்ப்பணம் | iv |
| வெளியீட்டுரை | v |
| கருத்துரை | vii |
| பாராட்டுரை | xii |
| அணிந்துரை | xiv |
| வாழ்த்துரை | xvi |
| நயப்புரை | xviii |
| என் உள்ளத்திலிருந்து | xx |
| என் அன்னை பவானி | xxviii |


## பொதுவான பாடல்கள்


| | |
|---|---|
| 1. தமிழ் எங்கள் உயிர் | 01 |
| 2. தைத்திங்கள் | 02 |
| 3. அழகோ அழகு | 03 |
| 4. காத்திடுவாய் சோலைவனம் | 05 |
| 5. தலைசாய்த்து வணங்குகிறேன் | 06 |
| 6. புத்தாண்டே பூத்துப்பொலி | 07 |
| 7. சோவென மாரி பொழியுது | 09 |
| 8. எங்கள் ஆசான்கள் | 10 |
| 9. மிருகங்கள் நல்லவை | 12 |
| 10. அந்த நாலு பேர் | 14 |
| 11. தவறை உணர்ந்தவரே மனிதர் | 15 |
| 12. மூப்பு | 16 |
| 13. கேட்கும் பறை | 18 |
| 14. தொல்லை தரும் தொல்லை | 19 |
| 15. மாட்டேன் | 21 |

16. வண்ணத்துப் பூச்சி 22
17. எந்த நாளில் திருந்தப்போகிறார் 23
18. தத்துவமென்னடா 24
19. அரசு பிழைத்தால் 27

## சமயப்பாடல்கள்

### இந்து சமயம்

1. விநாயகர் துதி 28
2. வந்தவழி மரத்தின் 28
3. தும்பிக்கை 28
4. வாராதிடர் 29
5. மையல்கள் போக்கிடுவாய் 30
6. திருக்கேதீஸ்வரத்தானே 32
7. கதிர்காமக் கந்தையா 33
8. நல்லை நகர் வாழுகின்ற வடிவேலா 34
9. கந்தா என்றோதுவார்முன் 35
10. மஞ்சவனப் பதியானைப்பாடு 36
11. நல்லூரான் வேல் 37
12. நல்லூரின் நாயகா 39
13. வேல்கொண்டு தேரேறி வா 40

### கிறிஸ்தவ சமயம்

1. கிறிஸ்துவே உம்மை ஆராதிக்கிறேன் 41
2. யேசுவின் சிலுவை 43
3. யேசுவின் ஆட்சி 45
4. அமல மரித்தாயே 46
5. அகதியாய்ப் போனதென்ன 47
6. அன்னையே அருள் செய்வாயே 49
7. தள்ளாடி புனித அந்தோனியார் 51

## இஸ்லாமியப் பாடல்கள்


| | |
|---|---|
| 1. இஸ்லாத்தைப் போற்றுவோம் | 52 |
| 2. சுவர்க்கத்து மலர்கள் | 53 |


## நெஞ்சில் நிறைந்தவை


| | |
|---|---|
| 1. எனது தந்தையார் | 55 |
| 2. நான் பிறந்த ஊர் | 57 |
| 3. சாய்ந்து விட்டது ஓர் சகாப்தம் | 59 |
| 4. இன்னொருவன் இல்லை இனி | 60 |
| 5. சாவே உனக்கு சாவு வராதா | 61 |


## அறிவுரைகள்


| | |
|---|---|
| 1. மதுவின் பிழயிலே | 63 |
| 2. எந்நாளும் கெட்டவர் | 65 |
| 3. ஏன்என்று கேள் | 66 |
| 4. பாவத்தின் விளைநிலம் | 67 |
| 5. பாவத்தின் சம்பளம் | 68 |
| 6. புரியாப்பாடல் | 70 |
| 7. பொல்லாத நெருப்பு | 72 |
| 8. நாளை | 74 |
| 9. இறைவன் இருக்கும் பீடம் | 75 |
| 10. பாப்பாவும் பாரதியும் | 76 |
| 11. சாரதிகளுக்கோர் அறிவுரை | 78 |
| 12. இறப்பதே சிறந்தது | 79 |
| 13. குறள் கவிகள் | 80 |
| 14. தலையணை தேறும் | 83 |
| 15. புகை நமக்குப் பகை | 84 |
| 16. அகர முதல | 85 |
| 17. நரகடைவர் | 88 |
| 18. நெல்லும் பதரும் | 89 |
| 19. பெரிய பாவம் | 90 |
| 20. வேண்டும் | 92 |
| 21. மரணம் இல்லை | 93 |

## தனிப்பாடல்கள்


| | |
|---|---|
| 1. அற்பருக்கு வாழ்வு | 94 |
| 2. பன்றி பல குட்டி | 94 |
| 3. காற்றுள்ள போதே | 95 |
| 4. எட்டி பழுத்தாலும் | 95 |
| 5. தன்வினை தன்னைச் சுடும் | 96 |
| 6. கூடாச்சேர்க்கை | 96 |


## யுத்த அனர்த்தம்


| | |
|---|---|
| 1. எங்கே சுதந்திரம்? | 97 |
| 2. தை பிறந்தால்.... | 99 |
| 3. மாண்டு விட்டதிங்கே மனிதம் | 100 |
| 4. ஆங்கிரமிப்புச் சாதனமாய் | 102 |
| 5. கறுப்பு வைகாசி | 103 |
| 6. புலம்பெயர் அகதி வாழ்வில் | 105 |
| 7. வெள்ளியிட்டதா? வெறுங்காலா? | 107 |
| 8. காலம்மாறிப்போச்சு 1 | 108 |
| 9. காலம்மாறிப்போச்சு 2 | 110 |
| 10. எங்களுக்கேது தீபாவளி? | 113 |
| 11. புத்தாண்டே புதுவாழ்வு தருவாயா? | 115 |


## காதல்


| | |
|---|---|
| 1. அவள் | 117 |
| 2. எண்ணத்தில் ஈடு | 119 |
| 3. வள்ளுவமும் வாழ்க்கையும் | 120 |
| 4. நோய்க்கு மருந்து | 122 |


## நகைச்சுவை


| | |
|---|---|
| 1. நடுக்கிணற்றிலே போட்ட கல்லாச்சு | 123 |
| 2. இழுத்துப் போட்டாள் தாழ்ப்பாளை | 125 |
| 3. சட்டை | 127 |
| 4. எத்தனை மூடக்கொள்கை | 129 |

| | |
|---|---|
| 5. காறி உமிழ்வோம்! | 131 |
| 6. ஆச்சி காய்ச்சிய கூழ் | 133 |
| 7. நிலவினிற் சென்று வாழ்வோம் | 135 |
| 8. மனிதா நீ யார்? | 138 |
| 9. வரிக் கவிதைகள் | 139 |
| 10. குறும்பாக்கள் | 141 |


## பின்னிணைப்பு


| | |
|---|---|
| திருவிளையாடல் – நாடகம் | 143 – 149 |




# என் அன்னை பவானி

## அன்னையே உன்னை ஆராதிக்கின்றேன்

ஆயிரம் தெய்வங்கள் இருந்தாலும்
அவை எந்தன் அம்மாவுக்கீடாகுமா? பல்
ஆயிரம் கோடி செல்வங்கள் இருந்தாலும்
அம்மாவின் பாசத்துக் கிணையாகுமா?

ஐயிரண்டு திங்களாய் அடிவயிற்றிலே சுமந்தாய்
உதிரத்தைப் பாலாக்கி உயிர்கொடுத்தாய் அம்மா
பெற்று வளர்த்தெடுத்தாய் பேர் சூட்டி மகிழ்ந்திருந்தாய்
கண்ணுறங்காதிருந்தெம்மை கருத்தாக வாழவைத்தாய்

ஆராரோ பாடித் தாலாட்டி தூங்க வைத்தாய்
பூச்சூடி பொட்டுமிட்டு புளகாங்கிதமடைந்தாய்
"அ" னா எழுதி வைத்து அரிவரிக்கு அனுப்பி வைத்தாய்
பள்ளிக்கனுப்பி வைத்து பார்த்து மகிழ்ந்திருந்தாய்

வரும் வழியைப் பார்த்து வாசலிலே காத்து நின்றாய்
நல்லவனாய் வல்லவனாய் நானிலத்தில் வாழ வைத்தாய்
கண்கண்ட தெய்வமே கர்ப்பத்தில் சுமந்தவளே
கண்ணின் மணியாக காத்து வளர்த்தவளே

கண்டிப்பும் அன்புமாய் கவனித்துப் பார்த்தவளே
எண்ணத்தில் நிறைந்தவளே என்னருமைத் தாயாரே
அம்மாஉனை நினைக்கநெஞ்சில் ஆயிரம்பூ பூக்கிறது
வெண்ணிலாக் காய்கிறது விடிவெள்ளி தெரிகிறது.

அம்மா உன் வயிற்றில் நான் அவதரித்திடுவதற்கு
இம் மாநிலத்தில் நான் என்ன தவம் செய்தேனோ?
வையத்தில் வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே
அன்னையே உன்னை நான் ஆராதிக்கிறேன்

உதரத்திலே சுமந்து
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டி வளர்த்திட்ட உறவுக்கோர் பெட்டகமே
அன்னையே உன்னை நான் ஆராதிக்கின்றேன்.!

**தினக்குரல் 24.05.2014**

**உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண் டாகும்**
**வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்**
**கவிப்பெருக்கும் மேவு மாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்று பதவி கொள்வார்**
**தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்**
**இங்கமரர் சிறப்புக் கண்டார்**
*–சுப்பிரமணிய பாரதியார்–*

# பல்சுவைப் பாடல்கள்

# தமிழ் எங்கள் உயிர்

எங்கும் நிறைந்த தமிழ் எல்லோரும் போற்றும் தமிழ்
சங்கம் வளர்த்த தமிழ் தரணி எங்கும் தவழ்ந்த தமிழ்
மூவேந்தர் வளர்த்த தமிழ் மூவுலகம் போற்றும் தமிழ்
பாவேந்தன் பாடி வரும் பண்பான நல்ல தமிழ்!

அன்னை தமிழ், அழகு தமிழ், ஆர்வலர், போற்றும் தமிழ்
காதில் இன்பத் தேன் பாயும் கனிவான இனிய தமிழ்
கற்றோரும் மற்றோரும், கவிதை செய்யும் தூய தமிழ்
எக்காலும் எவ்வுலகும் ஏற்றம் பெறும் எங்கள் தமிழ்!

கபிலன், பரணன்,கண்அஞ்சா நக்கீரன்,
கம்பன், இளங்கோவும்,கடல் குடித்த குறுமுனியும்,
அவ்வையும், வள்ளுவனும்,ஆர்த்த சபை நூற்றெருவர்,
பேணி வளர்த்த தமிழ்,பேர் போற்றும் எங்கள் தமிழ்!

கவிதை,காவியம் கலித்துறை வெண்பா
விருத்தம், தூது, கோவை, அந்தாதி, பரணி
எல்லாம் தமிழ் எதிலும் தமிழ் அண்ட சராசர மெங்கும் தமிழ்
அந்தத் தமிழ், எங்கள் உயிர் பொங்கு தமிழ் எங்கள் வாழ்வு!

ஐம்பெரும் காப்பியங்கள், அள்ளித் தந்த அரிய தமிழ்
வேங்கைத் தமிழர்களின் வீரம் சொல்லும் சங்கத் தமிழ்
முதற் தமிழ், மூத்த தமிழ், முத்தமிழும் கொண்ட தமிழ்,
அந்தத் தமிழ், எங்கள் உயிர், இன்பத் தமிழ் எங்கள் வாழ்வு!

# தைத்திங்கள்

காங்குல் மறைந்தது காலை மலர்ந்தது
வைகறை புலர்ந்தது வையகம் மிளிர்ந்தது
பூவினம் மலர்ந்தன ஆவினம் சொரிந்தன
பூங்குயிற் கூட்டங்கள் பூபாளம் பாடின!

தவளைகள் களனியிற் சங்கீதம் பாடின
குவளைகள் குளத்தினிற் பூத்துக் குலுங்கின
ஆலய மணியின் ஓசை எழுந்தது
அந்தணர் வேத மந்திரம் ஓதினர்

வானம் பொழிந்தது பூமி விளைந்தது
வயல்களில் செந்நெற் கதிர்கள் அசைந்தன
காரிருள்கலைந்தது கதிரவன் எழுந்தனன்
போரிருள் மேகங்கள், பூமியைச் சூழ்ந்தாலும்.

பொங்கற் பானைகள் பொங்கி வழிந்தன
மங்கலமங்கையர் மனையறம் காத்தனர்
வேங்கைத் தமிழர் வீரம் விளைத்தனர்
எங்கள் பூமி எங்கும் தமிழ் மணம்!



பொங்கி நிறைந்திடப் பொங்கி வழிந்திட
தைத்திங்கள் பிறந்தது திங்கள் பிறந்தது
தமிழ்த்திரு நாளாம் தைத்திங்கள் பிறந்தது
தமிழர் மகிழ்ந்திடத் தைத்திங்கள் பிறந்தது!

வீரகேசரி 15.01.200

# அழகோ அழகு!

அழகு அழகு அகிலம் அழகு
அழகு அழகு அனைத்தும் அழகு
வைகறை அழகு கீழ்வானம் அழகு
வையகமீதில் எல்லாம் அழகு!

கன்னிப்பெண்கள் கைவண்ணம் அழகு
காலையிற் போடும் கோலம் அழகு
காலைச் சூரியன் கதிர்கள் அழகு
களனிக்குச் செல்லும் உழவர் அழகு!

வயல்கள் அழகு வரப்புக்கள் அழகு
வயல்களில் அசையும் நெற்கதிர் அழகு
வரப்பில் அலையும் உழவன் அழகு
உழவன் தோழிற் கலப்பை அழகு!



ஆலயமணியின் ஓசை அழகு
அந்தணர் ஓதும் மந்திரம் அழகு
அன்னை பாடும் தாலாட்டும் அழகு
அணைத்து மகிழும் மழலை அழகு!

மாந்தளிர் கோதும் குயில்கள் அழகு
மாதத்தில் வரும், பௌர்ணமி அழகு
அந்தி வானச் சிவப்பும் அழகு
ஆதவன் கடலில் மறைவது அழகு!


ஆடும் மயிலின் நாட்டியம் அழகு
பாடும் குயிலின் சங்கீதம் அழகு
பாயும் புலியின் வீரம் அழகு
பதுங்கும் முயலின் பயமும் அழகு!

அன்பைச் சொரியும் உள்ளம் அழகு
அள்ளிக் கொடுக்கும் கரங்கள் அழகு
ஏழைகள் சிரிப்பினில் இறைவனைக் காணும்
இல்லை யென்னா உள்ளம் அழகு!

சோலையில் மலர்க் கூட்டங்கள் அழகு
சோடியாய் வரும் காதலர் அழகு
கன்னிப் பெண்களின் கடைக்கண் அசைவில்
காளையர் மயங்கிடும் அழகோ அழகு!

கொட்டும் மழையின் சாரல் அழகு
வெட்டும் மின்னற் கீற்றும் அழகு
அடிக்கும் தென்றற் காற்றின் அசைவில்
துடிக்கும் கொடிகள் அழகோ அழகு!

புதுமை அழகு, புலமை அழகு
சத்தியம் அழகு, தமிழும் அழகு
அழகு அழகு அனைத்தும் அழகு
ஆண்டவன் படைப்பெல்லாம், அழகோ அழகு!



**தினக்குரல் 18.07.2010**

# காத்திடுவாய் சோலைவளம்!

மாலை வெய்யிற் சூரியனின்
மஞ்சள் நிறத்துக் கதிரொளியில்
ஆடிவரும் தென்றலிலே
அசைந்து நிற்கும் பூங்கொடிகள்

சலசலவென ஓடிவரும்
மலையருவி தகதகக்கும்
மலையருவிக் கரையினிலே
மந்தையெல்லாம் நீர் அருந்தும்



சோடிக் குயில் பாடலுடன்
ஆடிவரும் கான மயில்
தேடிவரும் புள்ளினங்கள்
பாடிவரும் வண்டினங்கள்

தவழ்ந்து வரும் சோடிப்புறா
தாவிச் செல்லும் குரங்கினங்கள்
பறந்து செல்லும் பறவையினம்
இயைந்து வரும் சோலைவளம்

பாய்ந்து வரும் மானினங்கள்
பயந்தொதுங்கும் சின்ன முயல்
அசைந்து வரும் யானைகளும்
இயைந்து வரும் சோலைவளம்

இயற்கை தந்த இனிய வளம்
அழிக்கிறது மனித இனம்
ஆக்குவது உனது கடன்
காத்திடுவாய் சோலைவளம்!

# தலை சாய்த்து வணங்குகிறேன்

தாய்ப்பால் கொடுப்பதினால்
தன்னழகு குலையுமென்று
"அங்கர் பிடியா புறோ"
புட்டிப் பால் கொடுக்கும்

புதுமைத் தாயார் மத்தியிலே
தான் பெற்ற செல்வத்துக்கு
தன் பாலையே கொடுத்து
தாய் சேய் உறவதனின்

தத்துவத்தை எடுத்துரைத்த
தாய்மையே உன்னை
தலைசாய்த்து வணங்குகிறேன்
வாழ்க அன்னை வளர்க அவள் பெருமை!

சுடரொளி 13.02.2013



# புத்தாண்டே பூத்துப் பொலி!

முத்தெறியும் தமிழ் மணக்கும் கடலோரப் பூமிதனில்
எத்துயருமின்றி எம் மக்கள் வாழ்ந்திடச்
சித்திரையில் வந்துதித்த தமிழோடு
புத்தாண்டே நீயும் பூத்துப்பொலி!

ஆலய மணியின் ஓசை எழுந்திட
அந்தணர் வேத மந்திரம் ஓதிட
அத்தனருளில் நம் சித்தம் திளைத்திடப்
புத்தாண்டே நீயும் பூத்துப்பொலி!

வானம் பொழிந்து பூமி விளையவும்
வையத்திலுள்ளோர் இன்புற்றிருக்கவும்
எத்துயருமின்றி எல்லோரும் வாழவும்
புத்தாண்டே நீயும் பூத்துப்பொலி!

கடத்தல், கப்பம் கொலை, காணாமற் போதல்,
சிறைகளில் அடைத்தல், சித்திரவதைகள்
இத்தரை மீதில் இல்லாதொழிந்திடப்
புத்தாண்டே நீயும் பூத்துப்பொலி!

புத்தாடை அணிந்து புன்னகை மலரவும்
போர்த்தேங்காய் அடித்து சிறிசுகள் மகிழவும்
பட்டாசு கொழுத்திப் பாலர் சிரிக்கவும்
புத்தாண்டே நீயும் பூத்துப்பொலி!

இருப்போர் கைகள் அள்ளிக்கொடுக்கவும்
இல்லாதோர் சிரிப்பினில் இறைவனைக் காணவும்
எத்தாலும் எல்லோரும் இன்புற்றிருக்கவும்
புத்தாண்டே நீயும் பூத்துப்பொலி!

**தினக்குரல் 14.04.2013**



# சோவென் மாரி மழை பொழியுது!

காற்றடிக்குது கடல் கனைக்குது
கீற்று மின்னல் வெட்டியடிக்குது
ஆற்று வெள்ளம் கரைபுரண்டோடுது
தூற்றல் மாறி மழை, சோவெனப் பெய்யுது !

அண்டம் நடுங்க, இடி இடிக்குது
ஆகாய கங்கையே, நீராகக் கொட்டுது
மலை பிளக்குது, மண் சரியுது
மாரிமழையோ, சோவெனப்பெய்யுது !

பேய்கொண்டு புயல், வீசியடிக்குது
பேரலை எழுந்து, விண்ணை இடிக்குது
கூவெனக் காற்று, கூரையைப் பிய்க்குது
சோவென மாரி, மழை பொழியுது !



ஏரிகள் தகர்ந்து, நீரலை பாயுது
எங்கணும் வெள்ளக், காடாயிருக்குது
சூறைக்காற்றோ, சுழன்றடிக்குது
சோவென மாரி, மழை பொழியுது!

மக்கள் கூட்டம், மறுகித்தவிக்குது
மரம், செடி, கொடி, எல்லாம் நடுங்குது
மண்டூகம் களனியிற், சங்கீதம் பாடுது
மாரிமழையோ, சோவெனப் பெய்யுது !

தமிழ்த்தந்தி 13.01.2013

# எங்கள் ஆசான்கள்

நூல்கள் எங்கள் ஆசான்கள்
நுண்ணறிவுடைய ஆசான்கள்
புத்தகங்கள் எம் ஆசான்கள்
வித்துவமான ஆசான்கள்
கல்விக் கண்ணைக் திறந்திடும் நல்ல
கருவூலமான ஆசான்கள்
நாடு போற்ற வாழ நமக்கு
நல்லறிவூட்டும் ஆசான்கள்!

உற்ற நண்பனாய் உயிருடன் கலந்த
உத்தமமான ஆசான்கள்
உள்ளத்திற்குள்ளே ஒளி விளக்கேற்றும்
உன்னதமான ஆசான்கள்
மனித வாழ்வை பூரணமாக்கும்
மகத்துவமான ஆசான்கள்
பகுத்தறிவுயரப் பண்பாடுயரப்
பாடம் சொல்லும் ஆசான்கள்!

பள்ளிக் கூடம் செல்லாதோர்க்கும்
பக்கத்துணை இந்த ஆசான்கள்
தனிமையைப் போக்கித் தண்ணறிவூட்டும்
தத்துவமிக்க ஆசான்கள்
கோவிக்காமற் சொல்லித் தந்திடும்
"கோட்டுப்" போட்ட ஆசான்கள்
கம்பெடுக்காமல் கற்றுக் கொடுக்கும்
கண்ணியமான ஆசான்கள்

அறியாமை இருளை அகலவிரட்டிடும்
அகல் விளக்கான ஆசான்கள்
அந்துப் பூச்சியும் அரிகறையானும்
அரித்துத் தின்ன விட்டிடாமல்
பொத்திப் பொத்திக் காத்திட வேண்டிய
புத்தகங்கள் நம் ஆசான்கள்
நூல்கள் எங்கள் ஆசான்கள்
நுண்ணறிவுடைய ஆசான்கள்!

**தினக்குரல் 01.03.2012**



# மிருகங்கள் நல்லவை

நாலுகால் மிருகங்கள் நல்லவை
நாலு காலில் நடந்தாலும்
நாசவேலை செய்யாது
ஆறறிவு மாக்கள் செய்யும்
அடாத செயல்களை
ஐந்தறிவு மிருகங்கள்
கிஞ்சித்தும் செய்யாது
சிங்கம், புலி, சிறுத்தை

தேவையின்றிக் கொல்லாது
பசி வந்தாலன்றிப்
பலி எடுக்கப் போகாது
தன் கூட்டத்தைக் கொல்லாது
தன் இனத்தைக் கெடுக்காது
காட்டிக் கொடுக்காது
கபடங்கள் செய்யாது
காட்டொழுங்கை மீறாது

வஞ்சகம், களவு, சூது
நெஞ்சத்தில் நினையாது
காமம் தலைக்கேறிக்
கற்பழித்துக் கொல்லாது
வல்லுறவு செய்யாது
வம்பு வழக்காடாது
அடுத்துக் கெடுக்காது
அழுக்காறு கொள்ளாது

கோள் சொல்லித் திரியாது
கொடும் செயல் செய்யாது
இனவாதம் பேசி வேறோர்
இனத்தை அழிக்காது
குண்டு வீசிக் கொல்லாது
கொலை வெறி கொள்ளாது
நாளைக்கு வேண்டுமென்று
சேர்த்தெதையும் வைக்காது

நல்லவர் போல் வேடமிட்டு
நம்பியோரைக் கெடுக்காது
நாலுகால் மிருகங்கள் நல்லவை
ஐந்தறிவு கொண்டவை
அநியாயம் செய்யாது
காலங்கள் கனிகையிலே
வாழ்வியலில் தடம்பதிக்கும்
நாலுகால் மிருகங்கள் நல்லவை!



# அந்த நாலு பேர்!

வீட்டில் கொண்டுவந்து சேர்த்தவர்கள் இரண்டு பேர்
காட்டில் கொண்டு போய் போட்டவர்கள் நாலு பேர்
அந்த நாலு பேரும் இல்லாவிட்டால் உந்தன் கூடு
நடுத்தெருவிலே கிடக்கும் எண்ணிப்பாரு !

எட்டடுக்கு மாளிகையை கட்டி வைத்தவன், அவனும்
எட்டடி மண்ணுக்குள்ளே அடங்கி முடிந்தான்
கொட்டமெல்லாம் அடங்கிப் போன பின்னாலே
கூட்டமெங்கே நாட்டமெங்கே நீயும் எண்ணிப் பாரு !

பட்டத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டவன் கூடு
பாடையிலே போன பின்னே ஏதடா மீதி?
மண்ணுக்கும் பெண்ணுக்கும் ஆசைப்பட்டவன் மேனி
மண்ணுக்குள்ளே அடங்குவதே இயற்கையது நீதி !

வந்துலகிற் பிறக்கும் வரை அன்னைக்குப் பாரம்
வாழும்போதோ நீயும்இந்த பூமிக்குப் பாரம்
இருக்கும் வரை செய்த பாவம் மனதுக்குப் பாரம் (இல்லாது)
போகும்போது அந்த நாலு பேருக்குப் பாரம் !

இருக்கும் வரையில் தானே, உந்தனது ஆட்டம்
இல்லாமற் போன பின்னே ஏதையா கூட்டம்?
நல்லவனாய் வாழ்ந்திடுவாய் நீ இருக்கும் வரைக்கும்– அந்த
நாலு பேர்கள் போற்றுவார்கள் நீ மடிந்த போதும் !

# தவறை உணர்ந்தவரே மனிதர்

அன்பு மனம் கொண்டோர் வாழ்வில் தேவராகிறார்
ஆணவம் கொண்டலைவோர் அசுரராகிறார்
இருந்தும் இல்லையென்பார் பாவியாகிறார்
ஈகைக் குணமுள்ளவர்கள் பாரியாகிறார்

உண்மை பேசி வாழ்பவர்கள் உத்தமர்களாகிறார்
ஊருக்காக உழைப்பவர்கள் உபகாரியாகிறார்
எண்ணும் எழுத்தும் கல்லாதவர் மூடராகிறார்
ஏமாற்றி வாழ்பவர்கள் எத்தராகிறார்

ஒரு தொழிலும் செய்யாதவர் சோம்பராகிறார்
ஓடி ஓடி உழைப்பவர்கள் செல்வர் ஆகிறார்
ஐயந்திரி பறக்கற்றோர் அறிஞராகிறார்
ஔவையாரைப் படித்தவர்கள் புலவராகிறார்

அள்ளிக் கொடுத்தோரெல்லாம் வள்ளலாகிறார்
ஆண்டவனை நினைப்பவர்கள் புனிதராகிறார்
அளவோடு உண்பவர்கள் போகியாகிறார்
அளவுக்கு மிஞ்சினால் ரோகியாகிறார்



கற்றபடி ஒழுகாதார் கசடராகிறார்
கண்டபடி பேசுபவர் பேயராகிறார்
பேராசை கொண்டவர்கள் பேய்களாகிறார்
தன்னை உணரத் தவறியர் மிருகமாகிறார்.

பிறருக்காக வாழ்பவர்கள் தெய்வமாகிறார்
தவறுகளை உணர்ந்தவரே மனிதராகிறார்
நீதி நேர்மை கொண்டவர்கள் தெய்வமாகிறார்.
மனித நேயம் காப்பவர்கள் மனிதராகிறார்.

# மூப்பு

காலமெல்லாம் பணிசெய்து களைப்படைந்த கைகள்
காலவீதி நடைபயின்று ஓய்ந்து விட்ட கால்கள்
வாலிபத்தின் வலுவிழந்து வளைந்து விட்ட மேனி
வந்து விட்டதிப்போ வயது சென்று மூப்பு

பாழடைந்த கோட்டையிது பழுதடைந்த சிற்பம்
பல வயது கடந்து இப்போ பழுத்துவிட்ட ஓலை
வாலிபத்தின் மீது அந்த காலம் செய்த கோலம்
கால நேரம் வரும் போது தானே வரும் மூப்பு

காளை நிலை மாறி கனிந்த கிழமாகி
மாலைப் பொழுதாகி மங்கல் நிலவாகி
நாலுபேர்கள் சுமந்து சென்று காட்டிவிட்டு மூட்ட
காலம் செய்தது கூத்து கனிந்து வந்தது மூப்பு

அன்று புது மொட்டு இன்றுலர்ந்த சருகு
அன்று மலர்த்தோட்டம் இன்று வற்றல்காடு
சென்று போன மிடுக்கு வந்ததிந்தத் தளர்வு
நின்று விடும் மூச்சு இன்று வந்தது மூப்பு

கை கால்கள் நடுங்கிக் கண்ணொளியும் மங்கிக்
காதுமந்தமாகிக் கதை புலம்பலாகி
இருமல், தும்மல், களைப்பு, இளைப்புச் சொந்தமாகி
இடுகாடு நோக்கி வரும் பாதை மூப்பு

விடலை நிலை மாறி வீழ்ந்து பட்டமேனி
கிடுகிடென ஆடி உதிர்ந்து விட்ட பற்கள்
சென்று போனது மிடுக்கு வந்த திந்தத் தளர்வு
நின்றுவிடும் மூச்சு இன்று வந்தது மூப்பு

இளமையது மாறி இழிந்து விட்டமேனி
இடையில் அது கூடிக் களித்தவைகள் கோடி
வழமை நிலை மாறி, வயது மிகவாகி
வாழ்க்கை வண்டி ஓடிச் சேருமிடம் மூப்பு

**தினக்குரல் 01.10.2014**



# கேட்கும் பறை

வேதியர் ஓதுவது மறை
வேளாண்மை செய்யுமிடம் தறை (ரை)
தருமர் கைக்கொண்டது பொறை
தப்புச் செய்தால் வாங்குவது அறை

இல்லாமை என்பது பெரும் குறை
இலைக்கறியில் செய்வோம் வறை
வானத்தில் தெரிவது பிறை
வாளைப் பாதுகாப்பது உறை

தோணி போனாலும் இருப்பது துறை
சொல்லாமல் நீ ஓடி மறை
பாலையும் புளிக்க வைக்கும் உறை
பட்டினத்தில் தேடியலைவோம் அறை

கற்புள்ள மங்கையர்க்கு நிறை
கைதிகளைப் போடுவது சிறை
மலர்களில் வண்டு குடிப்பது நறை
மன்னர்கள் வாங்குவது திறை

மாமன் மகள் எனக்கு முறை
மழைக்குளிரில் கிடந்து செத்து விறை
பாவம் செய்தால் நெஞ்சிலது கறை
படுத்து விட்டாலோ கேட்கும் "பறை"!

# தொல்லை தரும் தொல்லை!

ஏழைக்கு வறுமை தொல்லை
கோழைக்கு வெற்றி தொல்லை
உள்ளோர்க்குப் பணமே தொல்லை
இல்லார்க்கு எல்லாம் தொல்லை

உறவுக்குக் கடனே தொல்லை
உண்மைக்குப் பொய்யே தொல்லை
மனைவிக்குக் கணவன் தொல்லை
மனதுக்குக் கவலை தொல்லை

கற்றோர்க்கு மூடர் தொல்லை
கணிகைக்குக் கற்புத் தொல்லை
கற்புக்குக் கயவர் தொல்லை
கல்விக்கு வறுமை தொல்லை

பண்புக்குப் பகட்டுத் தொல்லை
பசித்தோர்க்கு உணவு தொல்லை
இரவுக்குப் பகலே தொல்லை
இரப்போர்க்கு ஈயார் தொல்லை

பெற்றோர்க்கு பொல்லாப்பில்லை (ஏழேழ்)
பிறவிக்கும் பெரிய தொல்லை
களவுக்குக் காவல் தொல்லை
கவலைக்கு ஏது தொல்லை?

நட்புக்குப் பகைவர் தொல்லை
நல்லார்க்குப் பொல்லார் தொல்லை
**இட்டுண்டு வாழ்வார்க்கெல்லாம்**
**இதயத்தில் இல்லைத் தொல்லை**

தொல்லை தரும் தொல்லை எல்லாம்
துணிந்தவனுக்கென்றுமில்லை
எல்லை வகுத்து வாழ்வார்க்கு
என்றுமே இல்லைத் தொல்லை!

**தினக்குரல் 16.02.2012**



# மாட்டேன்!

அன்னை தந்தை குரு வார்த்தை தட்ட மாட்டேன்
ஆணவம் கொண்டென்றும் அலைய மாட்டேன்
இல்லையென்றிரந்து வருவோர்க்கென்றும்
இருந்தும் இல்லையென்று சொல்ல மாட்டேன்

பொய் சொல்லிப் பிறர் வாழ்வைக் கெடுக்க மாட்டேன்
புறம் பேசி எந்நாளும் வாழமாட்டேன்
வஞ்சகம் செயவாரோ டிணங்க மாட்டேன்
வாக்கியத்தில் வள்ளுவனை விஞ்சமாட்டேன்



பகிடிக்கும் பொய் தன்னைச் சொல்ல மாட்டேன்
பாவகாரியங்கள் என்றும் செய்ய மாட்டேன்
பரத்தையரின் கண் வலையிற் சிக்க மாட்டேன்
பாடுபட்டுழைக்க என்றும் தயங்க மாட்டேன்

தரையில் நான் காலால் கீற மாட்டேன்
தற்பெருமை மிகக் கொண்டு அலைய மாட்டேன்
ஓடி வரும் தண்ணீரில் உமிழ மாட்டேன்
ஊரோடு ஒத்தோட மறுக்க மாட்டேன்

பிறன் மனையை எப்போதும் தீண்டமாட்டேன்
பேராசை கொண்டென்றும் அலையமாட்டேன்
**இன்னொருவன் கற்பனையைத் திருடமாட்டேன்**
எப்போதும் மனிதனாய் வாழ மறக்க மாட்டேன்!

# வண்ணத்துப்பூச்சி

சின்னச்சின்னப் பூச்சி
சிறகடிக்கும் பூச்சி
வண்ண வண்ணப்பூச்சி
வடிவான பூச்சி

வண்ணமலரில் தேனை
உறிஞ்சி உண்ணும் பூச்சி
வண்ண வண்ணக் கோலமாய்
வடிவு காட்டும் பூச்சி

மண்ணில் அழகுப் பூச்சி
மனதைக் கவரும் பூச்சி
கண்ணைக் கவரும் பூச்சி
வண்ணத்துப் பூச்சி



பட்டுப் போன்ற சிறகடித்துப்
பறந்து செல்லும் பூச்சி
இட்டமாக யாவரும்
எண்ணி மகிழும் பூச்சி



எத்தனை வண்ணங்களில்
இந்தச் சின்னப் பூச்சி
அழகினாலே மனங்களைக்
கொள்ளை கொள்ளும் பூச்சி

சின்னச் சின்னப் பூக்களிலே
தேன் குடிக்கும் பூச்சி
வண்ண வண்ணப் பூச்சி
"வண்ணத்துப்" பூச்சி !

# எந்தநாளில் திருந்தப் போகிறார்?

வக்கிரமான விமர்சனங்களை வாழ்க்கையாக்கிறார்
வாயில் வந்தபடி பேசுவதே வழக்கமாக்கிறார்
கண்டபடிபேசிப் பேசி, கழுத்தை அறுக்கிறார்
கயவர் இவர் எந்த நாளில் திருந்தப் போகிறார்?

காசைக்கொஞ்சம் இறுக்கிப் பிடித்தாற் கஞ்சன் என்கிறார்
கையைவிட்டுச் செலவு செய்தால் ஊதாரி என்கிறார்.
அளவறிந்து பேசுவோனை ஊமை என்கிறார்.
அதிகமாகப் பேசினாலோ வாயாடிஎன்கிறார்.

வீண் வம்பை வெறுத்தவனைக் கோழை என்கிறார்
வீணர் இவரை எடுத்தெறிந்தால் விறுக்கன் என்கிறார்
பாவத்தை எதிர்த்தவனைப் பாவி என்கிறார்
பச்சைப்பிள்ளை குணமிருந்தால் அப்பாவி என்கிறார்

சேர்ந்து நடப்பவனை காக்காய் என்கிறார்
சிரித்துச் சிரித்து வாழ்பவனை “ஜோக்கர்” என்கிறார்
இரக்ககுணம் உள்ளவனை ஏமாளி என்கிறார்
ஏமாற்றி வாழ்பவனைச் சீமான் என்கிறார்

அடங்கி ஒடுங்கி இருப்பவனை அசடு என்கிறார்
ஆத்திரப்பட்டெழுந்தால் எதிரி என்கிறார்
குனியக் குனியக் குட்டுபவனை வீரன் என்கிறார்
குட்டக் குட்டக் குனிபவனை கோழை என்கிறார்

உண்மையைப் பேசினாலும் நம்ப மறுக்கிறார்
ஒதுங்கிப் போனாலும்விட மாட்டேனென்கிறார்
கண்ட படி பேசிப்பேசி கழுத்தை அறுக்கின்றார்
கயவர் இவர் எந்த நாளில் திருந்தப்போகிறார்?

**தினக்குரல் 17.05.2012**

# தத்துவமென்னடா?

விண்ணில் நீலமாய்க் கூரை அமைத்தங்கு
வண்ண மேகங்கள் உலாவர விட்டவா!
மீனின் கூட்டமாய் நட்சத்திரங்களும்
மின்னற் கீற்றையும் தான் படைத்திட்டவா!

அகிலம் என்றொரு ஆடுகளத்தினில்
ஆட உயிர்களைப் படைத்திட்ட ஆண்டவா!
எண்ணிப் படைத்திட்ட இந்த உலகினில்
எத்தனை வகைப் பேதங்கள் வைத்தனை!

பசிய சோலை, இனிய நறும்புனல்
பாடும் பூங்குயில், ஆடும் மாமயில்
சுடரும் அழகுகள் உந்தன் படைப்பினில்
சுருதி பேதமாய்ச் சிற்சில தோற்றங்கள்

பசுமைச் சோலை வளங்களைப் படைத்தவா!
பாழும் பாலை வனங்களை ஏன் செய்தாய்?
மருளும் மான்களைப் படைத்திட்ட கையினால்
கொடிய வேங்கைப் புலியையும் ஏன் செய்தாய்?

நல்ல சொர்க்கமாய் உலகைப் படைத்தவா!
நச்சு மனிதரை என் செய்யப் படைத்தனை?
வாழ மாந்தரைப் படைத்திட்ட கையினால்
வஞ்சகர் தமை என் செய்யப் படைத்தனை?

உண்டு களித்து வாழ்வோர் ஒரு புறம்
உண்ண உணவின்றி மடிவோர் மறுபுறம்
ஓடியாடிடும் சிறார் பலர் மத்தியில்
ஊன்று கோலுடன் ஒரு சிலர் ஏனடா?

பஞ்சணையிற் சிலர் கொஞ்சி மகிழ்கையில்
துஞ்ச நிழலின்றித் துக்கிப்போர் எத்தனை?
அகிலமெங்கணும் பாலிக்கும் நாயகா
ஆண்டவா உனக் கேனிந்தவஞ்சனை?

கோபுரங்கள் எத்தனை செய்தனை!
குப்பை மேட்டை ஏன் பக்கத்தில் வைத்தனை?
வாழ்வை வசந்தமாய்ச்சுவைத்தவர் எத்தனை?
வரண்டு போய் அழிந்தொழிந்தவர் எத்தனை?

மானின் பார்வை மயக்கும் மொழிகளும்
மஞ்ஞை போல் மடவார் நடமாடலும்
கூனி மற்றவன் கோலம் கெடுவதும்
கொற்றவா இதன் தத்துவமென்னடா?


மலரிருக்கும் அம்மங்கை இதயத்தில்
மயக்கும் காதலை வளர்த்தங்கு வைத்தனை!
அரவின் விடத்தைப் போல் நஞ்சை உமிழ்ந்தவள்
அன்புக் காதலை அழிக்கவும் செய்தனை.

பகுத்தறிவுள்ளோராய் ப்பார்போற்ற வாழ்வதும்
பைத்தியமாய்ச் சிலர் பற்றற்றலைதும்
படைத்தவா உந்தன் படைப்பினில் ஏனிந்தப்
பாரபட்சம் நான் அறிந்திடக் கூடுமோ?

பாரினில் வாழ்வு பசுஞ் சோலையாவதும்,
பாவப்பட்டோர் பலர் பரிதவித்திடுவதும்,
ஆறுதலற்றவர் அகதியாய் அலைவதும்
ஆண்டவா இந்த அவலம் எதற்கடா?

பேரினவாதம் பேயாட்டம் போட்டது
பிஞ்சுகளைக் கூட அஞ்சாமற் கொன்றது
நாடே பிணமலை யாகக் குவிந்தது
நாயகா! இந்த நாசம் எதற்கடா?

அமுதமாய்ச் சிலர் வாழ்வை இரசிக்கிறார்
ஆண்டவா உந்தன் கருணையைப் போற்றினேன்!
விடமதாய்ச் சிலர் வாழ்வை வெறுக்கிறார்
வித்தகா இதன் தத்துவமென்னடா?



# அரசு பிழைத்தால்

அரசு பிழைத்தால் அறம் கூற்றமாகும்
நல்லரசின்றேல் நாசம் விளையும்
தர்மம் அழியும் சத்தியம் பொய்க்கும்
தெய்வம் தண்டிக்கும் தென்றல் புயலாகும்
இயற்கை அனர்த்தத்தால் இன்னல் விளையும்
பேய்க்காற்றடிக்கும் பெருங்கடல் கனைக்கும்
பேரலை எழுந்து விண்ணை இடிக்கும்
அடைமழை பொழியும் ஆறுகள் பெருகும்

வெள்ளம் பெருகி எல்லாம் அழியும்
மண்சரிவேற்படும் மலைகள் பிளக்கும்
நிலமது நடுங்கும் எரிமலை குமுறும்
மழை பெய்யாது மண் பாலையாகும்
வயல் விளையாது வரட்சி உண்டாகும்
பசி பட்டினியால் பெரு நாசம் வரும்
பஞ்சம் எனும் பேய் தலைவிரித்தாடும்
நீதி பொய்க்கும் நேர்மை தவறும்
கப்பம் கடத்தல் கொலை தப்பாமல் நடக்கும்

கைலஞ்சம் ஊழல் கட்டியம் கூறும்
அரசன் செய் பிழை குடிகளைச் சாரும்
பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரம்
நல்லரசின்றேல் நாசம் விளையும்
அரசு பிழைத்தோர்க்கு அறம் கூற்றமாகும்.
மனித நேயம் மாண்பிழந்தோடும்
பண்பட்ட வாழ்வு பாழ்பட்டுப் போகும்.

சுடரொளி 07.10.2012

# இந்து சமயப் பாடல்கள்

## விநாயகர் துதி

நம்பிக்கையற்று நலிவுற்றிருந்த என்னை
நம்பிக்கை தருவார் எவருமில்லை என்றிருந்தேன்
எந்தக் கையெனைக் கைவிட்டாலும் முறிகண்டித்
தும்பிக்கை ஒன்றே துணை!

## வந்த வழி மரத்தின்

வந்த வழி மரத்தின் கீழ்
குந்தியிருந்தருள் செய்யும்
தொந்தி வயிற் றைந்து கரத்
தானை முகத்தானைச்
சந்ததமும் நாம் தொழுதால்
முந்திச் செய்த தீவினையால்
எந்த வினை வந்தாலும்
வந்த வினை பறந்தோடுமே – நம்
சிந்தை அருள் நிறைவாகுமே

## தும்பிக்கை



நம்பிக்கை வைத்தால் நமைக் காக்கும் தும்பிக்கை
எந்தப் பொழுதும் எமைக் காக்கும் தும்பிக்கை
மண்டலத்தில் வாழ்வோர்க்கு மகிமை தரும் தும்பிக்கை
கண்டு தொழுவோர்க்குக் கருணை செய்யும் தும்பிக்கை
துமபிக்கைப் பிள்ளையில் நம்பிக்கை வைத்திட்டால்
எந்தக் கையாலும் எமை வெல்லவே முடியாது.

# வாராதிடர்!

அன்னை உமை பெற்றானை ஆனை முகத்தானை
இன்பம் தருவானை,ஈடிணை இல்லானை
உண்மைப் பொருளானை ,ஊர் போற்றும் மெய்யானை
எலிமேல் வருவானை,ஏதிலியாய் இருப்பானை

ஒற்றைக் கொம்பானை,ஓங்கார மானானை
ஐந்து கரத்தானை ஔவைக் கருள் செய்தானை
தந்தி முகத்தானைச் சங்கரனார் மகனானை
தொந்தி வயிற்றானைத் தொங்கும் ஒரு கையானை

குந்தியிருந்தருள் செய்யும் கோலமத யானை
முந்தி வந்தருள் செய்யும் முறிகண்டி உறைவானை
தும்பிக் கையானைத் துன்பம் களைவானை
வந்த வழி மரத்தின் கீழ் குந்தியிருந்தருள்வானை

சிந்தையில் குடி கொண்ட சீறிரங்க மதயானை
ஆறுமுக வேலனின் அண்ணனாயிருப்பானை
அஞ்சலஞ்சலென்று எமைக் காத்து அருள்வானை
வாதாபி உறைவானை,வல்லபையை மணந்தானை

நெற்றிக் கண்ணானை நீண்ட துதிக் கையானை
மோனைப் பொருளானை, முக்கண்ணன் மகனானை
பானை வயிற்றானைப் பங்கஜ நிறத்தானை
ஓமெனும் பிரவணத்தின் உண்மைப் பொருளானை

மாமாங்கத்துறைவானை மாதுமையாள் மகனானை
மாலவனின் மருகனாம் மத்தகஜத்தானை
தண்டைகாற் பெரியானைத் தன் நெஞ்சிருத்திக்
கொண்டக்கால் வாரா திடர்.

## மையல்கள் போக்கிடுவாய் மயிலேறும் பெருமானே!

சிந்தையில் என்றும் அருட் செல்வம் நிறைவாகும்
கந்தனைக் கும்பிட்டால் கலிதீரும் - முன் செய்த
எந்த வினையும் இடர்பட்டு ஓடுமே (நல்லூர்க்)
கந்தா என்றோதுவார் முன்!

நல்லூரின் நாயகனே நல்லருளைத் தருபவனே!
எல்லோர்க்கும் அருள்பவனே இன்னல்கள் தீர்ப்பவனே
பொல்லாரை அழிப்பவனே புள்ளி மயில் வாகனனே!
வள்ளி தெய்வானை தன்னை வலமிடமாய்க் கொண்டவனே

சூரனை வதைத்தவனே சூழும் வினை தீர்ப்பவனே
ஆறுதலைத் தந்திடுவாய் ஆறு தலை ஆண்டவனே!
மாம் பழத்துக்காக மயிலேறிச் சென்றவனே
ஞானப்பழமாய் நின்று நானிலத்தைக் காப்பவனே

அகத்திய மாமுனிக்கு அருந் தமிழைச் சொன்னவனே
சுட்ட பழம் ஔவைக்கு இட்டமுடன் கொடுத்தவனே
பிரணவத்தினுட் பொருளைப் பிதாவுக்குச் சொன்னவனே
தகப் பன்சாமி என்ற தனிப் பெயர் பெற்றவனே

தறுதலைப் பிள்ளைகளாய் தரணியில் அலைவோரை
ஆறுதலைப் பிள்ளையாய் ஆண்டருளும் ஆறுமுகா
பழனியாண்டியாக நின்று பாலிக்கும் ஆண்டவனே
செந்தூரில் வாழும் சேவற் கொடியோனே

திருப்பரங் குன்றமதில் சிலையாய் நின்றருள்வோனே

திருத்தணிகை தன்னில் சேவிப் பார்க்கருள்வோனே
அம்மால் மருகோனே ஆதிசிவன் புத்திரனே
நல்லூரில் வாழ்ந்திடும் வெள்ளி வேலாயுதனே

மையல்கள் போக்கிடுவாய் மயிலேறும் பெருமானே

**சுடரொளி 13.08.2014**



# திருக்கேதீஸ் வரத்தானே!

ஆதி முதலானவனே, சோதி வடி வானவனே
வேத முதல்வனேவிடமுண்ட கண்டனே,
மா தொருபாகனே மா தோட்டத்துறைபவனே
தேன் பொழியும் சோலைத் திருக்கேதீஸ் வரத்தானே!

பாலாவிக் கரையிலே பள்ளி கொண்ட பெருமானே
பக்தர்களை காத்திடுவாய் பார்வதியாள் நாயகனே
ஆலமுண்ட கண்டனே, அன்பர் துயர் தீர்ப்பவனே
திரிபுர மெரித்தவனே திருக்கேதீஸ் வரத்தானே!

பித்தா, பிறைசூடி பிறப்பறுத்த பெருமானே
எத்தாலும் எம் நெஞ்சில் நீங்காப் பரம் பொருளே
பக்தர் தொழுதேற்றும் பாலாவிக் கரையினிலே
சித்தம் மகிழ வைப்பாய் திருக்கேதீஸ் வரத்தானே !

ஆறுதலைப் பிள்ளையால் ஆறுதலைத் தந்தவனே
மாறுதலைப் பிள்ளைக்கு மாங்கனி கொடுத்தவனே
மங்கை உமைபாகனே மாதுமையாள் நாயகனே
தீதறுத்து எமைக் காக்கும் திருக்கேதீஸ் வரத்தானே !

கங்காளம் அணிந்தவனே, கங்கைசடை கொண்டவனே
காலனை உதைத்துக் கண்ணால் காமனை எரித்தவனே
ஆண்டியாக நின்று அம்பலத்தாடுவோனே
தில்லையுட் கூத்தனே திருக்கேதீஸ் வரத்தானே !


வெள்ளை ஆன் எறும் விமலன் திருப்பாதம்
அல்லும் பகலும் தொழுவார் குறைதீரும்
கல்லும் கனியக் கசிந்துருகி வேண்டி நின்றால்
இல்லாமல் ஓடும் வினை !

சுடரொளி 13.05.2012

# கதிர்காமக் கந்தையா

வெற்றிவேல் வீரவேல்
வீரன்கை ஒற்றைவேல்
பற்றிப் பிடித்தாரைப்
பாதுகாக்கும் பழனிவேல்
சூரனை வதைத்த வேல்
சூழும் வினை தீர்க்கும் வேல்
ஆதி சிவன் புத்திரனாய்
அவதரித்த செந்தில் வேல்

பார் காக்கும் ஐயன்வேல்
பழ வினைகள் தீர்க்கும் வேல்
பக்தர்களைக் காத்தருளும்
பரந்தாமன் மருகன்வேல்
செந்தமிழ்க் குமரன் வேல்
சீரடியார் போற்றும்வேல்
முந்திவந்து வினை அறுக்கும்
முருகன் கை ஞானவேல்



ஆறுபடை வீடு கொண்ட
ஆறுமுகன் திருக்கை வேல்
ஆறுதலைத் தந்தருளும்
ஆறுதலை ஐயன்வேல்
வள்ளி தெய்வானை தன்னை
வலமிடமாய்க் கொண்ட வேல்
கருணையுள்ள முருக வேல்
கதிர் காமக் கந்த வேல்

**வேல் வேல் வேலையா!**
**விண்ணோர் போற்றும் வேலையா!**
**கருணை செய்வாய் முருகையா**
**கதிர்காமக் கந்தையா!**

**தினக்குரல் 29.07.2007**

# நல்லை நகர் வாழுகின்ற வடிவேலா!

நல்லை நகர் வீதி தன்னில்
நல்லருளைத் தந்து நிதம்
வல்வினைகள் போக்கிடுவாய் வடிவேலா!
தோகை மயில் மீதமர்ந்து
சூழும் வினை தீர்த்திடுவாய்
ஆதி சிவன் புத்திரனே ஆறுமுகா!



பிரணவத்தினுட் பொருளைப்
பிதாவுக் கெடுத்துரைத்துப்
பிரமனின் செருக்கறுத்த பெருமாளே!
சுட்டிப் பையனாக வந்து
சுட்ட பழம் ஔவைக்கு
இட்ட முடன் தான் கொடுத்த சிவபாலா!

சூரனை வதைத்தவனே
சூழும் வினை தீர்ப்பவனே
நாளும் எம்மைக் காத்தருள்வாய் நாயகனே!
சரவணப் பொய்கையிலே
தாமரை மலர்களின் மேல்
சற்குருவாய் அவதரித்த சண்முகனே!

மாதங்க மேனி சிவன்
மாதுங்கப் புத்திரனாய்
மானிலத்தில் அவதரித்த மால்மருகா!
ஆறுதலற்றலை வோர்க்கு
ஆறுதலைத் தந்திடுவாய்
ஆறுதலைப் பெருமானே அருள் வேலா!

வேலைக் கையிலே எடுத்து
வீரமுடன் விளையாடிச்
சூரபத் மனை அழித்த தூயவனே!
பழனி மலை மீதினிலே
பண்டாரமாக நின்று
பக்தர்களைக் காத்தருளும் பாலகனே!

அம்முருகன் பத மலரை
அன்புடனே பணிபவர்க்கு
எவ்வினையுமணுகா மற் காப்பவனே
வள்ளி தெய்வானைதனை
வலமிடமாய்க் கொண்டருளும்
நல்லை நகர் வீற்றிருக்கும் பெருமானே!

வீரகேசரி 26.08.2007

## கந்தா என்றோதுவார் முன்

சிந்தையில் என்றும்
அருட் செல்வம் நிறைவாகும்
கந்தனைக் கும்பிட்டால்
கலி தீரும் – முன் செய்த
எந்தவினையும்
இடர்பட்டு ஓடுமே
நல்லூர்க் கந்தா
என்றோதுவார் முன்!

# மஞ்ச வனப் பதியானைப்பாடு

மஞ்ச வனப்பதியில் மயிலேறி விளையாடும்
குஞ்சரி மணாளன் பதம்நாடு – அவன்
விஞ்சு புகழ் பாடிக் கூத்தாடு
தக்கத் திமி, தக்கத்திமி, தக்கத்திமி, தக்கத்திமி
தக்கத்திமி என்றே மயில் ஆடும் – சேவல்
சக்திவடி வேலா எனக் கூவும்.

அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் ஓடிவந்து
அஞ்சலஞ்சலென்று எமைக் காக்கும் – கந்தன்
மஞ்ச வனப்பதி நோய் தீர்க்கும்
சூரனை வதைத்தவனைச் சூழும் வினை தீர்ப்பவனை
நாளும் எமைக் காப்பவனை நாடு – வேலன்
ஆலயத்தில் அனுதினமும் கூடு

வள்ளி தெய்வானைதனை வலமிடமாய்க் கொண்டவனாம்
புள்ளி மயில் வாகனனைத்தேடு – அந்த
வெள்ளி வேலாயுதனைப் பாடு
கொடுவினைகள் பொடிபடவும் கொடியர் ஆட்சி நீங்கிடவும்
குமர வேலாயுதனை நாடு – குமரன்
கூர் வேலைப் புகழ்ந்து கொண்டாடு

கார்த்திகைப் பெண்களின் கைகளிற் தவழ்ந்தவனாம்
கார்த்திகேயன் அருளைப் பாடு – அவன்
கதிர்வேல் எமைக் காப்பதுகண் கூடு
தந்தைக்கு மந்திரத்தைத் தானறிந்து சொன்னவனாம்
தகப்பன் சாமி புகழ்பாடு – அந்தச்
சண்முக வேலாயுதனைக் கூடு

**கந்தப் பெருமானைப்பாடு! காவடி எடுத்து வந்து ஆடு!**
**மஞ்சவனப் பதியானைப் பாடு! தஞ்சமென அவனடியை நாடு!**

# நல்லூரான் வேல்

வெற்றிவேல் வீரவேல்
விண்ணோர் துயர் தீர்த்த வேல்
பற்றிப் பிடித்தாரைப் பாதுகாக்கும் முருகன் வேல்
வள்ளி தெய்வானை தன்னை
வலமிடமாய்க் கொண்ட வேல்
துள்ளி வந்த வினை தீர்க்கும்
சூரனை வதைத்த வேல்


ஓமெனும் பிரணவத்தை
ஓதியுணர்ந்த வேல்
ஒருவன் கை ஒற்றை வேல்
ஓங்காரச் சக்திவேல்
பிரணவத்தினுட் பொருளைப்
பிதாவுக்குச் சொன்னவேல்
பிரமனின் செருக்கறுத்த
பெருமான் கை ஞான வேல்



மாம்பழத்துக்காக
மயிலேறிச் சென்ற வேல்
ஞானப் பழமாய் நின்று
நானிலத்தைக் காக்கும் வேல்
ஆறுதலைப் பிள்ளையாய்
அவதரித்த செந்தில் வேல்
ஆறுதலைத் தந்தருளும்
ஆறுதலை ஐயன் வேல்

சிந்தையில் உறையும் வேல்
சீரடியார் போற்றும் வேல்
முந்தி வந்து வினையறுக்கும்
முருகன் கைபற்றும் வேல்
கானமயில் மீதமர்ந்து
காட்சிதரும் முருகவேல்
நம்பினோரைக் காத்தருளும்
நல்லூரான் திருக்கை வேல்!

**தினக்குரல் 03.08.2014**



# நல்லூரின் நாயகா!

நல்லூரில் வாழ்கின்ற நாயகா – எமக்கு
எல்லாமே உன் பாதம் அல்லவா?
அருள்கின்ற வேல் கொண்டு ஆடிவா – நம்
இதயத்தில் குடி கொண்ட வேல வா – முருகா
தந்தைக்கு மந்திரத்தைத் (தானறிந்து) சொன்னவா
தகப்பன் சாமி யென்றும் தனிப் பெயர் பெற்றவா
ஔவைப் பிராட்டிக்குச் சுட்ட பழம் கொடுத்தவா
ஆனை முகன் சோதரா எம் பாவம் தீர்க்கவா

மாம்பழத்துக்காக மயிலேறிச் சென்றவா
ஞானப் பழமாய் நின்று நானிலத்தைக் காத்தவா
பழனி ஆண்டியாக நின்று பாலிக்கும் ஆண்டவா
பச்சை மயில் மீது ஏறி எமை ரட்சிக்க ஓடிவா
கஞ்ச மலரில் அவதரித்தவா – அழகு
கார்த்திகைப் பெண்களின் கைகளிற்றவழ்ந்தவா
அஞ்சேல், அஞ்சேலென்று எமை ஆட்கொண்டவா
அன்னை உமைபாலகா ஆதரித்துக் காக்க வா

கந்தா, கடம்பா, கதிர்வேலவா எமைக்
காத்திட வேல் கைக் கொண்டுவா
கொடுவினைகள் பொடிபடவே ஓடிவா
குமர கோட்டத்துறை நாயகா, முருகா
வள்ளி, தெய்வானை தனை வலமிடமாய்க் கொண்டவா
துள்ளி வரும் வேல் கொண்டு வல்வினைகள் போக்கவா
புள்ளி மயில் மீதேறிப் புவனத்தைப் பாலிக்க வா
நல்லூரின் நாயகனே எந்நாளும் காக்கவா

தினக்குரல் 16.08.2012

# வேல் கொண்டு தேரேறி வா

நல்லை நகர் நாயகனே தேரேறிவா
நல்லருளைத் தந்திடவே தேரேறிவா
வள்ளி தெய்வானை தனை வலமிடமாய்க் கொண்டவனே
புள்ளி மயில் வாகனனே தேரேறிவா!
வல்லசுரர் அழிந்திடவும் வல்வினைகள் நீங்கிடவும்
வடி வேலைகைக்கொண்டு தேரேறி வா!
பொல்லாதன செய்யும் புல்லர்களை அழித்திடவே
வெள்ளிவேல் முருகா நீ தேரேறி வா!

பிரணவத்தினுட் பொருளை பிதாவுக்கெடுத் துரைத்துப்
பிரமன் செருக்கறுத்தவனே தேரேறிவா!
அகத்தியமா முனிக்கு அருந்தமிழைச் சொன்னவனே
ஆறுமுகப் பெருமானே தேரேறி வா!
அநியாய யுத்தத்தால் அகதியாய் அலைவோர்க்கு
ஆறுதலைத் தந்திடவே தேரேறி வா!
"அரசு பிழைத்தார்க்கு அறம் கூற்றம்" என்றுணர்த்த
ஆடுமயில் வாகனனே தேரேறி வா!

அகதியாய் அலைகின்ற அபலைகளைக் காத்திடவே
ஆறுமுக சாமியே வேல் கொண்டு வா!
ஆறுதலற்றலைவோர்க்கு ஆறுதலைத் தந்திடவே
ஆறுதலைச் சாமியே தேரேறிவா!
நெடியமால் மருகோனே நிட்டூரம் செய்பவரை
நீறாககி அழித்திடவே வேல் கொண்டு வா!
கொடுவினைகள் பொடிபடவும்
கொடியோரை அழித்திடவும்
குமரகோட்டத்தானே தேரேறிவா

சுட்ட பழம் அவ்வைக்கு இட்ட முடன் தான் கொடுத்த
சுட்டிப் பிள்ளை திருக்கையில் வேல் கொண்டு வா!
நல்லோரைக் காத்து நிதம் நல்லருளைத் தந்திடவே
நல்லை நகர் நாயகனே தேரேறி வா!

தினக்குரல் 05.09.2010

# கிறிஸ்தவ சமய பாடல்கள்

## கிறிஸ்துவே உம்மை ஆராதிக்கின்றோம்!

கிறிஸ்து அரசரின் கிருபை பெரிது
அவரது ஆட்சி அழிவில்லாதது
அவரது மகிமை நித்திய மானது
அனைவரும் அவரை ஆராதிப்போம்!

அவரே அமைதியின் அரசருமாவார்
அவரே அன்பின் நியதியுமானார்
இறைமகன் இயேசுவின் ஆயுதம் அன்பு
இயேசு ஒருவரே எமக்கென்றும் முன்பு

இறைவனை மறந்து விலகிப் போனதால்
சாத்தானாலே வஞ்சிக்கப்பட்டீர்
எம்குலம் காக்க மீட்பர் வந்தார்
எளிமைக் கோலமாய் மெசியா வந்தார்

மனுக்குலம் மீட்க வந்த பெருமான்
குற்றவாளியாய்ப் பிலாத்து முன் நின்றார்
தலையிலே முள்முடி சூடப்பட்டுச்
சாட்டையடியிலே உடல் புண்ணானார்

கோலைக் கையில் ஏந்திய படியே
குருதி கொட்ட வெளியே வந்தார்
பாரச் சிலுவையை முதுகிற் சுமந்தே
பாதகர் கையில் அடியும்பட்டார்

கல்வாரி மலைக்குக் கொண்டு சென்றே
சுமந்த சிலுவையில் அறையப்பட்டார்
மனுக்குலம் மீட்க வந்த பெருமான்
மனிதம் இல்லாரால் மரணமடைந்தார்!

மறுபடி உயிர்ப்பேன் என்றதன் படியே
மூன்றாம் நாளில் உயிர்த்தே எழுந்தார்.
மீட்பர் அவரே பாவிகள் நாமே
நல்லாயன் அவரே மந்தைகள் நாமே!



# இயேசுவின் சிலுவை

உலகை ஆள்பவர் இறைவன் ஒருவரே
அலகையிடம் இருந்து காப்பவர் அவரே
மகிமையோடாண்டவர் மனிதரைப் படைத்தார்
மனிதனோ பாவத்தால் துராத்மா ஆனான்

சாத்தானின் பிடியிலே தன்னை மறந்தான்
தன்னை மறந்தவன் பாவங்கள் செய்தான்
மனுக்குலம் மீண்டும் மீட்சியடையவே
மனிதனாய் இறைவன் அவதாரம் செய்தார்!

மனுக்குல மீட்புக்குச் சாட்சியாய் வந்தவர்
மனிதம் இல்லாரால் மரணம் அடைந்தார்
சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்தனர்
குருதி சிந்தி கொடுமையாய் மரித்தார்.

படைத்த இறைவனை அசட்டை செய்தனர்
இயற்கை அழுதது பிரபஞ்சம் இருண்டது
சூரியன் மறைந்தான் துயரம் சூழ்ந்தது
இறைவனை மறுதலித்து இருளில் மூழ்கினர்

மூன்றாம் நாளில் உயிர் பெற்றெழுந்து
மேதினிமீதில் மகிமையாய் வந்தார்
நன்றாய் நாமும் வாழ்ந்திடவே அவர்
நல்ல திருச்சபை நமக்குத்தந்தார்

சாபத்திலிருந்து, மனிதம் மீளவே
சர்வேசுவரனின்,தயவை நாடுங்கள்
பாவத்திலிருந்து,உலகைக் காத்திடப்
பரமண்டலத்தை,நோக்கித் துதியுங்கள்

சிலுவைப் பாடுகள் தியானிப்பீரே
சாத்தானின் பிடியில்,இருந்து விலகுவீர்
இயேசுக்கிறிஸ்துவின்,சிலுவையின் முன்னே
எல்லாப் பாவமும்,இல்லாமற் போகும்.



# இயேசுவின் ஆட்சி

எந்நாளும் சிறந்தது யேசுவின் ஆட்சி
யேசு ஒருவரே எங்களுக்கு மீட்சி
எல்லோர் மனதிலும் அவரே காட்சி
நித்தியமானது அவரது ஆட்சி !

அரசர்க் கெல்லாம் அரசர் அவரே
அவரது அரசு முடிவில்லாதது
அதிகாரம் செய்வதோ அரசர்கள் ஆட்சி
அன்பு செய்வதே மனுமகன் ஆட்சி!

வானத்தில் தோன்றும் விடிவெள்ளி யேசு!
வக்கற்றோரின் திசைகாட்டி யேசு!
பொய்மையே வாய்மையாய்க் கொண்ட இவ்வுலகில்
உண்மையைப் புடம் போட்ட உத்தமர் யேசு!

அமளி, துமளியில் ஆர்ப்பரிக்கும் உலகில்
அமைதியைப் போதித்தார் எம் பிரான்யேசு!
அடக்கு முறையினால் மிதிக்கப்படுவோர்க்கு
ஆதரவு தந்து காத்தவர் இயேசு!

ஆண்டவர் பெயரால் வந்தவர் யேசுவே!
அன்புடன், அருளும், அடைக்கலம் யேசுவே!
முதலும் முடிவுமாய் இருப்பவர் யேசுவே!
முன்னின்று எம்மைக் காப்பவர் யேசுவே!



# அமல மரித் தாயே!

கருணையுடன் நாளுந் தன் மக்களைக் காத்து நிதம்
அருள் கொடுக்கும் அன்னையாம் எங்கள்
புனிதமுள்ள மன்னார் பொற்பதியில் வீற்றிருக்கும்
மருதமடு மரியன்னையே!

வன்னிமா வட்டமதில் வளமிகுந்த மருதமடு
அன்னையவள் வீற்றிருக்கும் ஆனந்த ஆலயமாம்!
கிளிகள் கதை பேசும் மயில்கள் நடனமிடும்
இனிய எழில் கொஞ்சும் எங்கள் மருதமடு

பூங்குருவிக் கூட்டங்கள் புதிய இசைபாடும்
தேன் உண்ணும் வண்டினங்கள் சிங்காரப் பண்பாடும்
யானை, புலி, கரடி ஓடி விளையாடும்
மான்கள் மறுபுறத்தில் மருட்சியாய்த்தான் நோக்கும்

மருதமடு மாதாவின் மண்ணே மருந்தாகும்
கருணை மழை பொழியுமவள் கண் பார்வை நோய் தீர்க்கும்
அனைவரையும் ஆதரிக்கும் அன்புள்ள அன்னையவள்
கவலைகள் போக்கிடுவாள் அன்னைகன்னி மரித்தாயார்

கர்த்தராம் யேசுவின் கருணை மிக்க தாயாரே
கவலைகள் தீர்த்தெம்மைக் காத்திடுவாய் மாதாவே
செபமாலை மாதாவே திருச் செபரூபத் தாயாரே
அடைக்கலம் தந்திடுவாய் அமல மரித்தாயே!

சுடர்றோஸி 25.01.2009

# மருமாதா இடம்பெயர்ந்தபோது

# அகதியாய்ப் போனதென்ன?

மருத மடுத் திருப்பதியின்
மகிமையுள்ள தாயாரே!
இடம்பெயர்ந்து நீயிருத்தல்
இது உனது திருவுளமோ?

அகதியாய் வந்தோர்க்கும்
ஆறுதலற் றலை வோர்க்கும்
அடைக்கலம் கொடுத்தருளும்
அமலமரித் தாயாரே!

கர்த்தராம் யேசுவின்
கருணைமிக்க தாயாரே!
புனிதமுள்ள மண்ணை விட்டுப்
புலம் பெயர்ந்து போனதென்ன?

இடம் பெயர்ந்த மக்களுக்கும்
இனிய உந்தன் பக்தருக்கும்
அடைக்கலம் கொடுத்தவளே
அகதியாய்ச் சென்ற தென்ன?

அநியாய யுத்தத்தால்
அகதியான மக்களுடன்
அரும்பதியை விட்டுவிட்டு
அம்மா நீ சென்றாயே!

மருதமடு மடுப் பதியைவிட்டு
மாதரசி சென்றதினால்
மகிமையுள்ள திருப்பதியின்
மாண்பு மறைந்ததம்மா!

அன்னை நீ சென்றதனால்
அமைதியற்று வாடுகின்றோட
உந்தன் திருப்பதிக்கு
ஓடோடி வந்திடம்மா!



குண்டோசை இலாப் பதியில்
குடியிருக்க வந்திடம்மா!
சண்டைகள் இல்லாப் பதியில்
சஞ்சரிக்க வந்திடம்மா!

அகதியான (உன்) மக்களுடன்
அன்னையே நீ வந்திடம்மா!
உன் பாதம் போற்றுகிறோம்
உத்தமியே வந்திடம்மா!

சுடரொளி 23.08.2008

2008ஆம் ஆண்டு ஆவணி மாதம் மடுமாதா இடம்பெயர்ந்து பின் மடுத்திருப்பதிக்கு திரும்ப வந்த பிற்பாடும் மடுமாதாவிடம் செல்லவிடாது படையினர் தடுத்து வைத்திருந்த காலத்தில் எழுதப்பட்டது.

## மாதா திரும்பி வந்த போது

# அன்னையே அருள் செய்வாயே!

மருத மடுத் திருப்பதியின்
மாண்பு மிகு தாயாரே!
தனிமையில் இருப்பது தான்
தாயே உன் திருவுளமோ?

இறைமகனாம் யேசுவையே
பெற்றெடுத்த தாயாரே
ஏகாந்த மாயிருத்தல்
இது உனக்குச் சம்மதமோ?

இடம் பெயர்ந்து திரும்பி வந்தும்
இன்னல் தீர வில்லையம்மா
பதிக்குத் திரும்பிவந்தும் (எம்)
எம்பாவம் தீர வில்லையம்மா


கர்த்தராம் யேசு பிரான்
கருணை மிகு தாயாரே!
அன்னையே உன் பதியில்
அடிவைக்க முடியவில்லை!

நத்தார் தினத்தில் கூட
நாட முடியவில்லை!
சித்தத்தில்பே ரன்புடனே
சேவிக்க முடியவில்லை!

மீட்பர் பிறந்திருந்தும்
மீட்சி கிடைக்கவில்லை
நத்தார் தினத்திலுமுன்
பதி நாட முடியவில்லை

வளமிகுந்த வன்னி மண்ணோ
வல்வளைப்பால் எரிகிறது!
வாழ்ந்த இடங்களெல்லாம்
பாழ்பட்டுப் போகிறது!

அநியாய யுத்தமதால் (மக்கள்)
அகதியாய் அலைகின்றார்
குண்டு வீச்சால் உன் மக்கள்
கொலையுண்டு போகின்றார்!



பாவப்பட்ட மக்கள் எமைப்
பாலிக்க வேண்டுமம்மா
ஏதிலியாய் அலைவோரை
ஏற்றுக் கொள்ள வேணுமம்மா!

மருதமடுத் திருப்பதியின்
மகிமை யுள்ள தாயாரே!
கருணை மழை பொழிந்து
காத்திடம்மா மக்களெமை!

சண்டைகள் நீங்கிடவும்!
சமாதானம் நிலை பெறவும்,
அன்பு நிலைத்திடவும்
அன்னையே அருள் செய்வாயே!

கடறொனி 24.01.2009

# தள்ளாடி புனித அந்தோனியார்

மன்னார் திருப்பதியின் மாண்புமிகு புனிதரவர்
இன்னார் என்றில்லாமல் எல்லோரையும் காப்பார்
தன்னருளைத் தந்து நிதம் சக்தி கொடுத்திடுவார்
தன்னிகரில்லாத் தள்ளாடி அந்தோனியார்!

தள்ளாடி வருவோரின் சஞ்சலங்கள் தீர்த்திடுவார்
பொல்லாங்குடன் தவிர்ப்பார் புதுமைகள் கோடி செய்வார்
இல்லாமல் வருவோர்க்கு எல்லாம் கொடுத்திடுவார்
தள்ளாடியில் வதியும் தூயநல்ல அந்தோனி (யார்)

பொல்லாக் குணங்கள் எலாம் இல்லாமலே போகும்
வல்லமைகள் சேரும் வாக்கு மெய்யாகும்
உள்ளம் நிறைவாகும் ஊழ் வினைகள் பறந்தோடும்
தள்ளாடியில் வணங்க எல்லாத் துயரும் தீரும் !



# இஸ்லாமியபாடல்கள்

## இஸ்லாத்தைப் போற்றுவோம்!

இஸ்லாமியமார்க்க மதின் பண்பதனைப் போற்றுவோம்
இல்லார்க்கு இல்லையென்று சொல்லாமல் வாழுவோம்
வேளைதோறும் குர்ஆனை ஓதிப் பயன்பெறுவோம்
வேண்டாத எண்ணங்கள் ஒட்டாமல் விரட்டுவோம்

நபிகள் நாயகத்தின் நல்வழியில் செல்லுவோம்
நாம் இந்தப் பூமியில் மனிதராய் வாழுவோம்
கெட்டவற்றை 'ஹறாம்' என்று எப்போதும் தள்ளுவோம்
"ஹலால்" "ஹபாயா" என்ற பண்பாட்டைப் போற்றுவோம்

ஞானவழி நடந்து நல்லவற்றை நாடுவோம்
நபிகளை எப்போதும் நாம் நினைவு கூருவோம்
"யா அல்லாஹ்" என்று எந்நேரமும் தொழுவோம்
நன்மை செய்வதையே லட்சியமாய் கொள்ளுவோம்

"அன்பே இன்பமென்று" எந்நாளும் வாழுவோம்
ஆசையைத் தள்ளுவோம் அடுத்தார்க்கு உதவுவோம்
இல்லையெனறு வருவோர்க்கு அள்ளிக் கொடுப்போம்
ஏமாற்றி வாழ்வோரை எட்டி உதைப்போம்

உண்மையே பேசுவோம் ஊரோடு சேருவோம்
எண்ணத்தில் நல்லவராய் எப்போதும் வாழுவோம்!
"அல்லாஹ்" இல்லை என்றால் எல்லாமே இல்லையென்ற
தத்துவத்தைப் பேணுவோம் சமத்துவமாய் வாழுவோம்.!

# சுவர்க்கத்து மலர்களை அள்ளித் தரும் நோன்பு


மன்னிக்கும் காலம் மக்கள் மனம் திறக்கும்காலம்
திருந்தி வாழும் காலம் தீங்கு மறந்த காலம்
திமிர் பிடித்த மனமும் தீராப் பகையும்
வாதுசூது நிறைந்த வக்கிர புத்தியும்
மனித நேயத்துக்கு மாறான வாழ்வும்
உண்மையில்லாத் தன்மையும் ஊருடன் பகையும்
இல்லாது வாழ்ந்து இறையருள் பெற்றிட
நோன்பினை நோற்றுப் பூரணராகுங்கள்.

மாக்களாக இன்றி மக்களாய் வாழுங்கள்
நபிகளின் இறை வாழ்வை எண்ணித் துதியுங்கள்
இறையருளோடு ஒப்புரவாகுங்கள்
செய்த பிழைக்கு மனதார வருந்துங்கள்
வந்த வழியில் தடுமாற்றமிருந்தாலும்
செல்லும் பாதையைத் தெரிந்துஅடி வையுங்கள்
பகிர்ந்துண்டு வாழக் கற்றுக் கொள்ளுங்கள்
பாவ அறிக்கை செய்து கொள்ளுங்கள்.

ஐம்பெரும் கடமைகளின் அம்சமான நோன்பு
அல்லாஃவின் கடமைகளை நிறைவேற்றும் நோன்பு
ஈமான் கொண்டவர்கள் நோற்பது நோன்பு
இல்லறத்தில் நல்லறமாய் இருப்பது நோன்பு
நரகில் இருந்தெம்மைக் காப்பது நோன்பு
சுவர்க்கத்து மலர்களை அள்ளித் தரும் நோன்பு
பிரதிபலன் கருதாது உதவுவது நோன்பு
பெரியோரைக் கனம் பண்ணி வாழ்வதுவும் நோன்பு.

'அல்லா' மீது விசுவாசம் வையுங்கள்
அவரது குரலுக்குச் செவிசாயுங்கள்
ஏமாற்றி வாழ்வதை விட்டொழியுங்கள்
எந்நாளும் பிறரை நேசியுங்கள்
தன்னை உணர்ந்து மனிதனாகுங்கள்
மனம் திருந்தி மகிமை பெறுங்கள்
தம்பட்டம் அடித்து வாழோம் என்று
தவக் காலத்தில் சத்தியம் செய்யுங்கள்

**அகந்தையில் வாழ்வோரே!**
**நரகத்தில் வேதனையுண்டு.**



# நெஞ்சில் நிறைந்தவை

## எனது தந்தையார்

சீர் பெற்ற தீவகத்தில்சிவம் பூத்த சரவணையில்
பேர் போன வைத்தியனாதன்புத்திரனாம் கந்தசாமி
நல்லதமிழ் அறிஞன்நல்ல தொழிலாளி
சிந்தையில் நற்பண்பும்சிறந்த பெரியோனாய்

கைத்தொழில் செய்தெங்களைக் கருத்தாக வாழ வைத்தார்
அம்மாவையும் எங்களையும்அன்பாய் அரவணைத்தார்
கண்டிப்பும் அன்புமாய்க்கனிவாய் வளர்த்தெடுத்தார்
கல்வி கற்க வைத்தெம்மைக்கண்ணியமாய் வாழ வைத்தார்

(நற்) தந்தையாய் வையகத்தில்முந்தி இருக்க வைத்தார்
பண்பான தந்தையாய்பாசத்துக்கோர் இலக்கணமாய்
எங்களை வாழ வைத்தஇனிய தெய்வம் எங்கள் அப்பு
ஐந்து வகுப்புத்தான் படித்தாலும்சிந்தை மகிழ வைக்கும்

சிறந்த கவிதைகளைவிந்தையாகப் படைத்து
வியக்க வைத்த கவிஞரவர்நாமகள் கருணைபெற்ற
நற்கவிஞர் எங்கள் அப்புசந்தக் கவி, நெடுங்கவி
பக்திப்பாடல், பனுவல் பலதிருப்புகழ் நீதிப்புகழ்

சிறந்த தெம்மாங்குவகைவாழ்க்கைச் சரிதத்தையும்
வளமாய் இயம்பி வைத்தார்எல்லோரும் ஏற்கும்
இனிய கவிதைகளைச்"சொல்லால் இயற்றிவைத்த
வல்லாளர்" எங்கள் அப்புஎல்லாம் கவி எதிலும் கவி

எங்களப்பன் ஆசுகவி அருட்கவிஅஞ்சாமல் பாடும் கவி
கவிகாள மேகம் கால்தூசி பட்டகவி
எகத்தாளமாக எதையுமே பாடும்கவி
முக்காலும் ஏற்கும் முதிர்ந்த கவியவர்

**சாக்கால மட்டும் சரி பிழையைச் சொன்ன கவி**
**செத்து மறைந்தாலும் சாகாது அவரின் கவி!**




# நான் பிறந்த ஊர்

நான் பிறந்த நல்ல ஊர்நாரந்தனை என்னுமூர்
கற்றோர் நிறைந்த ஊர் கவின் வள மிக்க ஊர்
படித்தோர் பலர் நிறைந்தபண்பான பூமியது
இயற்கை வளம் கொழிக்கும்இன்பத் தமிழ்ப் பூமியது
கீழைக் கடற்கரையின்காலைக் கதிரவனின்
கதிர்கள் எழுந்தோற்றம் காணக் கிடைக்காது
கண்டு, கண்டு தெவிட்டாது நெல் வயல்களின் அழகும்
நெடு வரப்புப் பாதைகளும்கல்விக் கூடங்களுடன்
கைத்தொழிற் சாலைகளும் தோட்டம் துரவுகளும்
சுழன்றடிக்கும் வேப்பங் காற்றும்ஆவினங்கள் மேயும்
அழகான புல் வெளிகள்மீன்கள் நிறைந்திருக்கும்
மிகுந்த கடல் வளமும்பனை தென்னைகளின் வளமும்
பரந்திருக்கும் பூமியதுநால்வளமும் நிறைந்திட்ட
நல்ல தமிழ்ப் பூமியதுஇல்லையென்றிரப்பார்
இல்லாத பூமியதுஇல்லார்க்கு இல்லையென்றே
சொல்லாத பூமியதுபசித்தோர் முகம் பார்க்கும்
பண்பான பூமியது."ஆதியிரவா" என்ற எங்கள்

ஆச்சி மாணிக்கத்தின் மோனக்குரலோசை
முகிழ்ந்து வரும் பூமியதுகர்ணந் தோட்டத்தானின்
காண்டா மணியோசைதேவன் சம்பேதுருவார்
திருந்தாதி மணியோசைமுக்காலமும் ஒலிக்கும்
முருகன் மணியோசைதன்னிகரில்லாத தாய்
தான் தோன்றி ஈஸ்வரியின்இன்னருள் பொழியுமூர்
எந்தன் பிறந்த ஊர்.

இயற்கை வளம் கொழிக்கும்எங்கள் தமிழ் மண்ணை
காலத்தின் கோலத்தால்கைவிட்டு வந்து விட்டோம்
சொந்த மண்ணை விட்டுத் தூர தேசம் போய் விட்டோம்
பிறந்த மண்ணை விட்டுப்பிறதேசம் வந்து விட்டோம்
எங்கள் மண்ணை நினைக்க(நெஞ்சில்) இன்பத் தேன் பாய்கிறது.
நினைத்தாலே இனிக்கிறது நெஞ்சமெல்லாம் நிறைகிறது
பிறந்த மண்ணில் இன்னொரு கால்சென்று வர மாட்டேனோ
காணக் கிடைக்காதோ கண்டுவர மாட்டேனோ?



# சாய்ந்து விட்டது ஒரு சகாப்தம்

இசைச் சங்கமம் ஒன்று இல்லாமற் போனது
சாய்ந்து விட்டது ஒரு சங்கீத சகாப்தம்
முருகனைப் பாடிய முத்தமிழ் இசையோன்
முத்துமுத்தாய் (இசை) பாடிய வித்தகன்

திரையிசை, இறைஇசை எதிலுமே சிறந்தவன்
தீந்தமிழ் ராகங்கள் ஏழிசை வல்லவன்
வாணி சரஸ்வதி தும்புரு நாரதர்
வீணை இசையை வென்றவன் ரி.எம். எஸ்

ரி.எம்.எஸ் என்றாலே தென்றலாய், புயலாய்
தெம்மாங்கு கீதமாய், சிருங்கார ரசமாய்
பக்தி இசையாய்ப், பாட்டுக்கோர் தலைவனாய்,
இத்தரையில் வாழ்ந்து,மறைந்திட்ட மாமலை!



மதுரை மண் பெற்ற மாண்புடை இராகம்
மாண்டு மறைந்தாலும் மறையாத வேதம்
பூமியை இசையால் வருடிய ராகம் – (கண்ணன்)
புல்லாங்குழலையும் விஞ்சிய நாதம்

திருச்சி லோகன், சீர்காழி சிதம்பரம், சௌந்தரன்
மருட்சியாய் மையலாய் இசைபாடிய மூத்தவர்
மூவேந்தர் இவர் போல இசை பாட வல்லவர்
முக்காலும் இல்லை இனி,எக் காலமும் இல்லை!

பாட்டுக்கு ஒருவனாய் சௌந்தர ராசனைப்
பற்றற்றான் பற்றினைப் பாடிய கலைஞனைச்
சற்றேனும் இரக்கமின்றிக் கவர்ந்து நீ சென்றாயே
சாவே! உனக்கொருநாள்,வாராதோ கொடுஞ் சாவு!

# இன்னொருவன் இல்லை இனி!

ஐந்து வகுப்புத்தான் படித்தாலும் - நம்
சிந்தை மகிழ வைத்த சிறந்த படைப்புகளை
விந்தையாய், விமர்சனமாய் எழுதி
முந்தி எமக்குத் தந்தவன் ஜெயகாந்தன்.

பத்திரிகையாளன், படிக்காத மேதை, பொதுவுடமைவாதி
சிறுகதை மன்னன், சிறந்த எழுத்தாளன்
திரைப்படக்கலைஞன், மேடைப் பேச்சில் மேதாவி
பன்முகத் தோற்றம் கொண்டவன். ஜே.கே.



சேரி வாழ் மக்கள், நடைபாதை மன்னர்கள்,
அடித்தட்டு மக்களையே ஆதாரமாய் எழுதியவன்
எல்லோரையும் கவர்ந்த, 'எழுத்துக் காந்தம்'
ஒரு 'கலகக்காரக், கதாநாயகன்'

அக்கினிப் பிரவேசம், ஆடும் நாற்காலி, பாரிசுக்குப்போ,
உண்மைகள் சுடும், உன்னைப் போல் ஒருவன்,
யாருக்காக அழுதான், கைவிலங்கு, யுகசந்தி,
பாருக்குள்ளே புரட்சியாய் எழுதியவன் ஜே.கே,

'செத்த பின்னும் வாழ்வேனென்' றெழுதியவன்
செத்தபின்னும் அவன் எழுத்துக்கள் வாழ்ந்திருக்கும்
முன்னொருவனில்லை, பின்னொருவனில்லை
அவனைப்போல் எழுத இன்னொருவன் இல்லை இனி!

சுடரொளி 24.05.2015.

# சாவே உனக்கு சாவு வராதோ?

**"சகல கலா பண்டிதர் சைக்கோலொஜி சச்சிதானந்தம்"**


**எம் அரிய குருநாதர் இனியதொரு பண்பாளர்!**

புன்சிரிப்பால் எவரையுமே கவரும் தோற்றம்
தன்னினிய ஞானத்தால் கல்வியூற்றால்
தக்கோரும் மதிக்கின்ற தகைமையாளன்
சகல கலா பண்டிதராம் சச்சி ஐயா
தனைப் போல நாவல்லோர் பிறக்கவேண்டும்.!
நடமாடும் கலைக்கூடம்நற் றமிழ் வல்லோன்
நமை விட்டுப் பிரிந்த செய்தி நம்பலாமோ?

கல்வியியல், உளவியலில், தத்துவத்தில்
கவித்துவத்தில் இனிய தமிழ் இலக்கியத்தில்
எண்ணரிய புதுநூல்கள் எழுத்தாக்கத்தில்
அன்னிய மொழியாம் நல் லாங்கிலத்தில்
வடமொழியாம் சமஸ்கிருதப் புலமைதன்னில்
வானியலில், திருக்கணிதச் சோதிடத்தில்
எத்துறை யிலும்சிறந்தோன் எங்கள் ஆசான்.
இறந்துபட்டார் என்பதை நாம் நம்பலாமோ?

நீண்ட கரை வேட்டி, நீளக்கை வெண் சட்டை
"பாகவதர் கிராப்பு" பழுப்பற்ற தூய சால்வை
நெடுமாலாய் உயர்ந்த தோற்றம்,
நெற்றியில் திருநீறும் பொட்டும்,
அறிவொளி வீசும் கண்கள்,ஆத்மீகமான நோக்கு,
அன்பான கனிந்த பார்வை, ஐயாவின் இலக்கணங்கள்,
எண்ணரும் தகைமையாளன்,எங்களின் "சச்சி ஆசான்"
விண்ணிலே கலந்தார் என்றால்,விம்முதே எங்கள் உள்ளம்.!

இறந்த பின்பும் வாழ்வோர்மிகச் சிலரே கண்டீர்!
இதற்கிசைய வாழ்ந்தவரே எங்கள் ஆசான்
மாவிட்ட புரத்துதித்த மாண்பு மிக்கோன்,
மாவைக்கந்தன் இணையடிகள் சயனிப்பாரே
கற்றோரும் மதிக்கின்ற (நற்) கல்வி மானை
**கணபதிப்பிள்ளை சச்சிதானந்தப் பெரியோன் தன்னைச்**
**சற்றேனும் இரக்கமின்றிக் கவர்ந்து சென்ற**
**சாவே உனக்கொருநாள் வாராதோகொடுஞ் சாவு!**



# அறிவுரைகள்

## மதுவின் பிடியினிலே!

மதுவின் பிடியினிலே மதியிழந்து போனேன்
மதுவின் அணைப்பினிலே மதிப்பிழந்து போனேன்
கள்ளுக் குடியாலே கருத்திழந்து போனேன்
கற்றோரை மற்றோரை கருதாது திரிந்தேன்!

போதையின் பிடியினிலே புத்தியற்றுப் போனேன்
நானெனும் ஆணவத்தால் நாதியற்றுப் போனேன்
நல்லோரிட மெல்லாம் வில்லங்கமா டினேன்
பொல்லாக் குடியாலே புகழிழந்து போனேன்!


'நாளைமுதற் குடியேன்' என்று சொல்லி வந்து
அடுத்த நாட் காலை அங்கேயே போனேன்
காசைக் கொடுத்துப், பேயை உட்கொண்டேன்
வாசம் இழந்த மலராகிப் போனேன்

அன்னை, தந்தை, சுற்றம் வெறுத்திடவே வாழ்ந்தேன்
பொன்னனைய மனையாள் 'போ வெளியே' என்றாள்
நடக்க முடியாமல் நாடி மிகத்தளர்ந்து
தடுக்கி விழுந்து நான் சவமாகிப் போனேன்!

இரும்பு போன்ற உடலும் துரும்பாகிப் போச்சு
நரம்புத் தளர்ச்சியால் நாடி தளர்ந்தாச்சு
வரம்பேதுமின்றி வழி தவறிப் போச்சு
கரும்பானோரெல்லாம் வேம்பாகிப் போச்சு!

நாய் கூட மதிப்பதில்லை நல்ல புத்தி கேட்டதில்லை
பேய் போல நானலைந்து பெருங்குடியனாய்ப் போனேன்
தாய் சொல்லைக் கூடத் தறுதலைநான் கேட்கவில்லை
ஏனென்று கேட்பதற்கு இப்போது நாதியில்லை!

குடிகுடியைக் கெடுக்கும் ஈற்றில் அடிபிடியைக் கொண்டுவரும்
படிப்படியாக நம்மைப் பரலோகம் சேர்த்துவிடும்
குடியைத் தவிர்த்திடுவீர் குற்றமற நின்றிடுவீர்
நல்லோரும் போற்ற என்றும் நலமாக வாழ்ந்திடுவீர்!



# எந்நாளும் கெட்டவர்

தெரிந்த தொழிலை விட்டவர், தெரியாத் தொழிலைத் தொட்டவர்
தொழில் ஏதும் செய்யாமற், சோம்பராய் இருப்பவர்
அறிந்து பிழைகள் விட்டவர், அடுத்துக் குடியைக் கெடுப்பவர்
பொய்ச்சாட்சி சொன்னவர், புறம் பேசி வாழ்ந்தவர்

அன்னமிட்ட வீட்டிலே கன்னக்கோ லிட்டவர்
மன்றோரம் சொன்னவர் மனச்சாட்சி மறந்தவர்
கைக்கூலி பெற்றவர், காமவெறி கொண்டவர்
வாங்கிய கடனுக்கு வம்பு வழக்கிட்டவர்

உள்ளத்தைத் தொலைத்தவர் ஊர் தூற்ற வாழ்ந்தவர்
தலையாலே நடந்தவர் தற்பெருமை கொண்டவர்
குடித்துக் குடி கெடுத்தவர் கூறு கெட்டுப்போனவர்
கொடுக்காமல் இருந்தாலும் கொடுப்போரைத் தடுப்பவர்

நல்லவர் போல்வேடமிட்டு நாச வேலை செய்பவர்
நம்பிய நண்பனை நட்டாற்றில் விட்டவர்
கருங்காலிகளாய்மாறிக் காட்டிக் கொடுப்பவர்
அடுத்தவன் மனைமேல் ஆசைவைப்பவர்

ஆசை காட்டியே மோசம் செய்பவர்
சொல்லாலும் செயலாலும் ஏமாற்றி வாழ்பவர்
எல்லாம் தெரிந்தவர் போல் ஏமாற்றித் திரிபவர்
**சொல்லாமல் தெரிந்து கொள் (இவர்) எந்நாளும் கெட்டவர்.!**

# ஏன் என்று கேள்!

அத்திவாரம் பலமானால் கட்டிடம் உடையாது
அடிப்படை சிறந்தால் காரியம் சிதறாது
பழைய வேரிலிருந்தே புதுச் செடி முளைத்துவரும்
பழமையிலிருந்தே புதியவை உண்டாகும்.

மெய்ஞ்ஞானம் இருந்தால் அஞ்ஞானம் மறையும்
விஞ்ஞானம் வளர்ந்தால் இஞ்ஞாலம் உயரும்
ஆத்திரப்பட்டால் பாவமே விளையும்
அவசரப்பட்டால் காரியம் சிதறும்

அன்பும் நீதியும் உள்ளத்தில் இருந்தால்
பண்பும் பாசமும் தானே வளரும்
நுண்ணறிவு வேண்டின் நூலொடு பழகு
நூல்கள் தானே வாழ்வின் படிக்கல்

பொறாமைப்பட்டால் புத்தியே அழியும்
வறுமையில் வீழ்ந்தால் வாழ்வே அழியும்
நானெனும் ஆணவம் உன்னை அழிக்கும்
ஏனென்று கேள் நீ நியாயம் கிடைக்கும்.!



# பாவத்தின் விளை நிலம்

கோபம் என்பது பாவத்தின் விளைநிலம்
பொல்லாக் கோபம் போராய் முடியும்
தீராக் கோபம் மாறாப் பகையாம்
வஞ்சினம் என்பது நஞ்சினும் கொடியது

கோபம் என்பது கோடரிக் காம்பு
குணம் கெடச் செய்யும் குலத்தை அழிக்கும்
வெகுளி எனும் சினம் மனதைக் கெடுக்கும்
சினமது வந்தால் மனமது அழியும்.

உறவைக் கெடுக்கும் ஊருடன் பகைக்கும்
நல்ல மனதிலே நஞ்சைக் கலக்கும்
நல்ல நண்பரைப் பகைவர்களாக்கும்
தன்னிலை அழியும் சதி செய்ய நினைக்கும்.

திட்டங்கள் தீட்டும் தீங்கே நினைக்கும்
கொலை வெறி கொள்ளும் கொடுமையே செய்யும்
கோபம் எனும் பெரும் பாவத்தின் சம்பளம்
ஆயுட் தண்டனை கொடுஞ்சிறை வாசம்.



மறியற்சாலை, மரணதண்டனை
மரணத்தில் இருந்து தப்பினாற் கூட
மனச்சாட்சியிடம் தப்புவதேது?
ஆத்திரப்பட்டு அறிவை இழந்தபின்
ஆறுதலாக அழுவதாற் பயனென்ன?

நஞ்சென மனதில் வஞ்சினம் வளர்ந்தால்
கிஞ்சித்தும் மனதில் அமைதி வராது
செல்லும் இடத்தும் சினமது தீது
செல்லா இடத்தும் தனக்கே கேடு!

# பாவத்தின் சம்பளம்

நானே எல்லாம் என்பது ஆணவம்
எனதெனதென்று நினைத்தால் மமதை
நானே சகலதும் என்பது மிருகம்
நாமே என்று நினைத்தால் மனிதம்

'நான்' அழிந்து போனபின் தானே
நீ நிலைத்து வாழ்ந்திட முடியும்
உன்னைப் புரிந்து கொண்டபின் தானே
உலகைப் புரிவது சாத்தியமாகும்!



செய்த வினைகள் திரும்பும்போதுதான்
தென்றலா? புயலா? என்பது புரியும்
வீசும் புயலின் வேகம் அறிந்து
வளைந்து கொடுத்தால் நிமிர்ந்துவாழலாம்

வளைந்து கொடுத்தவர்தாழ்ந்ததுமில்லை
நிமிர்ந்தே நின்றவர்நிலைத்ததுமில்லை
வன்சொல் இன்சொ(ல்)லை வென்றது கிடையா(து)
வலிய கோடரி வாழையைப் பிளக்கா(து)

நெஞ்சைப் பிளந்து புறப்படும் அம்பு
பஞ்சுப் பொதியில் பாய்ந்தால் என்னாகும்?
வைரமரத்தைக் கொத்திய (மரங்) கொத்தி
வாழை மரத்தில் கொத்தினால் என்னாகும்?

நன்மையும் தீமையும் பிறர் தர வாரா(து)
நாளும் கோளும் உனக்கெனச்சுற்றா(து)
இருக்கும் போது ஆயிரம் உறவு
இல்லாத போது வருவது யாரு?

நீயேவென்றால் அது உன்மதி
உன்னை வென்றால் அதுதான் விதி
"எதைக் கொண்டு வந்தாய் கொண்டு போவதற்கு?
இங்கிருந்து தானே எடுக்கப்பட்டது"

பார்த்தனுக்குப்பரந் தாமன் சொன்ன
பகவத் கீதையின் தத்துவமிதுவே.
ஆசை என்பது பாவத்தின் விளைநிலம்
அனுபவம் தானே வெற்றியின் ரகசியம்!

பாவத்தின் சம்பளம் நரகம் என்பது
பட்டுத் தெளிந்த பின் கெட்டது தெரிந்தது!
கெட்ட பின் தானே புத்தியே வந்தது!
சத்தியம் இதுவே தரணியில் மனிதா!
புத்தியால் உணர்ந்தால்
புகழொடு வாழ்வாய்!



# புரியாப்பாடல்!

அப்பத்தைச் சுடும் போது பொத்தல் வந்து
அதன் நடுவே அழகாக அமைவதே போல்
ஒப்பற்ற கவிதைகளிற் தானாய் வந்து
ஒரு போதும் கருத்துகள் அமைவ தில்லை.

ஒப்பிட்டுச் சொல்வதற்கோர் திறமை வேண்டும்
உள்ளத்தில் தானாக உதிக்க வேண்டும்.
தப்பற்று உதிப்பதையும் சரியாய்ச் சொல்ல
தனக்கென்றோர் தனித்திறமை தமிழில் வேண்டும்

உருப்போடும் பண்டிதரால் தமிழ் வளர்ச்சி
ஒரு போதும் உண்டாகப் போவதில்லை.
கருத்தோடு பாடினால் அர்த்த முண்டாம் – (வீணே)
கத்துவதாற் பயனேதும் உண்டோ சொல்வீர்?

"செரு"புக்குப் போர்புரிந்தால் வீர ரென்போம் – சும்மா
செத்தவரைப் போலிருப்போர் வீர ராமோ?
மருப்புக்கு உரியதையா கொம்பன் யானை
மற்றவர்க்கும் பல் முளைத்தால் கொ(க்)ம்பனாமோ?

**புதுக்கவிதை எழுதுகிறார் கவிதை என்பார்**
**புரியாமல் எழுதுவதும் அதிலா சேரும்?**
திருத்தாமல் திருந்தாமல் மாற்ற மில்லை
திருத்தங்கள் தீட்டுங்கள் புதிய பாடல்!

**செரு : போர்,**

**மருப்பு : கொம்பு**

புரியாத விதமாகக் கவிதை சொன்ன
புலவரைக் "கவி" என்றான் காள மேகம்
படித்தவரும் பாமரரும் புரியும் வண்ணம்
பாடிவைத்தால் அவரைத்தான் கவிஞர் என்போம்!

எதுகை, மோனை சந்தமுடன் எழுத வேண்டும்
இனிய நடையிற் பாடல் இருக்க வேண்டும்.
புதுக் கவிதை யாகவது இருந்தாற் கூடப்
புரியும் வண்ணம் எழுதுவதைக் கவிதை என்போம்!

**கருத்தாழ மிக்கவையாய் கவிதை செய்வீர்**
**கற்றோரும் மற்றோரும் புரிய வேண்டும்**
**ஒருக்காலும் எழுதாதீர் "புரியாப் பாடல்"**
**"செரிக்காத சோறாகும்" சிந்தை கொள்வீர்!**



# பொல்லாத நெருப்பு/ மாறாத வியாதி

சாத்தான் வந்தால் தேவதை போய் விடும்
சந்தேகம் வந்தால் சந்தோசம் போய் விடும்
ஐயுறவு வந்தால் அனைத்துமே நாசம்
சிறு பொறி ஊதிப் பெரு நெருப்பாகும்

பற்ற வைத்தால் போதும்,பற்றி எரியும்
உடன் பிறந்தே கொல்லும்,ஊழித் தீயாகும்
குடும்பத்தை அழிக்கும்,கொலைவெறி கொள்ளும்
நல்ல நெஞ்சிலே நஞ்சைக் கலக்கும்

நல்ல நண்பரைப்,பகைவர்களாக்கும்
மானம் அழிந்து,மதி கெட்டுப் போகும்
மாண்புடையோரையும் மடையர்களாக்கும்
தன்னிலை அழிந்து தரம் கெடச் செய்யும்

உன் மத்தம் பிடித்து உன்நிலை அழியும்.
வேண்டாத எண்ணங்கள் மனதினில் தோன்றும்
வீண் வம்புகளை விலைக்கு வாங்கும்
நிம்மதி அழியும் நிலை தடுமாறும்

தன்மதியும் கெட்டுத் தறுதலையாக்கும்
தன்மானமினறித் தவித்திடச் செய்யும்
தன்னை நம்பாது, தாரத்தை நம்பாது
தாயையும் நம்பாமல் தறி கெட்டுப் போகும்!

உடுத்த உடையை, உண்மை நண்பனை
படுத்த படுக்கையைப், பண்புள்ள மனைவியை,
ஊரை, உறவை, உலகை நம்பாது,
பேர் கெட்டுப் போகும், பெரும் பேயனாக்கும்.

ஓடும் வாகனம் ஊர்போய்ச் சேருமா?
வானம் இடிந்து தலை மேல் விழுமா?
வங்கியில் போட்ட பணம் வந்து சேருமா?
நம்பியோர் எல்லாம் கழுத்தறுப்பார்களா?

எல்லாம் சந்தேகம், எதிலும் சந்தேகம்
தன் மேலேயே தனக்குச் சந்தேகம்
சந்தேகம் என்பது மாறாத வியாதி (பொல்லாத நெருப்பு)
வந்தாலே போகும் நெஞ்சத்தின் அமைதி!



# நாளை

நாளை, நாளை என்று காலத்தை கடத்தினால்
நமக்கும் முன்னேற்றமில்லை நாட்டுக்குமில்லையே
புத்தியுள்ளவன் பணியை,ஒத்தி வைப்பதில்லையே
ஒத்தி வைத்தவன் செயல்கள், வெற்றி பெற்றதில்லையே

செய்யும். செயலைப் பற்றிச். சிறந்த அறிவில்லையேல்
நாளை என்ற மந்திரமே,நமதாகிப் போய்விடும்.
சென்ற பொழுது எப்பொழுதும்,திரும்பி வருவதில்லையே
போன பொழுது போனது தான் புத்தி கெட்ட மனிதனே!

இந்த விநாடி மட்டும் தான் எங்களுக்கு உரியது
அடுத்த வினாடி என்பது ஆண்டவருக்குரியது
இன்று செய்ய நினைப்பதை இப்பொழுதே செய்திடு
இன்றே செய்திடு அதையும் நன்றே செய்து வாழ்ந்திடு!

'காலம் பொன்னானது' கடமையைச் செய்திடு
கடவுள் உந்தன் பக்கமே கவலையை நீ விட்டிடு
போகும் நொடிகள் எல்லாம் நமது புதை குழியை நோக்கியே!
இருக்கும் போதே மனிதா நீயும் இயன்ற பணியைச் செய்திடு

**நாளை என்ற பாதையில் நாமும்வழி நடந்திட்டால்**
**இல்லை என்ற ஊரைத்தான் சென்றடைய நேருமே!**

தினக்குரல் 23.10.2011

# இறைவன் இருக்கும் பீடம்!

மனதின்கண் அருள் இருந்தால்
மந்திரம் செபிக்க வேண்டாம்
அள்ளிக் கொடுத்தால் போதும்
அர்ச்சனைகள் செய்ய வேண்டாம்.

இல்லாமை நீங்க வேண்டும்
இல்லார்க்குக் கொடுக்க வேண்டும்
கொடுக்காமல் இருந்திட்டாலும்
கொடுப்பவரைத் தடுத்தல் பாவம்

இறைப்பதால் ஊறும் ஊற்று
கொடுத்துப் பார் பெருகும் செல்வம்
அற்றார் அழி பசி தீர்ப்போர் எல்லாம்
அவனியிலேயே தெய்வங்களாவர்

கொடுப்பவன் கை அருட் கை
கொடாவிடில் அது கூழாங்கை
இளகிய நெஞ்சம் எல்லாம்
இறையவன் இருக்கும் பீடம்.!



# பாப்பாவும் பாரதியும்

பாட்டுக் கொரு புலவன் பாப்பா – அந்தப்
பாவலனைப் பாட வேண்டும் பாப்பா
பாப்பாவுக்கொரு பாட்டு – நம்ம
பாரதியார் சொல்லி வைத்தார் பாப்பா

தமிழுக்கொரு புலவன் பாப்பா – அவனைத்
தரணியில் நாம் போற்ற வேண்டும் பாப்பா
பொய் சொல்லக் கூடாது பாப்பா என்ற
புலவனைப் பாட வேண்டும் பாப்பா

சாதிகள் இல்லையடி பாப்பா – என்ற
சமத்துவத்தைச் சொல்லி வைத்தான் பாப்பா
கடவுளையே வணங்கினால் என்றும்
கவலை இல்லை என்றுரைத்தான் பாப்பா

பயந்து ஒதுங்காதே பாப்பா – என்றும்
பகிடிக்கும் பொய் சொல்லாதே பாப்பா
ஊர் கூடித்தேர் இழுக்க வேண்டும்– நாளும்
ஒற்றுமையே நம்ம பலம் பாப்பா!

தமிழ் மொழி போல் இனிய மொழி பாப்பா – இந்தத்
தரணிதனில் இல்லை என்றான் பாப்பா
அமிழ்தின் இனிய தென்றான் பாப்பா – எங்கள்
அன்னை தமிழ் மொழி என்றான் பாப்பா!

முண்டாசுக் கவிஞனவன் பாப்பா
முத்து, முத்தாய்க் கவிதை சொன்னான் பாப்பா - அதை
விண்டுரைக்க முடியாது பாப்பா - அவன்
வேகம் நமக்கில்லையடி பாப்பா

பாரதியைப் படித்திடவே வேண்டும்
பண்போடு வாழ்ந்திடவே வேண்டும்
நல்லவனாய் நீ வாழ வேண்டும் - உன்னை
நானிலமும் போற்றிடவே வேண்டும்.!



# சாரதிகளுக்கோர் அறிவுரை!

சாரதிகளே உங்களுக்கோர் தாழ்மையான விண்ணப்பம்
ஓட்டுனர்களே உங்களிடம் உருக்கமான வேண்டுகோள்
ஏறியிறங்கு மட்டும் எங்களுயிர் உங்கள் கையில்
ஏறுக்குமாறாக வாகனத்தைச் செலுத்தாதீர்

"வேகம் கொல்லும்" என்ற வேதத்தை மறவாதீர்.
வீதிக் கட்டுப் பாட்டை விருப்பமாய்க் கடைப்பிடிப்பீர்
முன்னே செல்லும் வாகனத்தை முறையற்று முந்தாதீர்
பின்னே வரும் வண்டிக்கு வழிவிட் டுதவிடுவீர்

பள்ளிக் கூடம், கோவில் தனைப் பார்த்துச் செலுத்துங்கள்
பாதுகாப்பற்ற புகைவண்டிக் கடவைகளில்
நின்று, நிறுத்தி நிதானமாய் ஓட்டுங்கள்
மஞ்சள் கோட்டின் மகத்துவத்தை உணர்ந்திடுவீர்



சாராயம் குடித்தால் ஆராயப் புத்தியில்லை
"தண்ணி" அடித்த பின்பு சக்கரத்தைப் பிடியாதீர்
போதை அடித்தால் பாதை தவறிவிடும்
போனதன் பின்னாலே புலம்புவதாற் பயனேது?


கண்ணாடியில் தெரியும் காரிகையைப் பார்த்தபடி
கன வேகமாகக் கடு கதியைச் செலுத்தாதீர்
"குறும்போனைக் காதில் வைத்து குசியாகக் கதைத்தபடி
ஒரு கையால் "வீல்" பிடித்து ஒரு நாளும் ஓட்டாதீர்.

நல்ல புத்தி சொன்னேன் நல்லவரே கேட்டிடுவீர்
"இல்லையென்று" நீ நடந்தால் அல்லற் படுவீர்கள்
உயிர் காப்பான் இறைவன்,அதைப் பறிப்பான் இயமன்
**இறைவனாகச் சாரதிகள் எந்நாளும் இருந்திடுவீர்**
தனிமனிதன் அடித்திறந்தால் கொலை
சாரதி அடித்துக் கொன்றால் விபத்து.!

# இறப்பதே சிறந்தது!

அடுத்தவர் துன்பத்தைக் கண்டிரங்காதவர்
ஆபத்துக்காலத்தில் உதவி செய்யாதவர்
இல்லையென்றிரப்பார்க்கு அள்ளிக் கொடாதவர்
ஈன்றதாய் தந்தையைப் பேணிப் பாராதவர்
உண்மையே பேசி உலகில் வாழாதவர்
ஊருடன் ஒத்து ஓடத் தெரியாதவர்
எண் எழுத்தென்றும் கற்றுணராதவர்
ஏமாற்றி வாழ்வதே கொள்கையாய்க் கொண்டவர்
ஐயந்திரிபறக் கல்லாத பண்டிதர்
ஒற்றுமையே பலம் என்று எண்ணாதவர்
ஓடி ஓடி உழைத்து உண்ணாதவர்
ஔவைப் பிராட்டியை அறிந்து வாழாதவர்
ஃபோல எதிலும் ஒட்டாமல் வாழ்பவர்

**இருப்பினும் இறப்பது சிறந்தது தானே!**



# குறள் கவிகள்

குடி, கூத்தி, சூது கூறு கெட்ட மூன்றும்
குடும்பத்தை வேரறுக்கும்.

வஞ்சகம், கொலை, களவு கெட்ட மூன்றும்
வாழ்வையே அழித்து விடும்.

பொல்லாங்கு, பொய், புறங்கூறல் இம் மூன்றால்
எல்லா நலமும் கெடும்.

கொட்டிய பாலும், கொடுத்திட்ட வாக்கும்,
திட்டிய வார்த்தையும் திரும்ப வராது.

வெட்டிய பேச்சும், விதண்டா வாதமும்
முட்டாள்களின் நல்ல மூலதனமாகும்.

ஆறாப் பகையும் அடங்காமுன் கோபமும்
தீரா இடுப்பை தரும்.

நஞ்சென நெஞ்சில் வஞ்சம் வளர்ந்தால்
கிஞ்சித்தும் மனதில் அமைதி வராது.

பேரின வாதமும், பிக்குமார் கூச்சலும்
சீரழிவின் வேரெனவே தேர்.

குற்றம், குறை, காண் போன் வாழ்வென்றும்
சுற்றம் இழந்து தவிக்கும்.

கானலை நீரெனக் காத வழி நடந்தாலும்
தாகம் தீராது சாவுதான் மிஞ்சும்

நித்தம் திருநீறு நெற்றியில் அணிந்தால்
எத்துயரும் வாராது இனி

நல்லூர்க்கந்தனை நாளும் தொழுதக்கால்
இல்லாமல் ஓடும் பிணி

திருக் கேதீஸ்வரத் தானைத் தினமும் கும்பிட்டால்
ஒருக்காலும் வாரா திடர்.

கொட்டியும் ஆம்பலும் குளம் நிறைந்த பூக்களும்
தாமரை மலருக்குச் சற்றும் ஈடாகாது.

போக்கற்ற நாய்க்குப் போனதெல்லாம் பாதை
நோக்கற்றலை வோர்க்குப் போக்கிடமே இல்லை.

சந்தனம் மணம் காட்டும்
தன்னறிவு குணம் காட்டும்.

இல்லானுக்குக் கவலை ஒன்று
இருப்பவனுக்கோ ராயிரம் உண்டு

ஆரோக்கியம் பெரும் பாக்கியம்
அதுவே நமது சௌபாக்கியம்

இணங்காரோ டிணங்கி வாழவென நினைத்தால்
வணங்காத் தலையும் வணங்கும்.

பண்பு நிறைவு தரும்
பகட்டு வெறுமை தரும்

அன்பு கொடுக்கும்
ஆத்திரம் கெடுக்கும்

மடுத் திருப்பதியை மனதில் நினைத்தாலே
எடுப்பது எல்லாம் கை கூடும்.

தள்ளாடி அந்தோனி யாரை வணங்கினால்
எல்லா நலமும் எமக்கே வந்தெய்தும்

சாமிக்கு மலர் சாத்துவது நியாயம்
செடிக்கு எதுவும்விடாமல் பிடுங்குவ தநியாயம்!

பிறர் நலமே வாழ எல்லோரும் வேண்டுவோம்
பிணப்பெட்டிக் கடைக்காரன் எதைச் சொல்லி வேண்டுவான்.!



# தலையணை தேறும்

அண்ணாந்து உமிழ்ந்தால் உன்முகத்தின் மீதே விழும்
சேற்றில் கல் லெறிந்தால் நாற்றம் உனக்கும் வரும்
வெஞ்சினம் கொண்டலைந்தால் வன்பகை தானே மிஞ்சும்
சந்தேகம் கொண்டலைந்தால் உன் தேகமே பகையாம்

பாம்புக்குப் பால் வார்த்தால்தீங்கே திரும்பி வரும்
வஞ்சகர்க்கு நன்மை செய்தால் நஞ்சே நமக்கு வரும்
கானலை நீரென அலைந்தால் (தாகம் தீராது). சாவே நமக்கு வரும்
துயரப்படுவதால் துன்பம் தீராது
வருத்தப்படுவதால் வாழ்வு நிலைக்காது

துணிந்து நிமிர்ந்து பார், சாவு ஒரு முறை
பயந்து ஒதுங்கிப்பார், அதுவே பலமுறை
தலையணையை மாற்றுவதால், தலைவலிகள் தீராது
கவலைப்படுவதால் காரியமாகாது, காரணத்தைக் கண்டு பிடி

**கவலையைப் போக்கி விடு. தலைவலி மாறும்,**
**தலையணை தேறும்.**




# புகை நமக்குப் பகை

புகைபிடிப்போரே சிறிது புத்தியுடன் உணருங்கள்
புகை உங்களை நாளும் புகைத்தே கொன்றுவிடும்
சூழலில் சுவாசிக்கச் சுத்தமான காற்றில்லை
புகையையும் நீ புகைத்தால் போவது இடுகாட்டுக்கே

பிடிக்காத மற்றோரையும் (நீ) பிடிக்கும் புகை கொல்லும்
வெண் சுருட்டை முத்தமிட்டால் விரைவில் சுடுகாடு வரும்
தொழிற் சாலை கழிக்கும் புகை. வாகனங்கள் வீசும் புகை
நீ பிடிக்கும் புகையும் சேர்ந்து காற்றே கறுப்பாகி விடும்.!

சின்ன வீடாய்ச் "சிகரெட்டை" நீ வைத்திருந்தாலோ
உன் மனைவி விதவையாய் சீக்கிரமாய் ஆகிடுவாள்
"நிக்கோட்டினோடு"நீயும் திருமணமானால்
புற்று நோய் தானே பிள்ளையாய்ப் பிறக்கும்.

செந்தாமரையாகச் சிவந்த நுரையீரல்
காய்ந்த புகையிலையாய் கருகிவிடும் புகையாலே
மரணிப்போர்க்குக் கொள்ளி வைப்பார் மற்றவர்
தனக்குத் தானே கொள்ளிவைப்பார் புகைப்பவர்!



**சிகரெட்டை விரல் பிடித்து சீக்கிரமே அழியாமல்**
**புகைத்தலுக்கெதிராகப் புதுக்கவிதை எழுதிவிடு**

**தினக்குரல் 14.07.2013**

# அகர முதல

## அ

அன்பாய் இரு
ஆணவம் தவிர்
இல்லார்க்குக் கொடு
ஈகை பெரிது
உண்மை பேசு
ஊருக்குதவு
எண் எழுத்துயர்வு
ஏன்? என்று கேள்
ஐயுறவு கெடுதி
ஒன்றே கடவுள்
ஓதியுணர்
ஔவையாரைப்படி

## த

தந்தை சொற் பேண்
தாயை வணங்கு
திருந்தி வாழ்
தீங்கு நினையாதே
துன்பத்தில் உதவு
தூய்மை பேண்
தெரிந்து கல்
தேவையை முடி
தைரியமே வெற்றி
தொன்மை போற்று
தோல்வியில் வெற்றி

## ந

நல்லதே நினை
நாலும் தெரிந்து கொள்
நினைப்பதை முடி
நீதி தவறாதே
நுனிப்புல் மேயாதே
நூலொடு பழகு
நெல்லைப் பயிர் செய்
நேர்மை தவறாதே
நொந்தது வளராது
நோகாமற் பிறக்காது

## க

கற்கை நன்றே
காலத்தைப் போற்று
கிலி கொள்ளாதே
கீர்த்தி பெரிது
குறை கூறாதே
கூடுதல் இன்பம்
கெடுப்பது கேடு
கேடு நினையாதே
கை வினை பழகு
கொடுத்து வாழ்
கோபம் பாவம்
கௌரவம் பேணு

### ப

பண்பை வளர்
பாவம் தவிர்
பிஞ்சைப் பறிக்காதே
பீடைக்கஞ்சு
புத்தகம் படி
பூமியை வணங்கு
பெண்மை போற்று
பேதமை கைவிடு
பைந்தமிழ் பழகு
பொய் பேசாதே
போனதை மற

### வ

வன்சொல் பேசாதே
வாய்மை தவறாதே
வித்தை கல்
வீண்சொற் பேசாதே
வெறுப்புக் கொள்ளாதே
வேற்றுமை மற
வைகறை துயிலெழு

### ச

சண்டை தவிர்
சாதியம் பேசேல்
சினம் கொள்ளாதே
சீலம் மனம் கொள்
சுத்தம் பெரிது
சூழலைப் பேணு
செய்வதறிந்து செய்
சேராரோடிணங்கேல
சைகை உணர்
சொன்ன சொற் தவறேல்
சோம்பல் தவிர்
சௌந்தரம் போற்று

### ம

மது அருந்தாதே
மாண்பு தவறேல்
மிடிமை கொடிது
மீதப்படுத்து
முன்னேற முனை
மூத்தோரை மதி
மெல்லப் பேசு
மென்மையாய் வாழ்
மையல் கொள்ளாதே
மொழிகள் படி
மோகம் பாவம்
மௌனம் சாங்கீதம்

### ர

ரசிக்கப்பழகு
ராகங்கள் ஏழு
ரிசபம் நந்தி
ரீங்காரம் பாடு
ருசிகள் ஆறு
ரூபம் அழகு
ரொக்கம் தேடு
ரோகம் கெடுதி
ரௌத்திரம் கேடு

## ய

யாவரையும் மதி
யுகம் பல காலம்
யூகித்துணர்
யேசுவின் வழிசெல்
யோசித்த பின் செய்
யௌவனம் போற்று

## ல

லட்சியம் பெரிது
லாவகமாய்ப் பயில்
லிங்கத்தை வணங்கு
லீலையே உலகம்
லௌகீகம் போற்று

## ஞ

ஞமலி போல் வாழாதே
ஞானம் பெரிது



# நரகடைவர்

தந்தை சொற்கேளாதோர், தாயை வணங்காதோர்
சந்தமுறக் கல்வி சொன்ன, குரு வார்த்தை தான் மறந்தோர்
தன் சமய நெறி மாறித், தற்குறியாய் அலைவோர்
குண்டுகளாய் மாறிக், கோள் சொல்லித் திரிபவர்கள்

பெண்டுகளைக் கெடுப்போர், பிஞ்சுகளைப் பறிப்போர்
மன்றோரம் சொன்னோர், செய்நன்றி மறந்தோர்
வஞ்சகம் என்னும், நஞ்சு மனம் கொண்டோர்
பஞ்சமாபாதகங்கள் அஞ்சா மற் செய்வோர்!

**சிந்தையில் நற்பண்பு சிறிது மில்லாதோர்**
**வெந்தழலிலும் கொடிய நரகடைவர் தானே**



# நெல்லும் பதரும்

அன்புள்ளம் கொண்டவன் ஆண்டவனாவான்
ஆணவம் கொண்டவன் நாயினும் கீழோன்
தர்மம் உள்ளவன் சத்தியம் மறவான்
தன்னை மறந்தவன் தற் குறியாவான்



பொய்யில்லாதவன் புகழோடு வாழ்வான்
போக்கிரி என்றும் வாழ்க்கையில் உயரான்
உண்மையில்லாதவன் ஊருக்குதவான்
ஊதாரி என்றும் பணக்காரனாகான்

ஊருக்குழைப்பவன் உபகாரியாவான்
ஊருடன் பகைப்பவன் வேருடன் கெடுவான்
கோபப்படுவன் பாவங்கள் செய்வான்
கொள்கையில்லாதவன் நல்லது செய்யான்

கண்ணியம் மிக்கவன் சொன்ன சொல் தவறான்
காசென அலைபவன் பேராசை கொள்வான்
சொன்ன சொற் கேளான் இன்னற் படுவான்
சோம்பேறி என்றும் தரித்திரனாவான்

# பெரிய பாவம்

அன்னமிட்ட வீட்டில் என்றும்
கன்னக் கோல் வைத்தாற் பாவம்
அடுத்துக் கெடுத்தல் பாவம்
ஆறாச் சினமும் பாவம்

இருந்தும் இல்லை யென்று
இல்லார்க்குச் சொல்லல் பாவம்
ஈனத் தனமும் பாவம்
ஏமாற்றி வாழ்தல் பாவம்

கள்ளுக் குடியும் பாவம்
கள்ளத் தனமும் பாவம்
காமம் கொண்டலைந்து
கன்னியரைக் கெடுத்தல் பாவம்

கோபமது கொண்டலைந்து
கொடுஞ் செயல் செய்தல் பாவம்
கொடுக்காமல் இருந்திட்டாலும்
கொடுப்போரைத் தடுத்தல் பாவம்

வஞ்சகம் சூது பாவம்
வன்பகை பெரிய பாவம்
வீண்பழி சொல்லல் பாவம்
வீணராய் இருத்தல் பாவம்

நல்லவர் போல் வேடமிட்டு
நாசவேலை செய்தல் பாவம்
நன்றி மறத்தல் பாவம்
நல்லோரைத் தூற்றல் பாவம்.

மாதா, பிதா, குரவர் சொல்லை
மறுப்பது பெரிய பாவம்
மன்றோரம் சொல்வதே
பாவத்தில் பெரிய பாவம்!



# வேண்டும்!

பாட்டரசன் கம்பனைப் போற்பாட வேண்டும்
பறம்பு மலைப் பாரியைப் போற் கொடுக்க வேண்டும்
ஆட்டனத்தி போல் பரதம் ஆட வேண்டும்
ஆறுமுக நாவலர் போல் பேச வேண்டும்

கவிதை மழை பொழிவான் அக்காள மேகம்
அவன் போல கவி சொல்லத் தெரிய வேண்டும்
ஔவைக் கிழவியை நீ படிக்க வேண்டும்
அழகு தமிழில் என்றும் புலமை வேண்டும்

சொல்லுவதைத் தெரிந்து நிதம் சொல்ல வேண்டும்
சொல்லுவதைப் போல் நடந்து கொள்ள வேண்டும்
இல்லை யென் றிரப்பார்க்கு நாளும் நீயும்
இல்லையென்னாது பொருள் கொடுக்க வேண்டும்.

பெற்ற தாய் தந்தையரைப் பேண வேண்டும்
பெரியோரைக் கனம் பண்ணி வாழ வேண்டும்
கற்றோரைப் பின்பற்றி நடக்க வேண்டும்
பற்றற்ற வாழ்க்கையே என்றும் வேண்டும்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும்
வாழும் போதே நற் சேவை செய்ய வேண்டும்
எத்தாலும் எல்லார்க்கும் உதவ வேண்டும்
**செத்தாலும் எமை ஊர் தான் போற்ற வேண்டும்.!**

# மரணம் இல்லை

பாட்டரசன் கம்பனைப் போல் புலவனில்லை
பறம்பு மலைப் பாரியைப் போல் வள்ளலில்லை
அரும்புலவன் ஆசுகவி காள மேகம்
அவன் போல வசைபாடப் புலவரில்லை

கொடைகளைப் போல ஒரு செல்வமில்லை
கொடாதான் வாழ்வென்றும் விடிவதில்லை
இல்லையென் றிரப்பார்க்கு இவ்வுலகில்
இருந்தும் இல்லை யென்பார் மனிதரில்லை

செந்தமிழ் போல் இனிய மொழி உலகிலில்லை
திருந்தாத உள்ளங்கள் மனிதரில்லை
கந்தனைப் போல ஒரு தெய்வமில்லை
காசினியில் எம் தமிழுக் கீடுஇல்லை



ஐயமறக் கல்லாதார் அறிஞரில்லை
அவ்வையாரைப் படியாதார் புலவரில்லை
எடுப்பார் கைப்பிள்ளையாய் இருப்பாரெல்லாம்
எந்நாளும் மனிதராய் வாழ்ந்ததில்லை

இன்றிருப்போர் நாளை இங்கு இருப்பதில்லை
ஏமாற்றி வாழ்வோர்க்கு அமைதியில்லை
செத்தும் கொடை கொடுத்தான் சீதத்காதி
அவன் போல வாழ்ந்தார்க்கு மரணமில்லை.

# தனிப் பாடல்கள்


## அற்பருக்கு வாழ்வு

பெற்றவர்க்கு வாழ்வு வந்தால்
பிள்ளைகளின் எதிர்காலம் பொற்காலமாகும்.
கற்வர்க்கு வாழ்வு வந்தால்
மற்றவரும் மேன்மை பெற உதவுவார்கள்
துட்டருக்கு வாழ்வு தான் வந்திட்டாலும்
கெட்டதே செய்வதவர் குணமதாகும்
அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த நடு
ராத்திரியில் குடை பிடிப்பார் இயற்கைதானே!

## பன்றி பல குட்டி போட்டாலும்

நற்குணமுள்ள பிள்ளை ஒன்றே பெற்றாலும்
நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மையாகும்.
குணங்கெட்ட குழந்தைகள் எத்தனை பிறந்தாலும்
குலப்பெருமைக் கென்றுமது ஈனமாகும்.
பன்றி பல குட்டிகளைப் போட்டிட்டாலும்
பயனேதும் உண்டோ சொல்வீரே நீரும் ?
குஞ்சரம் குட்டியொன் றீன்டிட்டாலும்
குன்றாத பெருமை என்று உணரலாமே!





## காற்றுள்ள போதே



இன்றிருப்போர் நாளை இருப்பரென்று எண்ணாமல்
இருக்கும் போதே
அன்றன்று சேர்ப்பதை அழிக்காமல் சேர்த்தல்
அறிவுடமையன்றோ!
கடல் வற்றி மீன் பிடிக்க காத்திருந்த கொக்கின்
கதை போலன்றி
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுதல்
கற்றறிந்தோரின் கருமந்தானே

## எட்டி பழுத்தாலும்

மா, பலா, வாழை மதுவூறும் அரும்கனிகள்
மாநிலத்தாய் கொடுத்த வரமதாகும்
மண்ணிலுள்ள நல்லவரும் தேடிய செல்வத்தை
மற்றறவர்க்கும் கொடுத்து வாழ்வார் கண்டீர்

இரப்போர்க்கு மறுக்கின்ற செல்வராலே
இவ்வுலகில் என்ன பயன் உண்டோ சொல்வீர்?
எட்டி பழுத்தாலும் ஈயாதார் வாழ்ந்தாலும்
எப்பயனும் இல்லையென உணர்வீர் நீரே?

## தன்வினை தன்னைச் சுடும்.

அடுத்தவர் குடியை அடுத்துக் கெடுப்பதற்குத்
தன் உள்ளத்தாலே நினைத்தாலும் , செய்தாலும்
செய்பவரே கெடுவது தான் உண்மையன்றோ?
கண்ணுடையோர் விழித்திருந்து எந்தநாளும்
பள்ளத்தில் வீழமாட்டார் புரிந்து கொள்வீர்
தெரிந்து செய்யும் தன்வினைகள் தன்னைச் சுடும்
ஓட்டப்பம் வீட்டைச்சுடும் உணருவீரே!

## கூடாச் சேர்க்கை

நீதிநெறி அழியும் நீண்ட நாள் வாழ்வு குன்றும்
காய நிறமும் மாறிக் கண்ட நோய் உடலம் பற்றும்
தானம், தவம், அழிந்து தக்கதோர் செல்வம் குன்றும்
மானம் அழிந்து போகும் மதி கெட்டு, உலகம் தூற்றும்

**நேர்மை நெறியும் நீங்கி நீண்டதோர் நரகிற் சேர்க்கும்**
**பாசாங்கு செய்யும் மாயப் பரத்தையை நண்ணினோர்க்கே!**

# யுத்த அனர்த்தம்

## எங்கே சுதந்திரம்?

எங்கே சுதந்திரம் எங்கே சுதந்திரம்?
எம் தமிழ்ப் பூமிக்கு எப்போ சுதந்திரம்?
நாட்டுக்குச் சுதந்திரம் நாற்பத்தெட்டில்
நமக்குச் சுதந்திரம் எந்த மட்டில்?

காக்கை வன்னியன் எட்டப்பனைப் போல
தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும் எத்தர்கள்
காட்டிக் கொடுக்கும் கருங்காலிக் கூட்டங்கள்
நாட்டில் இருக்கையில் நமக்கேது சுதந்திரம்?

பாதுகாப்பு வலயம் பயங்கரவாதச் சட்டம்
அதியுயர் பாதுகாப்பு, அவசர காலச் சட்டம்
பார்க்குமிட மெல்லாம் படைகளின் பிரசன்னம்
படைகளுடே பலிக் கடா வாய் மக்கள்!

ஆயுதப் படைகளின் அடக்கு முறைகள் ஆக்கிரமிப்புக்கள்
அபகரிக்கப்படும் எங்கள் பண்பாட்டுப் பூமி
கற்பழிப்புக்கள்? காணாமற் போதல், புதை குழிகள்,பூசா முகாம்கள்,
இந்தக் கொடுமைகள் இருக்கும் வரையிலே
எங்களுக்கேது நல்ல சுதந்திரம்?

வெள்ளை வான் கடத்தல், வீண் கொலை, கப்பம் (கொள்ளை)
பாலியல் வல்லுறவு,படுகொலைக் கலாசாரம்
நீண்டநாள் போரனர்த்தம்,நிம்மதியற்ற வாழ்வு,
மீள் குடியேற்றம் என்று மீண்டுமோர் அகதி வாழ்வு!

துஞ்ச இடமில்லை தூங்கி வெகுநாளாச்சு
கஞ்சிக்கும் வழியில்லை கட்டுதற்கோ கந்தையில்லை
நிவாரணப் பிச்சைக்காக நின்று கையேந்தும் வாழ்வு
வாழ்வையே தொலைத்து விட்டு,வகையற்று வாழும் மக்கள்,

**ஏதையா சுதந்திரம்,எம் தமிழ் மக்களுக்கு?**



# தை பிறந்தால்

தை பிறந்தால் வழி பிறக்குமாம் அறுபது
தை கள் பிறந்ததே வழி பிறந்ததா?
முள்ளி வாய்க்காலில் பட்ட அவலம் மறையுமா?
முன்னூறு ஆண்டுகள் ஆனாலும் மறக்குமா?

போன உயிர்கள் திரும்பக் கிடைக்குமா?
போர் செய்த அனர்த்தம் மறைந்து போகுமா?
அகதி வாழ்வெனும் அவலம் தொலையுமா?
ஆற்றுவாரற்ற நிலமை மறையுமா?

மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
நாட்டில் நடந்த கொடுமை மறக்குமா?
மலிந்து போன மனித உயிர்கள்
மறைந்து போன வாழ்வின் வசந்தங்கள்

இழந்து போன எமது சொத்துக்கள்
இல்லாதுபோன எமது உறவுகள்
தை பிறந்ததே திரும்பக் கிடைத்ததா?
தமிழரின் வாழ்வில் அமைதி பிறந்ததா?

கிறிஸ் பூதங்கள் சறுக்கி விளையாடுது.
கப்பம், கடத்தல், கொலை, தப்பாமல் நடக்கிறது.
வெள்ளை வான் கடத்தல் விமரிசையாய் நடக்கிறது
சனநாயகம் இங்கே தற்கொலையாகிறது

மனித நேயம் (லங்காவில்) மரணித்துப் போகிறது
சர்வாதிகாரமே தன்னாட்சி செய்கிறது
இந்த நிலை மாறி இன்னல்கள் நீங்குவதற்கு
**வந்து பிறந்த தையே வழிசெய்ய மாட்டாயா?**

**சுடரொளி 13.01.2013**

# மாண்டுவிட்டதிங்கே மனிதம்!

வளமிகுந்த வன்னி மண் வல்வளைப்பால் எரிகிறது
சுற்றி வளைத்து வீசும் தொடர் குண்டு வீச்சுகளால்
பற்றி எரிகிறது (எம் பூமி) பாழ் பட்டுப் போகிறது.
வானமும் பொழிகிறது. வான்படையும் பொழிகிறது.

ஏகமாய்க் குண்டு வீச்சு எங்கணும் மரண ஓலம்
உண்ண உணவுமில்லை உறங்க இடமுமில்லை
கஞ்சிக்கும் வழியில்லை கட்டுதற்குக் கந்தலில்லை
வானமே கூரையாய்ப் பூமியே புகலிடமாய்


நித்தமும் குண்டு வீச்சு நிம்மதியற்ற வாழ்வு
எப்போதும் ஷெல் வீச்சு ஏதிலியான வாழ்வு
பால்மா வாங்குவதற்காய் பந்தியிலே நின்றவர்கள்
கஞ்சிக்காக வந்து கால் கடுக்க நின்றவர்கள்

'மல்ரிபரல்' வீச்சால் மாண்டு மடிந்தார்கள்.
மருந்து வாங்க வந்து நின்று மரணித்துப் போனார்கள்
ஷெல் வீச்சு குண்டு வீச்சால் சிதறுண்டு போனவர்கள்
'பொசுபரஸ்' குண்டுகளால் புதைந்து மடிந்தவர்கள்

தண்ணீர் கிடைக்காத நந்திக் கடலோரம்
தாகத்தால் நாவரண்டு செத்தவர்கள் எத்தனையோ!
அடிபட்டுச் செத்தவர்கள், அதிர்ச்சியினால் மாண்டவர்கள்
மருந்து கிடைக்காமல் மரணித்துப் போனவர்கள்

கைகால் இழந்தவர்கள் உடல் கருகி மாண்டவர்கள்
எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய்ச் செத்தவர்கள்
எங்கள் தமிழ்ப் பூமியெல்லாம் எரிந்து சாம்பலாயிற்று
ஏனென்று கேட்பதற்கு எவருமெமக்கிங்கில்லை!

சீர்கெட்ட அரசு செய்த சிறுமைத் தனமும் என்றும்
கண் துடைப்பாய்க் கதை சொல்லும் வெளிநாடும்
காந்தி தேசம் செய்த கயமைத் தனத்தாலும்
**மாண்டு விட்டதிலங்கையிலே மனிதம்!**



# ஆக்கிரமிப்புச் சாதனமாய்

தானே முளைத்த மரம் தானாக வளர்ந்த மரம்
ஊருக்குள்ளே உள்ள மரம் உயர்ந்த அரச மரம்

களைத்து வருவோர்க்கு கனிவாய் நிழல் கொடுக்கும்
இளைத்து வருவோர்க்கு இளைப்பாற இடம் கொடுக்கும்

குருவி இனங்கள் அங்கே கூடுகட்டி வாழ்ந்திருக்கும்
பறவை இனங்கள் எல்லாம் பயமின்றி குடியிருக்கும்

சங்க காலம் முன்பான எங்களூரில் உள்ள மரம்
சங்கமித்தை கொணர்ந்ததாகச் சரித்திரம் படைக்கிறார்கள்

அரச மரங்களைக் கண்டால் புத்தர் சிலைகளெல்லாம்
அங்கொன்று இங்கொன்றாய் அவசரமாய் முளைக்கின்றன

நட்டுவிட்ட பிற்பாடும் நடுகிறார்கள் புத்தர் சிலை
அத்து மீறிக் குடியேற அவர் செய்யும் தந்திரங்கள்

**அரச மரங்களும் (இங்கே) ஆக்கிரமிப்புச் சாதனமாய்**
**அஹிம்சை சொன்ன புத்தரும் ஆக்கிரமிப்புச் சாதனமாய்!**

கூடஹோலி 2013

# கறுப்பு வைகாசி

கறைபடிந்த அந்த கறுப்பு வைகாசி மாதம்
முள்ளி வாய்க்காலில் முடிந்துவிட்ட பேரவலம்
முட்கம்பி வேலிக்குள் முடங்கிய எம் வாழ்வு
வல்வளைப்பால் எரிந்திட்ட எமதினிய வன்னியின் மண்!

சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன்
நடந்திட்ட அந்த மனித சங்காரம்
காந்தி தேசத்தின் கபட நாடகம்
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்

நாட்டில் நடைபெற்ற (மனித)ப்படுகொலை
துண்டு துண்டாய் மக்கள் சிதறிய கொடூரம்
வான் குண்டு வீச்சுகளால் வகை தொகையின்றி மாண்டோர்
தாயில்லை தந்தையில்லை சுற்றமெல்லாம் சிதறி மாண்டார்.

ஷெல்களின் வீச்சுக்களால் சிதறுண்டு போனவர்கள்
கொத்துக் குண்டு வீச்சுக்களாற் குடும்பமாய் அழிந்தவர்கள்
பொஸ்பரஸ் குண்டுவீச்சால் புகைந்து மடிந்தவர்கள்
அநியாயக் குண்டு வீச்சால் அங்காங்கள் இழந்த மக்கள்


பாதுகாப்பு வலயத்துள்ளும் பயங்கர வன்கொலைகள்
பாங்கருக்குள் புதையுண்டு பரலோகம் போனவர்கள்!
எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய் மாண்டவர்கள்
மார்பில் குடித்த பால் மரணப்பாலாகியதே!

மாதாவுடன் குழந்தை தாங்களும் சேர்ந்து வந்து
கஞ்சிக்காக ஏங்கி கால் கடுக்க நின்றவரும்
மருந்தெடுக்க வந்து நின்ற மருந்தகத்தின் வாசலிலே
'மல்ரிபரல்' வீச்சால் மாண்டு மடிந்தார்கள்!

சரணடைய வந்தோரையும் சங்காரம் செய்தார்கள்
இறந்த எம் பெண்களையும் நிர்வாணமாக்கி விட்டு
இன்பம் அனுபவித்த இனவாதப் பேய்கள் அவை!
நாற்பதாயிரம் உயிர்கள்நாசமாய்ப் போகவென்று

**கொத்துக் கொத்தாய்க் கொன்ற**
**கொலைவெறி வைகாசி!**

**தினக்குரல் 05.07.2012**



# புலம்பெயர் அகதிவாழ்வில் பொங்கலா?

முட்கம்பி வேலிக்குள்ளே முடங்கிப் போய் இருக்கும் மக்கள்
தாயில்லை தந்தையில்லை தன் சுற்றமெல்லாம் சாவு
அநியாயக் குண்டு வீச்சால் அங்கங்கள் இழந்த வாழ்க்கை
பொங்கவா முடியும் இந்தப் புலம்பெயர் அகதி வாழ்வில்?

இல்லிடம் தொலைந்த வாழ்க்கை ஏதிலியான மக்கள்
கொடும் குண்டுவீச்சுக்களால் குற்றுயிரான மக்கள்
வாழ்வையே தொலைத்த பின்னே வகையற்று வாழும் நாங்கள்
பொங்கவா முடியும்? இந்தப் புலம்பெயர் அகதி வாழ்வில்?


வீடில்லை வாசலில்லை விழிமூட இடமேயில்லை
நாளும் வான் குண்டு வீச்சால் நலிவுற்றுச் செத்த நாங்கள்
நிவாரணப் பிச்சைக்காக நின்று கால் கடுக்கும் நாங்கள்
பொங்கவா முடியும்? இந்தப் புலம்பெயர் அகதி வாழ்வில்?


ஷெல் வீச்சுக் குண்டு வீச்சால் சிதறுண்டு வாழ்விழந்தோம்
பாதையோரம் பிணங்கள் பட்டினிச் சாவு நித்தம்
காணவே முடியாதிந்த கஷ்டமும் அகதி வாழ்வும்
பொங்கவா முடியும்? இந்தப் புலம்பெயர் அகதி வாழ்வில்?

தொடர் சங்கிலி யாய் அரண்கள் தொல்லை தரும் தடைகள்
அதியுயர் பாதுகாப்பு அவசரகாலச் சட்டம்
பாதுகாப்பு வலயம், பயங்கரவாதச் சட்டம்
பொங்கவா முடியும்? இந்தப் புலம்பெயர் அகதி வாழ்வில்?

துஞ்சவோர் இடமேயில்லை தூங்கி வெகுநாள்களாச்சு
கஞ்சிக்கும் வழியேயில்லை கசக்கிக் கட்டக் கந்தையில்லை
நெஞ்சமெல்லாம் நெருப்பாய் நிலையற்று வாழும் நாங்கள்
பொங்கவா முடியும்? இந்தப் புலம்பெயர் அகதி வாழ்வில்?

மீள்குடியேற்றம் என்று மீண்டுமோர் அகதி வாழ்வு
மாறுமா? இந்தக் கோலம் மறையுமா? ஈன வாழ்வு
சாவுதான் எமக்கு என்று தலையினில் எழுதியாச்சா?
ஏனையா நாமும் இந்த இலங்கையின் மக்கள் தானே!





# வெள்ளியிட்டதா? வெறுங்காலா?

வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையென்று
உள்ளம் உடைந்த வண்ணம்உட்கார்ந்து அழுவோரே!
அநியாய யுத்தத்தால் அகதியாய் ஓடும்போதும்
உக்கிரக் குண்டு வீச்சால் உயிர்தப்ப ஓடும்போதும்


வெள்ளியிட்டதும் ஓடும் வெறுங்காலும் தான் ஓடும்
வான்குண்டு வீச்சுக்களால் வகை தொகையின்றி மாண்டு
நாலுபேர் சுமந்து சென்று நடுக்காட்டில் எரிக்கும்போது
வெள்ளியிட்டதும் எரியும் வெறுங்காலும் தான் எரியும்

**எரிக்கும் (பேரினவாத) நெருப்புக்கு ஏதையா வேறுபாடு?**

**இப்போது சொல்லுங்கள் எந்தக்கால் அடிமையென்று**
**வெள்ளியிட்டதா? வெறுங்காலா?**

**யாழ் தினக்குரல் முகாமையாளர் மறைந்த மாமனிதர் R.C. நடராசா அவர்களிடமிருந்து "ஆழப்பதிந்த வேர்கள்" என்ற நூல் பரிசு பெற்ற கவிதை.**

**20.07.2008**



# காலம் மாறிப்போச்சு I

காலம் மாறிப் போச்சு — நம்ம
கணக்கும் மாறிப்போச்சு
போர்தான் வாழ்க்கையாச்சு — மக்கள்
(புலம்) பெயர்ந்து போகலாச்சு

ஊர் கூடித் தேர் இழுத்த
அந்தக்காலம் மாறி – இப்போ
கூறுகெட்டு நூறு கட்சி
தோன்றும் காலமாச்சு

மக்கள் சேவை மகேசன் சேவை
என்ற காலம் மாறி இப்போ
சட்டைப் பையை நிரப்புவதே
சரித்திரமாய்ப் போச்சு

அறிஞர் மக்கள் அரசியலில்
இருந்த காலம் மாறி இங்கே
ஊழல், இலஞ்சம், வகுப்பு வாதம்
அரசியல் என்றாச்சு

விலைவாசி எல்லாம் நாட்டில்
விசம் போல் ஏறிப்போச்சு
வயிற்றுப் பாட்டைப் பார்ப்பதற்கே
வழியில்லாமற் போச்சு


பாண் இறாத்தல் ஒன்றின் விலை
பல மடங்காய்ப் போச்சு
பட்டினியால் சாவதென்று
தலையில் எழுதியாச்சு

கடத்தல், கப்பம், கொலை, களவு
சரித்திரமாய்ப் போச்சு
மனிதம் என்பது சிறிலங்காவில்
மரணம் அடைந்து போச்சு

சிறுவர் துஷ்பிரயோகம், சிசுக்கொலை
சாதாரணமாய் ஆச்சு
தமிழனாய்ப் பிறந்ததிங்கே
சாபமாகிப் போச்சு

சமாதானமென்ற புறா
தற்கொலையாய்ப் போச்சு
மரணம் மலிந்து போச்சு — அதுவே
தமிழர் விதியென்றாச்சு!

தினக்குரல்



# காலம் மாறிப் போச்சு II

காலம் மாறிப் போச்சு இப்போ
கருத்தும் மாறிப் போச்சு
வாழ்க்கை மாறிப் போச்சு — அதுவும்
வழியும் தவறிப் போச்சு

அண்ணன் தம்பி கூடிவாழ்ந்த
அந்தக் காலம் போச்சு - இப்போ
அவசரமாய் கூட்டுக்குடும்பம்
பிரிஞ்சு போகலாச்சு

பெண்டு பிள்ளைக்காக உழைச்ச
பண்டைக்காலம் போச்சு - இப்போ
கண்டபடி குடித்துக்கெட்டு
காசை அழிக்கலாச்சு

மாமன் மகளைக் கட்டுவது
மறைந்த காலமாச்சு - இப்போ
சீர் வரிசை, சீதனம் தான்
திருமணமென்றாச்சு

ஒருவனுக்கு ஒருத்தி என்று
வாழ்ந்த வாழ்க்கை மாறி இங்கே
ஊருக்கொரு சின்ன வீடு
என்ற நிலையாச்சு.

கணவனே தெய்வம் என்ற
காலம் மாறிப்போச்சு
கண்டபடி வாழ்வதிங்கே
நாகரீகமாச்சு

காலு முட்டச் சேலைகட்டிய
காலம் மறைந்து போச்சு – இப்போ
பாதி ஆடையில் பகட்டித் திரியும்
காலமும் வந்தாச்சு

படத்தைப்பார்த்து பாடம் படித்த
பண்டைக்காலம் போச்சு – இப்போ
குடும்பமாக இருந்து பார்த்தா
உடம்பு கூசிப்போச்சு

கும்மி, பரதம், நடனம் பயின்ற
நம்ம காலம் மாறி – இப்போ
கும்மாங்கூத்து ஆடுவதே
"பாசனாகப்" போச்சு

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
முடிந்த கதை ஆச்சு
பழைய பஞ்சாங்கம் என்று
பரணிலே போட்டாச்சு

குப்பி விளக்கில் பாடம் படித்த
காலமெல்லாம் மாறி இப்போ
பட்டி தொட்டியெல்லாம் விளக்கு
பட்டப்பகல் ஆச்சு

இப்படித்தான் வாழவேண்டும்
என்ற எண்ணம் மாறி
எப்படியும் வாழ்ந்தால் போதும்
என்ற நிலையாச்சு.

**காலம் மாறிப் போச்சு – மக்கள்
கருத்தும் மாறிப்போச்சு
நாகரீக மோகம் வளர்ந்து
நாடு மண்ணாய்ப் போச்சு**

தினக்குரல்



# எங்களுக்கேது தீபாவளி?

முள்ளிவாய்க்காலின் படுகொலை மறக்குமா?
முன்னூறு ஆண்டுக ளானாலும் மறக்குமா?
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
தேசத்தில் நடைபெற்ற கொடுமை மறக்குமா?

இறந்து போன எமது சொந்தங்கள்
இல்லாது போன எமது சொத்துக்கள்
மலிந்து போன மனித உயிர்கள்
மறைந்து போன வாழ்வின் வசந்தங்கள்


மீள் குடியேற்றம் என்று மீண்டுமோர் அகதி வாழ்வு
தகரமும் தறப்பாளுமே சாஸ்வதமாய்ப் போச்சு
பொட்டல் வெளிகளிலே புனர் வாழ்வாம்
பாழ்வெளிகளிலே மீள் குடியேற்றம்!

பார்க்குமிடமெல்லாம் படைகளின் பிரசன்னம்
படைகளுடே பலிக்கடாவாய் எம்மக்கள்
பயன்மிகுந்த எங்கள் பண்பாட்டு பூமியெல்லாம்
பாதுகாப்பு வலயத்துள் பாழ்பட்டுக்கிடக்கிறது

சொந்த நிலமெல்லாம் சுவீகரிக்கப்படுகிறது.
அத்து மீறிக் குடியேற ஆக்கிரமிக்கப்படுகிறது
எங்கள் தமிழ்ப்பூமி அபகரிக்கப்படுவதற்கு
எல்லைக்கற்களாய் புத்தர் சிலைகள்

அதியுயர் பாதுகாப்பு அவசர காலச்சட்டம்
பாதுகாப்பு வலயம் பயங்கரவாதச்சட்டம்
சனநாயகம் இங்கே தற்கொலையாகிறது
மனிதநேயம் லங்காவில் மரணித்துப்போகிறது

கப்பம், கடத்தல், கொலை தப்பாமல் நடக்கிறது.
இம்மென்றால் சிறை ஏனென்றால் கொலை
இந்தநிலைமாறி இன்னல்கள் நீங்கும் வரை
எங்களுக்கேது இன்பத் தீபாவளி?



# புத்தாண்டே புது வாழ்வு தருவாயா?


புத்தாண்டே எங்களுக்குப் புதுவாழ்வு தருவாயா?
எக்காலும் மக்களுக்கு விடிவே கிடையாதா?
அறுபத்தைந்தாண்டுகள் பட்ட, அவலம் தொலையாதா?
அறுநூறு ஆண்டுகள் ஆனாலும்ஆறுமா?
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
மாண்டவர் நினைவுகள் மனதைவிட் டகலுமா?
முள்ளிவாய்காலில் பட்ட கொடுமை மறக்குமா?
முட்கம்பி வேலிச் சிறை தண்டனை மறக்குமா?
போர் முடிந்த பின்னாலும் புலம் பெயர்ந்தலைகிறோம்.
புத்தாண்டே எங்களுக்குப் புதுவாழ்வு தருவாயா?

எறிகணை வீச்சுகள், கொத்துக் குண்டுகள், வான் தாக்குதல்கள்
எத்தனை விதமாகக் கொன்று குவித்தார்கள்?
உலக நாடுகளையும் சேர்த்து உயிர்க் கொலை செய்தார்கள்.
சாட்சிகள் இன்றியே தமிழரைச் சங்காரஞ் செய்தார்கள்.
கை கால் இழந்தவர்கள் கருகி மாண்டவர்கள்
எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய்ச் செத்தவர்கள்
மார்பில் குடித்த பால் மரணப் பாலாகவே
மாதாவுடன் சேர்ந்து மரணித்த குழந்தைகள்
இந்தத் துயரங்கள் மனதை விட்டு அகலாதா?
புத்தாண்டே தமிழருக்கு புதுவாழ்வு தருவாயா?

மீள்குடியேற்றம் என்று மீண்டுமோர் அகதி வாழ்வு
தகரமும் தறப்பாளுமே சாஸ்வதமாகிப் போச்சு
எங்கள் தமிழ்ப் பூமியெல்லாம் அபகரிக்கப்படுகிறது.
சிங்களக் குடியேற்றம் சிறப்பாய் நடக்கிறது.
பார்க்குமிடமெல்லாம் படைகளின் பிரசன்னம்
படைகளூடே பலிக்கடாவாய் எம் மக்கள்
வீடில்லை வாசலில்லை விழி மூட இடமே இல்லை
கஞ்சிக்கும் வழியில்லை கசக்கிக்கட்ட கந்தலில்லை
இந்தநிலை மாறி எங்கள் இன்னல்கள் தீர்த்திடப்
புத்தாண்டே எங்களுக்கு புது வாழ்வு தருவாயா?

'சர்வதாரி' வந்தது சஞ்சலமே தந்தது
'விரோதி' வந்தது துரோகமே செய்தது
'விகிர்தி' வந்தும் நமக்கு விடிவு கிடைக்கவில்லை
'கர வருடம்' தொடர்ந்து வந்தும் கவலைகள் தீரவில்லை
'நந்தன' வந்தும் நன்மையேதுமில்லை.
'ஜய வருடம் வந்தது ஜெயம் ஏதும் நமக்கில்லை
'மன்மத' வருடம் வந்தா இன்னல் தீரப் போகிறது?

உதயன் (14.04.2015)



# காதல்

## அவள்!

தங்கத் தாமரை போன்ற முகத்தினாள்
தமிழில் இனியதோர் காவிய மானவள்
மஞ்சள் பூசிய மலர்களைப் போன்றவள்
மாங்கை எந்தன் மனதுக் கினியவள்



இன்ப மென்றொரு வீணையை மீட்டியே
இனிய கான மிசைத்திடும் பூங்குயில்
கண்களால் ஒரு காவியம் பாடியே
காதலுக்கொரு கோடு வரைந்தவள்

அன்பினா லொரு பால மமைத்தவள்
அழகினா லெந்தன் ஆவி பறித்தவள்
தென்ற லோடொரு சேதியைச் சொன்னவள்
சின்னவள் எந்தன் சிந்தை கவர்ந்தவள்

பட்டுக் கூந்தலிற் படுக்கை விரித்தவள்
பால் நிலாவினிற் பாட லிசைத்தவள்
தொட்டுத் தொட் டெனைப் பேசி மகிழ்ந்தவள்
சொர்க்க மீதிலோர் தொட்டி லமைத்தவள்

வானில் நீந்திடும் தேனிலா வண்ணமோ
வண்ண மெல்லாம் எனை வம்புக் கிழுக்குமோ
கூனலிளம் பிறை நெற்றியில் வீழ்ந்திடும்
கூந்தலுக் கொரு கோடி கொடுக்கவோ

அழகினுக்கு ஓர் அழகினைத் தந்தவள்
அன்பினால் எந்தன் உள்ளம் கவர்ந்தவள்
மலர்களில் அவள் மல்லிகை போன்றவள்
மாலைத் தென்றலில் மந்திரம் சொன்னவள்

கூனிநின்ற புருவங்கள் மத்தியில்
குற்றி வைத்தொரு பொட்டையு மிட்டனள்
மானின் பார்வை மருண்ட விழியினள்
மங்கை எந்தன் மனதுக் கினியவள்

தேனடா அவள் சிற்றிடை நூலடா
மானடா அவள் மைவிழி மீனடா
வானடா அவள் வண்டமிழ் பாவடா
வைய மீதிலென் வாழ்வின் ஒளியடா.

அள்ளி முகர்ந்திடில் ஆயிரம் பூக்களின்
அமுதவாசனை கூந்தலிலுள்ளவள்
கள்ளி எந்தன் சிந்தை கவர்ந்தவள்
காதலுக்கொரு இலக்கணமானவள்

கண்டு சர்க்கரைப்பாகு மொழியினாள்
காலையில் மலர் தாமரைப் பூவினாள்
அண்டர் மாமுனி தேவர் அமரர்க்கு
அமுதமென்று நான் அளித்திடல் கூடுமோ

வானமண்டலம் போயிட வேண்டுமோ
வைய மீதிலோர் சொர்க்கமமைக்கவோ
காற்றிலேறியோர் கானமிசைக்கவோ
காதற் பெண்ணின் கடைக்கண் அசைவிலே!

# எண்ணத்தின் ஈடு.

மாலைக் கதிரவன் மஞ்சட் கதிரொளி
மண்ணில் தவளும் நல் வேளையிலே
சோலை குளக்கரை ஓரத்திலே – அந்தச்
சுந்தரியாள் தனைக் கண்டு விட்டேன்.

பற்பல நாள் அந்தப் பாவை தனை எந்தன்
பக்கத்து வீட்டிலே பார்த்திருந்தேன்
கட்ட விழாத நல் மொட்டினைப் போலுள்ள
கன்னியின் ஆசையில் திளைத்திருந்தேன்



மானை நிகர்த்த உடலழகும் நறுந்
தேனை நிகர்த்த மொழியழகும்
மீனைப் பழித்த விழியழகும் எந்தன்
ஆவி பறித்ததில் ஐயமுண்டோ?

மின்னல் இடைதனில் வண்ணக் குடமேந்தி
அன்னமென நடையிட்டு வந்த
கன்னல் மொழியினாள் கண்டுவிட்டாளெனைக்
காதல் மொழி பேச வந்துவிட்டாள்

கன்னத்திலாயிரம் முத்தங்களை அவள்
எண்ணிப்பதித்திடும் நேரத்திலே – அங்கு
மின்னித் தெளித்திடும் ஆசைப்புயலுக்கென்
எண்ணத்தை ஈடாக வைத்திடுவேன்!

# வள்ளுவமும் வாழ்க்கையும்

**“காதலிருவர் கருத்தொருமித்து**
**ஆதரவு பட்டதே இன்பம்”**

காமம் இல்லாவிட்டால் வாழ்வில்
காதல் தோன்றாது
கருத்தொருமித்து இணையாவிட்டால்
வாழ்க்கையில் பயனேது

**“இருவர் மடந்தையருக்கென்ன பயன் இன்புண்டாம்**
**ஒருவன் ஒருத்தி நின்”**

இருவர் மடந்தையர் இணைவதென்பது
இல்லற மாகாது
ஒருவன் ஒருத்தி உறவில்லாவிடில்
உலகம் தோன்றாது

**“ஊடுதல் காமத்துக்கின்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்”**

ஊடல் இல்லாக் காதல் உறவு
ஒருபோதும் ருசிக்காது
ஊடிப் பின்பு கூடிக்கலந்தால் அந்த
உறவுக்கு நிகரேது?

கட்டில் ஆடாவிட்டால் வீட்டில்
தொட்டில் ஆடாது
தொட்டில் ஆடாவிட்டால் அங்கே
சொர்க்கம் இருக்காது!

"குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

மழலை அழுகைச் சத்தம் மனதை
மயக்கும் சங்கீதம்
சூலும் யாழும் தோற்கும் தெய்வக்
குழந்தை மழலையிலே!


"வல்லவன் வகுத்ததே வாய்க்கால்
வள்ளுவன் வகுத்ததே வாழ்க்கை"



# நோய்க்கு மருந்து

மின்னலிடை இல்லையென மேலாடை தானசைய
அன்னநடை பின்னிவரும் அவளழகும் - புன்னகையும்
கன்னல் மொழி பேசும் காரிகையின் பூவிதழும்
மன்னனிவன் நோய்க்கு மருந்து

மானோ மயிலோ மங்கையிவள் பூங்கொடியோ!
தேனோ தீம்பாலோ தெவிட்டாத தெள்ளமுதோ!
செம் மாதுளையோ சேல்விழிகள் நீலமோ
அம்மாதுளம் நோய்க்கு மருந்து



பூவிழிகள் காந்தமோ புள்ளி மான் சாயலோ
தாதவிழும் பூவிதழ்கள் தாமரையோ — பூவையிவள்
கைவிரல்கள் காந்தளோ காதலியின் வாயமுதம்
கட்டியவன் நோய்க்கு மருந்து

கார் கூந்தல் மேகமோ கன்னியிவள் சொர்க்கமோ
போர் மதனும் மயங்கி வீழ்வானோ — தாமரையின்
மொட்டு அவிழ்ந்து முகிழ்ந்து வரும் வாசனைதான்
கட்டியவன் நோய்க்கு மருந்து.

குரும்பை முலைகளோ கூனி நின்ற புருவமோ
அரும்பவிழ்ந்த முல்லை தான் அவள் சிரிப்போ — அரம்பையவள்
முக்காட்டில் மறைந்திருக்கும் முழுமதி வதனமோ
அத்தானின் நோய்க்கு மருந்து

கச்சுக்குள் மறைந்திருக்கும் கட்டழகு மொட்டுகளும்
காவியம் பேசும் கன்னி இவள் கண்ணழகும்
இச்சையைத் தூண்டும் இவளின் இடையழகும்
மச்சானின் நோய்க்கு மருந்து.

# நகைச்சுவை

## நடுக்கிணற்றிலே போட்ட கல்லாச்சு!

அடுத்ததொரு தேர்தல் எதிர்வரும்போது
அடிக்கடி வாக்குறுதிகள் மாறும்
"பொடுக்கென" புதிய கட்சிகள் தோன்றும்
'போஸ்டர்கள்' வீதிப் போஸ்ட்' எல்லாம் தொங்கும்.

போத்தல்கள் உடையும் நோட்டுக்கை மாறும்.
காக்காக் கூட்டங்கள் காசெனக் கத்தும்
பண நதி ஓடும் புதுப் பாசங்கள் தோன்றும்
பரவசமான பெருவிழாக் கோலம்

காரில் இருந்து இறங்காத கால்கள்
சேரி, சேரியாய் 'ஓட்டுக்காய்' அலையும்
கட்சித் தாவல்கள் கனதியாய் நடக்கும்
பெட்டி பெட்டியாய் வாக் குறுதிகள் குவியும்!

சண்டைகள் நடக்கும் மண்டைகள் உடையும்
சரமாரியான பிரசார வெடிகள்
பாராளுமன்றக் கதிரைக்காக
படுகொலைக் கலாசாரம் கொடிகட்டிப் பறக்கும்!

அந்நியர் எல்லாம் வீட்டுக்கு வருவர்
புன்னகையோடு கூழைக் கும்பிடு போடுவர்
பந்தம் பிடிப்போர் "பந்தா" ஒருபுறம்
சொந்தம் கொண்டாடுவோர் தொல்லை மறுபுறம்

"அம்மா, ஐயா, அண்ணா, தம்பி"
அடுக்கு மொழியிலே அன்பாய் அழைப்பர்
"எங்கள் அண்ணன் சின்னத்துக்கே
ஊங்கள் வாக்கைப் போடுங்கள் என்பார்

"உங்கள் வாக்கை நீங்கள் போட்டால்
எங்கள் வாக்குத் தவறாதென்பர்"
பாதை திறப்பு, பொருட்தடை நீக்கம்
சம்பள உயர்வு; சமாதானத் தீர்வு

அகதிகள் மறுவாழ்வு உடன் ஐம்பதாயிரம்
மலையகத் தோருக்கு மாதச் சம்பளம்
ஊழல் ஒழிப்பு, ஊடகச் சுதந்திரம்
பத்திரிகைகளில் பார்க்கத் பாந்தமாயிருக்கு!

தொலைக்காட்சிகளிலும் "சோக்காயிருக்கு"
எல்லாம் முடிந்தது எலக்க்ஷன் முடிந்தது
'தம்பி' பெரிய எம்.பி ஆனார்.
பொதுநலம் தொலைந்து சுயநலம் வந்தது.

பேரும் புகழும் பணமும் சேர்ந்தது
காரும் பங்களாவும் கனமாய்ச் சேர்ந்தது.
ஆளும் பெரிய "மந்தி (ரி)" ஆனார்.
கொடுத்திட்ட வாக்கில் தந்திரி ஆனார்!

வாக்கை நம்பி வாக்குப் போட்டோம்
வாக்குகள் வாக்கு மாறிப் போச்சு
சொல்லை நம்பி புள்ளடி இட்டோம்
செல்லாக் காசாய் எல்லாம் போச்சு

எலக்சன் முடிந்த அடுத்த கணமே
எல்லா வாக்கும் இல்லாமற் போச்சு
நம்பிய மக்கள் நம்பிக் கையெல்லாம்
**நடுக்கிணற்றிலே போட்ட கல்லாச்சு!**

# இழுத்துப் போட்டாய் தா(ழ்)ப்பாளை

மாமன் மகளே எந்தன் மரிக்கொழுந்து வாசனையே
மாமி மகளே எந்தன் மல்கோவா மாம்பழமே
அம்மான் மகளே எந்தன் அருங்கவிதை வாசகமே
இம்மானிலத்தில் என்றும் நீயின்றி எனக்கினியார்?
ஓடைக்கரையினிலேநாம் ஓடி விளையாடியதும்
அறியாப்பருவத்திலே அம்மா, அப்பா ஆடியதும்
காக்காய் கடிகடித்துக் கள்ள மாங்காய் தின்றதுவும்
எந்தன் மச்சான் என்ற இனிய நினைவுகளும்
எந்தன் மனதினிலே இன்னும் நினைவிருக்கு!

லெபனானுக்குநான் லேபரராய்ப் போகுமுன்னே
கருக்கலிலே பேசியதும் கட்டி அணைத்ததுவும்
வெண்டைக்காய் விரலை வெடுக்கென்று கடித்ததுவும்
மார்பிலே சாய்ந்து நீ மையலாய்ப் பேசியதும்
எந்தன் உயிரினிலே இன்னும் கலந்திருக்கு
உன்னை நினைத்துத்தான் ஊர் விட்டு நான் போனேன்
கச்சிதமாய் வாழவென்று கடல் கடந்து நான் சென்றேன்
சுற்றத்தை விட்டுவிட்டுத் தூரதேசம் நான் போனேன்
கட்டுவாய் என்று தானே கனதூரம் நான் நடந்தேன்

வெள்ளிக்கிழமை இங்குவந்த வேலாப்போடி மகன் சொன்னான்
மாமி உனக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்திருக்காம்
"இஞ்சினியராம்" பொடியன் "இங்கிலீசு" பேசுறானாம்
கைநிறைய சம்பளமும்,காரும், பங்களாவுடனே,
கனதியான முதுசொமுமாம். "சீர் எதுவும் வேண்டாம்.
சீதனமும் வேண்டாம் சிங்கார நாச்சியாரைத்
தந்தாலே போதுமெண்டு" ஒத்தைக்காலில் நிக்கானாம்

(ஒரு கால் பொய்க்காலோ) சம்மதம் எண்டு நீயும்
சரி சொல்லிப் போட்டாயாம்.
சனிக்கிழமை இங்குவந்த சமதுக்காக்காவும் சொன்னான்.

இஞ்சினியர் எண்டவுடன் இதயத்தைப் பூட்டிவிட்டாய்.
காசு,பணம் கண்டவுடன் காதலை மறந்துவிட்டாய்
அம்மா சென்னவுடன் அத்தானை மறந்துவிட்டாய்.
லேபரர்தானே யெண்டு லேசாய் நினைத்துவிட்டாய்
கூலிக்காரன் எண்டு குப்பையிலே போட்டுவிட்டாய்.
சேதிகேட்டவுடன் சித்தம்மிக நொந்துபோனேன்
துன்பம் மிகக் கொண்டு துயிலிழந்தேன் உன்னாலே
ஒட்டக் கூத்தன் பாடலுக்கு இரட்டைத்தாப்பாள் என்றபடி
எந்தன் காதலுக்கும் இழுத்துப்போட்டாய் தாப்பாளை.



# சட்டை!

கலர்கலராய்ச்சட்டை காந்தி போடாச்சட்டை
கட்டையிலே போகும் இந்தக் கட்டை எனும் சட்டை
காமராசர் என்னும் பெரியார் போட்ட கதர்ச்சட்டை
காலமெல்லாம் உயிர்கள் உலகில் போட்டுக் கழற்றும் சட்டை

காவிச்சட்டை போட்டால் இந்தக்கட்டை ஒருசாமி
காக்கிச்சட்டை போட்டுவிட்டால் அதுவே ஒரு "ஆமி"
கறுப்புச் சட்டை போட்டால் இந்தக்கட்டை "அப்புக்காத்து"
கோர்ட்டில் அவர் பேசுவதோ முழுவதும் பம்மாத்து

ஏமாற்றித் திரிவோனுக்குஎத்தன் என்ற சட்டை
ஏமாந்து போய் விட்டாலோ ஏமாளி என்ற சட்டை
அம்மா, அப்பா, அண்ணா, தம்பி, மாமன், மச்சான் எல்லாம்.
அடுக்கடுக்காய் மனித உயிர் போட்டுக் கழட்டும் சட்டை

பலகலரில் சட்டை பளபளக்கும் சட்டை
பழசாகிப் போச்சு தென்றால் தூக்கி எறியும் சட்டை
உடலென்ற கட்டை உயிருக் கொரு சட்டை
உயிர் பிரிந்து போன பின்னே உருகி எரியும் சட்டை.

ஆண்டி என்றும்,அரசன் என்றும் அகதி,பணக்காரன் என்றும்
பித்தன் என்றும் எத்தன் என்றும் பெரு வியாதிக்காரன் என்றும்
எத்தனையோ சட்டை உயிருக்கீசன் போட்ட சட்டை
"கட்டையிலே போவான்" என்று பாட்டி சொன்ன சட்டை

நாளுக்கு நாள் மாறிப்போகும் நல்ல கலர்ச் சட்டை
நாறிப்போகும் இந்த உடலும் உயிருக்கொரு சட்டை
போடும் வேகத்துக்கேத்தால் போல மாறிப்போகும் சட்டை
பொட்டென்று உயிர் போய் விட்டால் இந்த சட்டை வெறும் கட்டை

பெத்த பெண்ணைத் தந்தால் இந்தக் கட்டை எனக்கு மாமி
பெரிய வீட்டுப் பெண்ணாயிருந்தால் ஐயங்காரு மாமி
ஐயர் வீட்டுப் பெண்ணாயிருந்தால் இந்தக் கட்டை அம்மாமி
அடுத்த வீட்டான் அசடாயிருந்தால் எனக்கு வாய்ச்சுது சாமி

மனிதம் என்ற சட்டையோட்டால் இந்த கட்டை ஒரு மனிதன்
மாறிச்சட்டை போட்டுவிட்டால் அதற்குப் பெயர் மிருகம்
பறவை, மிருகம், மனிதன் என்று பல நிறத்தில் சட்டை
**படுத்து விட்டாலோ இந்தச் சட்டை வெறும் கட்டை!**

**தமிழ்த்தந்தி 30.06.2013**



# எத்தனை மூடக்கொள்கைகள்?

**"எத்தனை மூடக்கொள்கைகள் நமக்கு**
**அத்தனையும் நம் அறியாத்தனங்கள்**
**மூடநம்பிக்கையே மூலதனமாய்**
**அறியாமையிலே அலையுது உலகம்"**

நிலவினில் மனிதன் கால் வைத்த பின்பும்
"சந்திரன் உச்சம், செவ்வாய் பகையாம்
அட்டமத்துச் சனி கெட்டது செய்யும்
எட்டிலை செவ்வாய் கட்டினால் நாசம் (திருமணம்)
ஏழரைச் சனியன் ஆளையே கொல்லும்
அவிட்டத்திலை பெண்பிள்ளை பிறந்தால்
தவிட்டுப்பானையிலும் பொன்னாய் விளையும்
குருட்டுத் தனமாய் குழம்புது உலகம் !

அவிட்டத்திலே பிறந்த அத்தனை பெண்ணுக்கும்
முகட்டைப் பிரித்தா பொன் கொட்டியது?
பரணியில் பிறந்தோர் தரணி ஆண்டார்களா?
ஆண்மூலமெல்லாம் ஆட்சி செய்தார்களா?
பெண்மூலமெல்லாம் நிர்மூலமாச்சா?
குருபகவான் என கும்பிடும் வியாழன்
"கள்ள வியாழன் கழுத்தை அறுக்குமாம்"
பத்திலை வியாழன் பதியை விட்டெழுப்புமாம்

பேரினவாதம் பேயாட்டம் போட்டது
பிஞ்சுகள் முதற்கொண்டு அஞ்சாமற் கொன்றது.
இல்லிடம் தொலைந்து ஏதிலியாகி
அகதிகளாக ஆயிரம் ஆயிரம்
முட்டாள் அரசின் மூர்க்கத்தனமா?
பத்திலை வியாழன் பகையாயிருந்ததா?
அத்தனை பேருக்கும் பத்திலை வியாழனா?
புத்தியில்லாமற் புலம்புதல் சரியா?

சித்திரை மூலமும் எட்டிலை செவ்வாயும்
எத்தனை கன்னியர் வாழ்க்கை அழிந்தது.
சித்திரை மூலம் சித்தினிக்குதவாது
"தொட்டவன் தகப்பன் பொட்டென்று போவான்"
காலம் முடிந்தவள் மாமன் போனால்
"மூலம் தானாம் முடித்தது அவனை"
விதி முடியாமல் சாவு வருமா?
விந்தைதான் இந்த மந்தைகள் புலம்பல்!

**எத்தனை மூடக்கொள்கைகள் நமக்கு?**
**அத்தனையும் நம் அறியாத்தனங்கள்.**

# காறி உமிழ்வோம்

ஒருவனே தேவன் ஒன்றே சாதி
உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பதோ நீதி
அன்றிருந்த தொழில் அத்தனையும் வைத்தே
அளவிலாச் சாதிகள் வந்தன கண்டீர்
எத்தனை தேசத்து மக்கள் உலகினில்
எல்லோரும் மாந்தர் என்றிடுவார்கள்
எம் தமிழ்ப் பூமி மக்களைப் போல (சாதி)
இத்தனை ஆயிரம் கூறுவார் உண்டோ?

ஆதியிலே இருந்த அரச முறைமையால்
சாதியென்ற இந்தச் சாபம் தொடர்ந்தது
பாதியிலே வந்த சாதியென்ற பேய்
வீதியிலே நின்று வெறியாட்டம் போடுது
பள்ளன் பறையன் என்றிடுவார்கள்
பலவித சாகியம் சொல்லி வைப்பார்கள்
மனிதர்கள் என்று நினைப்பதை இந்த
மந்தைகள் மறந்த காரணம் என்ன?

மறையோதுவானைப் பிராமணன் என்பர்
மண்ணை ஆளுவோன் அரச குலமாம்!
வர்த்தகன் செய்வோன் வாணிபன் என்றும்
எத்தனை சாதி இயற்றி வைத்தார்கள்?
கருத்தொருமித்த காதலர் எத்தனை
கடைகெட்ட சாதியால் கருகி மாண்டார்கள்?
ஐந்தறிவுள்ளதில் சாதி இருந்ததா?
ஆறறிவில் மட்டும் ஏனிந்த வேதனை!

பஞ்சமர் என்றும், பாவிகள் என்றும்
பகுத்தறிவின்றிப் புலம்பிடும் மாந்தரே
உயர்ந்தவரென்ன? தாழ்ந்தவரென்ன?
உயிர் போய்விட்டபின் ஒரு பிடி சாம்பல்
தொட்டால் துடக்காம் ஒட்டிக் கொள்ளுமாம்
பட்டால் பாவமாம் பஞ்சமராம் இவர்
மரணம் வந்திவர் மறைந்து போனபின்
மண்ணுக்குள் ஏதடா மதமும் சாதியும்?

தீண்டாமை என்றொரு நெருப்பு நம் நாட்டில்
தியாகம் பற்றி எரித்திடல் கண்டோம்
வேண்டாமே இந்த வெறித்தனமென்று
வீதியிலே நின்று காறி உமிழ்வோம்
தொட்டால் ஒட்டிக் கொள்ளுமாம்
துடக்கென்று சொல்கிறார்
பட்டால் கூடப் பாவம் என்று
தண்ணீர் தொட்டுத் தெளிக்கின்றார்

தோட்டத்திலே கந்தன் மகளைக் கண்டு
தொட்டுத் தழுவிடும் போதினிலே
இவர் சாதியெல்லாம் அவள் அழகினிலே
சங்கமித்தேதான் போனதுவோ?



# ஆச்சி காய்ச்சிய கூழ்!

அருமை ஆச்சி மாணிக்கம் அவதம்பி நாமணியர்
ஆச்சியின்ரை தங்கச்சி ஐயரம்மை நாகம்மா
பெரியாச்சி தங்கம்மா கிட்டனர் அவபுருசன்
சின்னாச்சி இராசம்மா பொன்னப்பா அவகணவர்

பெரிய மாமா தியாகர் நடுவிலார் சண்முகத்தார்
செட்டி குளத்துச் சின்னமாமா சின்ராயர்
குஞ்சம்மா கனகம் கூட மனோன் மணியும்
சித்தப்பாமார் இருவரும் சித்தாத்தைமார் பிள்ளைகளும்

அப்பு, நான், அம்மா அருகே சகோதரங்கள்
பக்கத்து வீட்டுப் பரமு அக்கா பாக்கியமும்
வந்த சொந்தமெல்லாரும் வடிவாய்ப் பிளாண்போட்டு
ஒடியற்கூழ் காய்ச்சுதற்கு ஒன்றாகக் கூடினார்கள்

அண்டா ஒன் றடுப்பிலிட்டு அளவாகத் தண்ணீர்விட்டு
பெருங்கலவாய்த் தலையொண்டு பெருத்த கரும் மசறி மீன்
வடக்கன் ராமசாமி தந்த வாகான கொடுவாய்ஒன்று
நண்டு, கண வாய்க்குஞ்சு நல்ல இறால் இரண்டு கிலோ

மலிவாய்க் கிடைத்ததென்று மசறி முட்டை இரண்டுபாளம்
கீரை, பயற்றங்காய், கிழங்கு மரவள்ளி
பிஞ்சுக் கத்தரிக்காய், பிரண்டை பூசணித்துண்டு
உப்புப்புளி, உறைப்பு உவப்பாய்த் தானிட்டு

மெத்த விசேசமாய்க் கூழ்காச்சி முடித்தார்கள்
கூட இருந்தெல்லாரும் குருத்தோலைப் பிளாப்பிடித்து
வேப்பமர நீழலிலே விதவிதமாய்க் கதைபேசி
கூழ்ப்பானையைச் சுற்றிக் குழுமி இருந்தார்கள்

கள்ளுக்கும் கூழுக்கும் கன பொருத்தம் எண்டு சொல்லி
நாமணியர் அப்பா நாலுதரம் போய் வந்தார்
மூத்தபே ரனுக்குதான் முதலில் விட வேண்டுமென்று (அடம்பிடித்து)
அள்ளிவிட்டார் ஒரு அகப்பை நல்ல பெரும் இறாலுடனே

நண்டின் கால் தான் எந்தன் பிளாவினிலே
வீழுமெண்டு நானிருக்க அந்தோ பரிதாபம்!
அவிந்த பெரும் பல்லி ஒன்று நாலு கால் தான் பரப்பி
நன்றாகத் தோலுரித்து ஊதிப் பெருத்து

**ஒரு பக்கம் தலைசாய்த்து வந்து விழுந்ததையா**
**எந்தன் ஓலைப் பட்டையிலே!**



# நிலவினில் சென்று வாழ்வோம்

"நீல் ஆம்ஸ்ரோங்" என்பார்கால் நிலவினிலே பதித்த பின்னே
நிலவினில் சென்று வாழ நிறையவே ஆசையுண்டு
தரங்கெட்ட இலங்கை மண்ணின் தறுதலை வாழ்வை விட்டு
அம்புலி சென்று வாழ்ந்தால் ஆறுதல் மிகவே யுண்டு!

பூமியில் இருப்பதைப் போல் புலம்பெயர் வாழ்வு இல்லை
முள்ளிவாய்க் கால்களில்லை முட்கம்பிச் சிறைகளில்லை
சர்வாதிகாரமில்லை தனிநபர் ஆட்சியில்லை
குடும்பமே அங்கு ஆட்சி செய்யும் கொடூரம் இல்லை

வேட்டொலிச் சத்தமில்லை வீண் கொலைகள் கட்டமில்லை
வெள்ளை வான் கடத்தல்இல்லை விலைவாசி ஏற்றமில்லை
இனவாதம் பேசிமற்ற இனங்களை அழிப்பார் இல்லை
சிங்கள, பௌத்தம் சிகலஉருமய பொதுபல சேனா என்ற

புல்லர்கள் கூட்டமில்லை மஹிந்த சிந்தனையின் மேன்மை
மதியினில் சிறிதுமின்றி மரணிக்கும் காலம்மட்டும்
மதியினில் சென்று வாழ்வோம் நினைத்திடும் எண்ணம் தன்னை
நிறைவேற்ற வழியுமுண்டா? சிந்தித்துப் பார்ப்பீராயின்

தெள்ளென விளங்கும் உண்மை நிலவுக்குப் போவதற்கு
நிதியுண்டா நம்மிடத்தில் ககனத்தில் பயணம் செய்ய?
காசுண்டா எமது கையில் பாஸ்போட் விசா என்று
பறித்திடவே மாட்டாரா (காசை) கைக்கூலி வாங்கி நம்மை

கதற வைத்திட மாட்டாரா? (நாம்) போகவே எண்ணுமுன்னே
நாசகாரக் கும்பல் தான்போக எண்ணிடாதா?
தன்னாட்சி புரிந்திடாதா?பேரினவாதம் அங்கும்
பேயாட்டம் போட்டிடாதா? அரசியல் அங்கும் வரும்

அடுத்தது எலக்சன் வரும் கட்சிகள் கூட்டு மாறும்
கயவர் தான் ஆட்சி செய்வர் பாராளும் கதிரைக்காகப்
படு பாதகங்கள் செய்வர் எச்சில் இலைக்காக எந்த
ஈனத்தனமும் செய்வர் அடி பிடி சண்டை வரும்

கெடு பிடி யுத்தம் வரும் இனவாதம் மதவாதம்
எல்லாமே தொடர்ந்து வரும் வேட்டொலி கேட்குமையா?
வீணர் தான் ஆட்சி செய்வர் நெறிகெட்டலையும் மாந்தர்
நேர்மையாய் வாழ மாட்டார் மானிடர் மதிக்குப் போயும்


மதிகெட்டுத் தானலைவர் சாதியும் சமயம் பேசிச்
சண்டைகள் தான் பிடிப்பர் நீதி நெறியும் பாரார்
நிம்மதியாக வாழார் கேடுதான் நம்மைச் சூழும்
கேவலம் கெட்டு வாழ்வார் நிலவினில் வாழ்ந்திட்டாலும்

நிறைகுணம் கொள்ள மாட்டார் மதியினில் வாழ்ந்திட்டாலும்
மனிதராய் வாழமாட்டார் அடுத்தது இன்னுமொன்று
சந்திரன் போகுமுன்னே சகலரும் ஒன்று கூடி
கூட்டங்கள் போடவேணும் குழுக்களும் அமைக்க வேணும்!

பேச்சுக்கள் நடத்த வேணும் பிரச்சினைகள் அலச வேண்டும்
கூட்டத்தின் தலைமையாரு?தலைமைப் பதவி கூடச்
சண்டையில் தான் முடியும் சமரசப் பேச்சு இங்கே (இலங்கையில்)
சரிவந்த காலமுண்டா? எங்கள் மனிதக் கூட்டம்

என்றுதான் திருந்தி வாழும்? திருந்தவே மாட்டாரிவர்!
திட்டமாய்ச் சொல்லுகின்றேன் இங்குதான் இருக்க வேண்டும்,
இடர் பட்டுச் சாக வேண்டும், தறிகெட்ட வாழ்வு என்று,
தலையினில் எழுதியாச்சு, மாற்றவா முடியும் மண்ணில்?

**மாண்டு மறையுமட்டும்**
**மரணிப்போம் உண்மை ஆனால்**
**மதியினில் வாழமாட்டோம்!**



# மனிதா நீ யார்?

மனிதா நீ யார்? எத்தனை பேர் நீ?
வயிற்றில் கரு, பிறந்தால் சிசு,
வயதில் சிறுவன், வளர்ந்தால் இளைஞன்,
அன்னையின் பிள்ளை, தந்தையின் மைந்தன்!

மாமனின் மருமகன், மகளின் கணவன்,
தம்பியின் அண்ணர், தங்கையால் மச்சான்,
சித்தப்பன் பெரியப்பன், சிறியவன் பெரியவன்,
சிங்களன், தமிழன், சோனகன், பறங்கி,

யாழ்ப்பாணி , களப்பான் வன்னியான், வடக்கன்
கிறிஸ்தவன், புத்தன், சைவன், முசல்மான்
கந்தன் கபூர், பண்டா பாவிலு,
கள்ளன் கபடன், காமாந்தகாரன்!

பொய்யன் புலயன், புரட்டன் மூடன்,
படித்தவன் பாமரன், பாராளும் வேந்தன்,
புனிதன் பாவி, போக்கிரி முரடன்,
நல்லவன் வல்லவன், காதலன் கணவன்,

உயர்ந்தவன் தாழ்ந்தவன், உத்தமன் வித்தகன்,
வாழ்ந்தால் உடலம், செத்தால் சடலம்,
எத்தனை வேடம், மனிதா உனக்கு,
அத்தனை பேரிலும் மனிதா நீ யார்?
**உண்மையில் மனிதா உலகினில் நீயார்?**

சுடரொளி 23.07.2013

# வரிக்கவிதைகள்.

தெய்வம்,கொடுக்கும்
சாத்தான் கெடுக்கும்

தட்சணை சாமிக்கு
வரதட்சணை, ஆசாமிக்கு

காமம் இல்லாவிட்டால்
காதல் வராது.

கோபம் வந்தால்
பாவம் விளையும்

காதல் முறிந்தால்
சாதல் தானே வரும்

மதி நீ வெல்வது
விதி உன்னை வெல்வது

மண் பயிர் வளரும்
பெண் உயிர் வளரும்

மானம் கெட்டால்
அவமானம் தானே வரும்

தாலி பெண்ணுக்கு வேலி
வேலி உடைந்தால் ஜாலி !

போகி, அளவோடு உண்பவன்
ரோகி, அதிகம் உண்பவன்

தண்ணீர் குடிப்பது
தண்ணி அடிப்பது

தாய் என்னைப் பெற்றவள்
தாரம் எனக்காகப் பெற்றவள்

பெரிய வீடு வாழ
சின்ன வீடு வைத்திருக்க

மாது சூது
இரண்டிலும் போட்ட பணம்
திரும்ப வராது (வரும் ஆனா வராது)

கன்னி வெறிக்கும்
கண்ணி வெடிக்கும்
மாட்டினால் மீட்சியில்லை

சம்சாரம் மின்சாரம்
சொக் அடிக்கும்
தாக்கினால் தப்பேலாது

மாது மயக்கும்
மது வெறிக்கும்

இருமனம் கலந்தால் திருமணம்
திருமணம் கலைந்தால் மறுமணம்

சந்தேகம் வந்தால்
சந்தோசம் போய்விடும்.

உடலுக்கு ஒருபெயர் மெய்
உண்மையில் அது ஒரு பொய்!

# குறும்பாக்கள்.

"மகாகவி உருத்திரமூர்த்தியின்" குறும்பாக்கள் எனது குறும்பாக்களுக்கு முன்னோடி

**சுனா (ஆ)மி**

இருபத்தாறு டிசம்பரில் சுனாமி
இப்போது அழிக்கிறது இலங்கை ஆமி
பேய்கள் அரசு செய்தால்
பிணம் தின்னும் சாத்திரங்கள்
புரிகிறதா! மஹிந்த அப்புஹாமி

**"பாஸ்"**

கொழும்புக்குப் போவதற்குப் பாசு
கொண்டு வந்தான் எங்கள் தம்பி வாசு
"பாஸ்" தொலைந்து போச்சுதென்றதாலே
பத்திரமாய் திரும்பி வாறான் வாசு
நாளை முதல் அவன் செல்லாக்காசு!

**கோழை**

மனதை மயக்கும் அந்தி வேளை
மச்சாளைப் பாத்திருந்தான் காளை
மச்சாளோ அடுத்தவனின்
மடிமேலே சாய்ந்திருந்தாள்
மற்றவனோ செத்துவிட்டான் கோழை

**காதல்**

தாமரைக் குளத்தில் பூத்தது அல்லி
எங்கள் தங்கையவள் கூந்தலிலே மல்லி
காதல் வந்து சேர்ந்ததென்றால்
கண்டவன் பின் சென்றிடுவாள்
நாளை முதல் வேறொருவன் செல்வி

**சாத்தான்**

கள்ளிறக்க மரம் ஏறும் காத்தான்
கன்னிப் பெண்ணைக் கிணற்றடியில் பார்த்தான்
அரை குறை ஆடை தன்னில்
அவள் அழகைக் கண்ட பின்னே
காத்தான் இப்போது ஒரு **சாத்தான்.**

**மாண்டுவிட்ட மனிதம்**

முள்ளி வாய்க்காலில் முடிந்த அவலம்
முட்கம்பி வேலிக்குள் முடக்கம்
மஹிந்த சிந்தனையின் மகிமையின் பெருமையில்
மாண்டுவிட்ட திலங்கையில் மனிதம்!

**தலைவிதிகள்**

நலன்புரி நிலையம் என்ற சிறைகள்
நாலுபக்கம் முட்கம்பி வலைகள்
நிவாரணப் பிச்சைக்காக
நின்று கையேந்துவது
எழுதப்படாத (எம்) தலைவிதிகள்.

பின்னிணைப்பு

# நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் நும் கூற்றுக் குற்றமே!



இடம் : பாண்டிய மன்னன் சபை

மன்னன் : செண்பக பாண்டியன்
நக்கீரன் முதலான புலவர்கள்

பெண் மீது கொண்ட காமத்தாலே பித்துப் பிடித்த மன்னன் நினைத்தான் "பேன் நாறும் கூந்தலுக்கு" மணமுண்டென்று. கன்னியின் மீது கொண்ட காமத்தாலே கருங்கூந்தலுக்கியற்கை மணமுண்டென்றான்: நாலுநாள் தலை முழுகிக் குளிக்காவிட்டால் நாற்றமெடுக்கும் கூந்தலுக்கு வாசமென்றான்.

"மாங்கையர் தம் கூந்தலுக்கு மணமுமுண்டோ
மலர்களினால் வந்த அந்த வாசம்தானே!
வஞ்சியரின் கூந்தலுக்கு வாசமுண்டோ!
வாசனைப் பொருட்களால் வந்த நறுமணமே!
சிந்தையிலே கலக்கமுற்ற பாண்டி மன்னன்
சிறிதேனும் அமைதியின்றி வாடலானான்
நெஞ்சத்திலே புகுந்த ஐயம் தன்னை
நீக்குதற்குப் புலவர் சபை நாடலானான்

## சபை நடுவே பாண்டியன்

“நெஞ்சத்திலே புகுந்த ஐயம் தன்னை நீக்குதற்குப்
புந்தியிலே தெளிவுள்ள எனதருமைப் புலவர்களே
புரியும்படி கவிதை சொன்னால் மகிழ்வேன்
ஐயத்தைத் தீர்க்கும்படி கவிதை சொன்னால்
ஆயிரம் பொற்காசு பரிசு என்றான்”

மானுடப் பெண்களின் கூந்தலுக்கு
இயற்கை மணமேது என்று மனதில் எண்ணி
மதியுள்ள புலவரெல்லாம் வாளாதிருந்தார்

## அந்தவேளை

தரித்திரப் புலவனான தருமி என்பான்
தான் பரிசைப் பெறுவதற்கு எண்ணம் கொண்டான்
பரிசு பெறும் பேராசை தருமிக்குண்டு
பாடல் செய்யும் தத்துவமோ அவனுக்கில்லை.

## மனதிலே கவலை! தருமி சோமசுந்தரப் பெருமானின் கோவில் சென்று இறைஞ்சுகின்றான்.

அரசனின் ஐயம் தீர்க்கும் பாடலொன்றை
ஆண்டவனே தந்தருள வேண்டுமென்றான்
பாண்டியனின் கவலை போக்கும் பாடல் ஒன்றைப்
பகவானே தந்தருள வேண்டுமென்றான்
பரிதாப மிகக் கொண்ட தருமிதானும்
பார்வதியாள் நாயகனை இரந்து நின்றான்

## புலவர் வேடத்தில் பெருமான்

இரக்கம் மிகக் கொண்ட இறைவனாரும்
இறங்கி வந்து ஈய்ந்தாரே பாடலொன்று
பெரும் புலவர் வேடம் கொண்டு பவனி வந்த
பெருமானார் தருமிக்குக் கவிதை தந்தார்.

## தானெழுதாய் பாடலுடன் சபைக்கு வந்த தருமி

அவையிலே புலவரெல்லாம் வீற்றிருந்தார்
அங்கு வந்தான் பாடலுடன் தருமி என்பான்
"அரசனின் ஐயம் தீர்க்கும் பாடலொன்றை
அவைப் புலவீர் கொண்டு வந்தேன் பாருமென்றான்
பரிசுக்குரிய பாடலொன்றைப் பாண்டிமன்னா!
கொண்டு வந்தேன் கேட்பாய்" என்றறிவித்தானே!

## பாடலைச் சொல்லும் படி பணித்தான் மன்னன்

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீ இய நட்பின் மயிலியற்
செறியியற் றரிவை கூந்தலின்
நறியவுமுளதோ நீயறியும் பூவே!"

தானெழுதாப் பாடலைத் தருமி சொன்னான்
தலையசைத்து வர வேற்றார் புலவரெல்லாம்
மன்னனுமோ சிரமசைத்து "மகிழ்ச்சி" என்றான்

"தனி யொருவனாக வந்தென் ஐயம் தீர்த்த
தருமியே என் வாழ்த்துஉனக் குரியதென்றான்
தருமிக்கு ஆயிரம் பொன் கொடுங்கள்" என்று
தானே பரிந்துரைத்தான் மதுரை வேந்தன்.

## தருமி பரிசில் பெறச் செல்லும் போது தலைமைப் புலவன் நக்கீரன் குறுக்கே வந்தான்

"பொறுமன்னா! பாடலிலே குற்றமுண்டு"
பெரும் புலவன் நக்கீரன் எழுந்து நின்றான்
"தவறான பாடலுக்குப் பரிசு என்றால்
தமிழ்ச் சங்கம் ஏற்காது மன்னா!' என்றான்.
பாடலிலே பொருட்குற்றம் இருப்பதாலே
பரிசு பெறும் தகுதி அதற்கில்லை" என்றான்

கவிதையிலே வழு அதனாற் பரிசிலில்லை
கதறி மிக மனம் நொந்தான் தருமி தானும்
பிழையான கவிதை தந்த புலவர் (இறைவண்) மீது
பேராசை யுடை தருமி சீற்றம் கொண்டான்

கோபமிகக் கொண்டதனால் கோவில் சென்று
கூவி அழைக்கின்றான் புலவர் தன்னை
புலவர் வேடத்திலே பெருமான் வந்தார்
புலம்பி அரற்றுகிறான் புலவன் தருமி

"பெரும்புலவா நீதந்த பாடல் தன்னில்
பேதங்கள் இருப்பதினாற் பரிசிலில்லை
கவிதையிலே வழு அதனாற் பரிசிலில்லை
தலைமைப் புலவன்நக் கீரனென்பான்
தவறென்று சொல்லி விட்டான்
உன்பாட்டை" என்றான்.

எழுதிய கவிதையிலே வழுவென்பதால்
இறங்கி வந்தார் இறையவனும் அரசவைக்கே
பெரும் புலவர் வேடம் கொண்ட பெருமானாரும்
பேரவைக்கு இறங்கி வந்து அருளினாரே!

"என் பாடலிலே குற்றம் கண்டோன் யாவன்" என்று
இறைவனுமே மிகக் கோபம் கொண்டு கேட்டார்.
கவிதையிலே பிழை கண்டோன் தானேயென்று
கடிதினிலே எழுந்து நின்றான் புலவன்கீரன்

என்ன பிழை என்பாட்டில் கண்டாய் கீரா
எடுத்தியம்பு இச்சபையில் என்றார் ஈசன்
சொல்லிற் குற்றம் இருந்தாலும் கவலையில்லை
பொருளிலே குற்றம் உண்டு என்றான் கீரன்

"வாசனைத் திரவியங்கள் பூசுவதால் (வந்த)
வாசம் தான் பெண் கூந்தல் மணமதென்றான்
மல்லிகை முல்லைமரிக் கொழுந்து போன்ற
மலர்களைச் சூடுவதால் வந்த வாசம்" (என்றான்.)

நாலுநாள் தலை முழுகி குளிக்காவிட்டால்
நாற்றந்தரும் கூந்தலுக்குமண மில்லை என்றான்
இயற்கையிலே பெண்க ளவர் கூந்தலுக்கு
எக்காலமும் மணமில்லை என்று சொல்லி

ஈரேழு உலகத்துப் பெண்களுக்கும்
இதுவே தான் பொருந்தும் என்றான் புலவன்கீரன்!
உண்மையிலே பெண்களது கூந்தலுக்கு
ஒருபோதும் இயற்கை மணமில்லை என்றான்

உலகேழான பெருமானின் நாயகியாம்
உமையவளுக்கும் அது பொருந்துமென்றான்"
"நக்கீரா நன்றாக எனைப்பார்" என்று
நல்ல பிரான் நெற்றிக்கண் காட்டினாரே!

நெற்றிக் கண் காட்டினாலும் குற்றமென்றான்
நெடு உடலே கண்ணானாலும்பய மில்லை என்றான்
தப்பென்றால் தப்பென்று தானுரைப்பேன்
சரியென்று எக்காலும் சொல்லேன் என்று

என்னரிய தமிழ் மொழியைப் பிழையாய் கூற
இறைவனுக்கும் உரிமை இல்லை என்றான் கீரன்
நுதல் கண்ணைக் காட்டினாலும் குற்றமென்றான்
நும் உடல் முழுதும் கண்ணானாலும் குற்றமென்றான்

முழு உடலும் கண்ணாகக் காட்டித் தேவா
முனிந்தென்னை நீர் எரித்து விட்டாற்கூட
தப்பென்றால் தப்பென்று தானுரைக்கச்
சற்றுமே தயங்கான் இக்கீரன் என்றான்

## இறைவன்

அங்கம் புழுதி பட அரிவாளில் நெய்பூசிப்
பங்கப்பட இரண்டு கால் பரப்பிச் சங்கதினைக்
கீர் கீரென்று அறுக்கும் கீரனோ
என் கவியை ஆராயத்தக்கவன்?

## நக்கீரன் பதில்

சங்கறுப்ப தெங்கள் குலம் சங்கரனாற் கேதுகுலம்?
பங்கம்பட உரைத்தால் பழுதாமோ? — சங்கை
அரிந்துண்டு வாழ்வோம் அரனே நின்போல
இரந்துண்டு வாழ மாட்டோம்

**இறைவன்....**

**நக்கீரா! (நெற்றிக் கண் தீப்பொறியில் நக்கீரன் மறைதல்)**

**(நெற்றிக்கண் வெப்பத்தால் நக்கீரன் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்து அவலப்பட்டான்)**

**கீரா! உன் தமிழோடு விளையாட வந்தேன் என்று பெருமானார் கீரனுக்கிரங்கினாரே**

முற்றும்







# நூலாசிரியர் பற்றி...!



"கந்தபேரின்பம்", "தீவான்" ஆகிய புனை பெயர்களால் வலம் வரும் நண்பன் கந்தசாமி பேரின்பதாசன் அவர்கள் மிக நீண்ட காலமாக என் உளம் கவர்ந்த கள்வன்!


மன்னார் மாவட்டத்தில் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள் மட்டுமல்ல சங்கங்கள், கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்டவிளையாட்டுப் போட்டிகளிலும் நடுவராக,பொறுப்பாளராக கடமையாற்றி நேரமுகாமைத்துவத்தை சிறப்புற அரங்கேற்றம் செய்து தனி முத்திரை பதித்த காரணத்தால் அனைவராலும் P.T மாஸ்ரர் என செல்லமாக அழைக்கப்பட்டவர்.

1974ல் ஆங்கில ஆசிரியராகப் பணியைத் தொடங்கி சுகாதாரம் உடற்கல்வி ஆசிரியராகப் பரிணமித்து பதில் அதிபராகக் கடமையாற்றி ஈற்றில் கடைசி 07 ஆண்டுகள் உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்று 2003ல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

1992ல் என்னால் வடிவமைக்கப்பட்டு நடாத்தப்பட்ட ஆரம்பக்கல்விப் பிரிவுக்கான "சிறுவர்களின் சிறப்பு வேலைத்திட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் கொத்தணியின் சிறுவர் வார நிகழ்விலும் (10 பாடசாலைகள்) 1997ல் மன்னார் வலயப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட (63 பாடசாலைகள்) சிறுவர் வார நிகழ்ச்சித் திட்டத்திலும் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டி, உடற்பயிற்சிக் கண்காட்சிப் போட்டிகளைச் சிறப்பாக நடாத்தி முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களால் விதந்துரைக்கப்பட்ட இச்செயற்றிட்டத்தின் வெற்றிக்குத் தன் பங்களிப்பை நல்கிப் பெருமை சேர்த்தவர். கருங்கண்டல் றோ.க.பா, அடம்பன் ம.ம.வி, அல்–அஸ்ஹர் ம.வி, பிரதேச, மாவட்ட கல்வித்திணைக்களங்களில் இவரது சேவைத்தடம் பரந்து விரிந்துள்ளது.

நெடிதுயர்ந்த தோற்றம், நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, அஞ்சாத நெஞ்சம், உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்கும் பண்பு, கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ச் சொல்வன்மை, புன்முறுவல் பூத்த முகம், இளமை மாறாத உடலின் கம்பீரம், இவற்றின் ஒட்டுமொத்த உருவமே பேரின்பதாசன்!

தனது 30ஆண்டுகால சேவையையும் மன்னார் மாவட்டத்துக்கே வழங்கி இன, மத, மொழி, பேதத்துக்கப்பால் மனிதநேயமிக்கவராக வாழும் ஒரு நல்ல தமிழன்பன். பல்தரப்பட்ட அனுபவங்களை தனது வல்லமை மிகுந்த பேனா முனையில் கொண்டு வந்த பல்கலை சார் அறிஞர். யாப்பிலக்கணத்தையோ, எதுகை மோனைகளையோ சிந்திக்காது தன் உள்ளத்தில் ஊறிய உணர்ச்சிப் பெருக்கினை கரைபுரண்டோடும் ஆற்று வெள்ளம் போல பாயவிட்டுள்ளார். கவிதைகளை ஆழ்ந்து சிந்தித்தால் ஆயிரம் அர்த்தங்கள் புரியும். பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்!



அன்புடன்
கலாபூசணம் அ. அந்தோனிமுத்து
ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்
(ஆரம்பக் கல்வி)
மன்னார்.

ஸ்கை அச்சகம், மன்னார். தொ.பே: 023 2222446.